ஸ்ரீ வாரியார் மஹராஜ்

வேலவன்

நாம் எல்லோரும் தான் மனிதராகப் பிறந்திருக்கிறோம்.

ஆனால், இறைவனால் நமக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த மனிதப் பிறவியின் குறிக்கோள் யாது? அந்தக் குறிக்கோளை அடைவதற்கு இது வரையில் நாம் என்ன செய்திருக்கிறோம்? அல்லது இனி மேல்தான் என்ன செய்யப் போகிறோம்? அந்தக்குறிக்கோளை நோக்கி, இப்போது நாம் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம்? என்பன போன்ற விஷயங்களை கருதிப் பார்ப்பவர்கள், நம்மில் நூறாயிரத்துக்கு ஒருவர் கூட இருக்க மாட்டார்கள்.

அப்படியே கருதிப் பார்த்தாலும், பிறவி எடுத்த பெரும் பயனை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள், கோடிக்கு ஒருவர் கூடக் கிடைக்கமாட்டார்கள்.

அந்த முறையில் பார்க்கும் போது, நமது அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், கோடிக்கு ஒருவர் அல்லர்; பல நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றுகிற பல நூறுகோடிகளுக்கு ஒருவர் அவர்.

''உடம்பினால் பெற்ற பயனாவதெல்லாம், உடம்பினுள் உத்தமனைக் காண்'' என்பது, ஔவையெம் பெருமாட்டியின் அருள் வாக்கு. உத்தமனாகிய இறைவனை நம்முள்ளே கண்டு, அவனோடு நாம் இரண்டறக் கலந்துவிட வேண்டும் . என்பதற்காகவே, நமக்கு இந்த மனிதப்பிறவி அளிக்கப்பட்டிருக்கிறது இந்த உண்மையை நன்கு உணர்ந்து, அந்த உணர்வினின்றும் ஒரு கணமும் வழுவாமல் வாழ்ந்து வருபவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையே ஓர் இடையறாத சிவபூஜை ஆகிவிடுகிறதாம் அத்தகைய ஓர் அகண்ட மஹா பூஜையை ஆற்றி வருகிற ஆன்றோர் ஒருவரை இன்று நம்மிடையே காண முடிகிறது என்றால், அவர் தாம் நமது வாரியார் மஹராஜ் அவர்கள்.

நம்முடைய உயிருக்கு ஜீவன் என்று பெயர். அந்த உயிருக்கும் உயிராகச் சிவபரம் பொருள் ஒளிந்து கொண்டிருக்கிறது. அவ்வாறு ஒளிந்து கொண்டிருக்கும் பரம் பொருளானது, நம் உயிரின் கண்ணே வெளிப்பட்டு விளங்க வேண்டும். அதற்காகத்தான் பூஜைகளும் உபாசனைகளும் ஜெபதபங்களும் செய்யப்படுகின்றன. சிவபரம் பொருள் அப்படி வெளிப்பட்டு விளங்குமானால், அதுகாறும் உயிரினிடத்தே காணப்பட்டு வந்த ஜீவ வாசனைகள் ஒழிந்து, அங்கு சிவ மணம் கமழத் தொடங்கும்.

அரும்பாக இருந்த ஒன்று பூவாக மலர்ந்தவுடன், அதனு

டைய நறுமணத்தால் ஈர்க்கப் பட்டு, எண்டிசைகளிலிருந்தும் அதனை வண்டுகள் வந்து சூழ்ந்து கொள்கின்றன அல்லவா?

அதே போல, ஜீவனுக இருந்த ஒன்று சிவமாக மலர்ச்சி அடையும் போது, அந்தச் சிவமணத்தால் ஈர்க்கப்பட்டு, அனைத்து ஐஸ்வர்யங்களும் அதனைத் தாமாகவே தேடி வந்து சூழ்ந்து கொள்கின்றன என்பதற்கு, இன்று நமக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவர் தவத்திரு. வாரியாரடிகளே ஆவர்.

வாரியார் அவர்கள், மற்ற எவரோடும் ஒடபிட இயலாத ஒரு தனிப் பெரும் புலவர். ஆனல் அவர் பள்ளிக்கூடம் சென்றதில்லை கல்லூரியில் கால் வைத்ததில்லை. பின்னர் அந்தப் புலமை அவருக்கு எங்கிருந்து வந்தது?

அவரைக் கேட்டால், தம் தந்தையிடமிருந்து வந்தது என்று சொல்லுவார். ஆனல் அந்தத் தந்தையே, சில சமயங்களில் இவருடைய புலமையைக் கண்டு பெருவியப்பு அடைந்து, ''இதெல்லாம் உனக்கு யாரப்பா சொல்லிக் கொடுத்தது?'' என்று கேட்டிருக்கிறார் அப்படியானல், அவர் சொல்லிக் கொடுக்கவில்லையென்பது தானே அதன் பொருள்?

நமது தமிழகத்தில் பலலக்ஷாதிபதிகள் இருக்கிறார்கள். கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். ஜமீன்தார்கள் இருக்கிறார்கள். அரசர்கள் இருக்கிறார்கள்.

வாரியாரவர்கள் ஓர் லக்ஷாதிபதி அல்ல கோடீஸ்வரர் அல்ல, ஜமீன்தார் அல்ல, அரசர் அல்ல. இருந்தாலும், அவர்கள் யாருமே செய்யாத அளவுக்கு, இவர் எண்ணற்ற அறப்பணிகளை ஆற்றி வருகிறார். எத்தனையோ பழுதடைந்த ஆலயங்களைப் புதுப்பித்திருக்கிறார். வானளாவும் இராஜகோபுரங்கள் பலவற்றை எழுப்பியிருக்கிறார். பூஜையில்லா திருந்த மூர்த்திகளுக்குப் பூஜைக் கட்டளைகள் ஏற்படுத்தியிருக்கிறார். பாடசாலைகளை நிறுவியிருக்கிறார். பல ஏழைப் பிள்ளைகளைப் படிக்க வைத்திருக்கிறார். பலருக்குத் திருமணமும் செய்து வைத்திருக்கிறார். வறுமையில் வாடும் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் வாரிவாரி வழங்கியிருக்கிறார். இன்றைக்கும், மாதம் ஐந்நூறு ரூபாய்க்கு குறையாமல், வாரியாருடைய பணம் அவர்களுடைய வீடு தேடிப் போகிறது. இப்படிப் பல ஆண்டுகளாக அது போய்க் கொண்டிருக்கிறது. என்றைக்குமே, இல்லையென்று வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல், ஈந்துசிவந்து காய்த்துப் போன கரங்களோடு அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். இப்படியெல்லாம் லக்ஷக்கணக்கில் தான தருமங்கள் செய்வதற்கான பொருள், அவருக்கு எங்கிருந்து கிடைக்கிறது?

அவர் ஏதாவது ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்கிறாரா? அல்லது, தம் வீட்டினுள்ளே ஒரு தங்கச் சுரங்கம் வைத்திருக்கிறாரா?

அதெல்லாம் இல்லை. அவருடைய உபந்யாசங்களின் மூலமாகத்தான் இந்தப் பொருள் எல்லாம் அவருக்குக் கிடைக்கிறது. ஆனல் நம் தமிழகத்தில், இவர் ஒருவர் தானு உபந்யாசகர்? எத்தனையோ உபந்யாசகர்கள் இருக்கிறார்கள். வடமொழியில் வல்ல

மஹா பண்டிதர்கள், தமிழில் பல பட்டங்களைப் பெற்றவர்கள், படாடோபமான ஆங்கிலப் புலமைபடைத்தவர்கள், கவர்ச்சிகரமான சங்கீத ஆற்றலில் மிக்கவர்கள், இப்படிப் பலபேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் இவ்வளவு வருவாய் இருப்பதாகத் தெரியவில்லையே?

எவர் ஒருவர் எதையும் தமக்கென்று வைத்துக் கொள்ளாமல், தம்முடைய 'என்பும் உரியர் பிறர்க்கு' என வாழ்ந்துவருகின்றாரோ, அவரிடத்திலேயே திருமகள் வந்து சரணடைகின்றாள் என்னும் பேருண்மைக்கு, இன்று ஓர் இணையற்ற எடுத்துக்காட்டாக இலங்குபவர் நமது வாரியார் சுவாமிகளேயாவர். இறைவன் ஒருவருக்கு ஐஸ்வர்யத்தை அருள விரும்பினால், அதற்கு முதற்படியாக, அவர்களது உள்ளத்திலே வள்ளல் தன்மையை வளர்த்து விடுகின்றானாம்! அந்த வள்ளல் தன்மையும், ஜீவ வாசனைகள் வலுத்துப் போயிருக்கும் உள்ளங்களிலே சிந்திக்கமாட்டாது. சிவ மணம் கமழும் சித்தத்திலேதான் அது செழித்து வளரும்.

வாரியாரவர்களுக்கு இப்போது அறுபத்து மூன்று வயது ஆகிறது. பொதுவாக, மனிதர்கள் தம் உழைப்பிலிருந்து ஓய்வு பெற்றுவிடுகிற வயது இது. ஆனால் இந்த வயதிலும் அவர் கடுமையாக உழைக்கிறார். நாள் தவறாமல் சொற்பொழிவு ஆற்றுகிறார். பல நாட்களில், நாள் ஒன்றுக்கு இரண்டு சொற்பொழிவுகளை ஆற்றிவிடுகிறார். அலுப்பின்றிப் பல நூறு மைல்கள் பிரயாணம் செய்கிறார். வருகிற கடிதங்களுக்கு எல்லாம் உடனுக்குடன் பதில் எழுதுகிறார். தம்மைப் பார்க்க வருகிற பலதிறப்பட்ட அன்பர்களிடத்தும் இன்முகத்தோடு உரையாடி, அவர்களை மனநிறைவு பெறச்செய்து அனுப்புகிறார். இத்தனைக்கும் இடையில் நிரம்பப் படிக்கிறார். இப்படியெல்லாம் இடையறாது சுறுசுறுப்பாயிருப்பதற்கான சக்தி, அவருக்கு எங்கிருந்து கிடைக்கிறது?

வெறும் வைட்டமின்களாலோ புரொடீன்களாலோ கிடைக்கக் கூடிய ஸ்தூலமான சக்தியல்ல அது. தற்பரதை என்ற ஒரு சூக்ஷ்மமான சக்தி; அது உள்ளத்திற்கும் உள்ளேயிருந்து ஊற்றெடுப்பது; அதற்கு சிரத்தை என்ற இன்னொரு பெயரும் உண்டு; இறைவனுடைய திருவருளாலன்றி, அது எவராலும் அடையப்பட இயலாத ஒன்று; அந்த சக்திதான், திரு. வாரியாரவர்களின் உடலிலும் உள்ளத்திலும் நின்று, இந்த வயதிலும் அவரை ஓர் இளைஞனைப்போல் ஆக்கி இயக்கிக்கொண்டிருக்கிறது.

எனவே கல்லாத அருங்கல்வி, தேடாத பெருஞ்செல்வம், தளராத பேராற்றல் இம்மூன்றும், அவரது இதயத்தினிடத்தே கமழுகின்ற சிவமணத்தின் விளக்கங்களேயன்றி வேறல்ல. அந்தச் சிவ மணத்தால் ஈர்க்கப்பட்டே, அவரைப் பார்க்கவும் கேட்கவும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் வருகிறார்கள். ஒரு காந்த மலையானது தன்னால் ஈர்க்கப்படுகிற இரும்புத் துகள்களிலும் தன் காந்த சக்தியை ஏற்றிவிடுவதுபோல, திரு. வாரியாரவர்கள் தம் உபந்யாசங்களைக் கேட்கவருபவர்களின் உள்ளங்களிலெல்லாம் பக்தியைப் பயிரிட்டுவிடுகிறார். அந்தமுறையில் நம் தமிழக மக்களுக்கு அவர் புரிந்துவருகிற பேருபகாரம் இவ்வளவு அவ்வளவு என்று எவராலும் அளவிட்டுக் கூற இயலாததாய் இருக்கிறது.

இந்த பாரத மண்ணிலே, நாம் என்றென்றும் மறவாமல் நினைவு

கூறத்தக்க பெரியோர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். அந்தப் பெரியோர்களின் வரிசையிலே வைத்துப் போற்றத்தக்க பெருந்தகுதி படைத்தவர் கிருபானந்த வாரியார். வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும், திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்ததாக, சேக்கிழார் கூறுவர். அதேபோல், நாட்டிலே நாஸ்திகப் பூண்டுகளை வேரோடு களைந்தெறிந்து ஆஸ்திகப் பயிரை வளர்ப்பதற்கும், செந்தமிழுக்கும் திருப்புகழுக்கும் புதியதோர் மறுமலர்ச்சி அளிப்பதற்கும், வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதை வையகத்தினர்க்கு வாழ்ந்துகாட்டுவதற்கும், நம்மிடையே வந்து பிறந்திருப்பவர் வாரியாரடிகள். பழந் தமிழ்ப் பண்பாடு என்னும் வேரிலே பழுத்த ஒரு புதிய பலாக் கனியாக அவர் காட்சியளிக்கிறார். அவர் இன்னும் பல நூற்றாண்டுகள் இனிதே வாழ்ந்திருக்குமாறு, எல்லாம் வல்ல வயலூர் முருகப்பெருமானை இறைஞ்சுவோமாக!

ஈசன் செயல்



பகவான்

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

நீ கடவுளைப் பற்றிய பைத்தியம் பிடித்தவனாக இரு. உலகப் பைத்தியத்தால் உனக்கு ஆவதென்ன? கடவுள் பித்தம் உன் தலைக்கு ஏறிவிடுமானால், நீ நிச்சயமாகக் கடவுளை அடைவாய். பிறகு அவர் உருவம் உடையவரா, உருவம் அற்றவரா என்பதெல்லாம் நேரே உனக்கு விளங்கும்.

பரப்பிரமத்தின் சித்சக்தி, உலகத்தில் இராமன் கிருஷ்ணன் போன்ற அவதார மூர்த்திகளாகத் தோன்றுகிறது.

பரம்பொருளை வேண்டுமானால் ஆணாகக் கருதலாம்; அல்லது பெண்ணாகக் கருதலாம்; ஆனால் பால் வேற்றுமையையெல்லாம் அது கடந்தது.

ஈசன் உன்னை உலகில் வைத்துள்ளார் என்று உணர். அவருடைய அருளால் உனது உலக வாழ்க்கை நிகழ்ந்து வருகிறது என்று உணர். அப்பொழுது உனக்கு இடுக்கண் ஒன்றும் வராது. அனைத்தும் ஈசன் செயல் என்பதை நீ சுவானுபவத்தில் அறிவாய்.

ஈசுவரன் வடிவத்தோடு இருக்கின்றாரா? அல்லது வடிவம் அற்றவராக இருக்கிறாரா?

நீ இதைப் பற்றித் துவக்கத்தில் ஒரு தீர்மானமும் செய்ய வேண்டாம். தீவிரமாகக் கொஞ்சம் சாதனங்கள் செய். பிறகு இவ்விஷயம் உனக்கே விளங்கும்.

ஒரே வஸ்துவாகிய பிரம்மத்திடத்து லீலை, நித்தியம் ஆகிய இரண்டு இயல்புகளும் உண்டு.

அடியார்க்கடியான் பகவான். கிருஷ்ண பகவானை ராஜா துரியோதனன் தன் அரண்மனையில் அமுது உண்ண அழைத்தான். ஆனால் பகவானோ அவ்வழைப்புக்கு இணங்காது, பக்தன் விது

ரன் வீட்டுக்குச் சென்று, வெறும் கீரை கலந்த அன்னத்தை தேவாமிர்தத்துக்கு நிகராகக் கருதி ஏற்றார்.

உலகத்தவர் இயற்கையிலுள்ள அழகைக் கண்டு ரசிக்கின்றனர். ஆனால் அதன் சிருஷ்டி கர்த்தாவை அவர்கள் நாடுவதில்லை.

பச்சைக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்க்கிறவனுக்கு, எல்லாம் பச்சை நிறம். பக்தி என்னும் கணணாடி போட்டுக் கொண்டு பார்க்கிறவனுக்கு, எல்லாம் பகவான் சொரூபம். இப்பிரபஞ்சத்தை அவன் ஆனந்த மாளிகை என்கிறான். ஆனந்தமும் பகவானும் ஒன்று.

ஈசனுடைய போக்கை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. பலராமன் கிருஷ்ணனுக்கு உடன் பிறந்தவன். ஆயினும் கிருஷ்ணன் பரமாத்மா என்பதை பலராமனே அறிந்து கொள்ள முடியவில்லை.

தடாகத்தின் கீழ்ப்பகுதியிலிருக்கும் பெரிய மீன்கள், மேல் பரப்புக்கு வருவதில்லை. ஆனால் நல்ல இரைகளை நீரின் மீது இரைத்தால், அம் மீன்கள் மேலே துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவருகின்றன. பக்தியும் பாரமார்த்திகப் பேருணர்வும், பகவானை பக்தன்பால் இழுப்பதற்கு உற்ற உபாயங்கள் ஆகின்றன.

ஒரு சிறு மேகம் சூரியனையே நம் காட்சிக்கு எட்டாது மறைத்து விடுகிறது. அதே விதத்தில் பரம்பொருள் நம்காட்சிக்கு எட்டாதபடி மாயை மறைத்து வைக்கிறது.

பாசி படிந்துள்ள தடாகத்தில், நீந்தி விளையாடும் மீன்களை நாம் பார்க்க முடியாது. அதே விதத்தில், மாயை என்னும் பாசி படிந்துள்ள நம் உள்ளத்தில் விளையாடும் ஈசனை, நாம் காண முடியாது.

ஒரு சர்க்கரைக் குன்று போன்றவர் கடவுள். அக்குன்றினின்று, சிறிய எறும்பு சிறிய சர்க்கரைத் துண்டு ஒன்றை எடுத்துச் செல்லுகிறது பெரிய எறும்பு பெரிய துண்டு ஒன்றை எடுத்துச் செல்லுகிறது. அதனால் சர்க்கரைக் குன்றுக்குக் குறை ஒன்றும் உண்டாவதில்லை இறைவனுடைய மகிமைகளில் ஒருசிறு பகுதி, பக்தர்களைப் பரவசப் படுத்தி விடுகிறது. அவருடைய மகிமை முழுவதையும் பக்தர்களுள் யாருமே அறிந்து கொள்ள முடியாது.

பாம்பின் பல்லில் விஷம் இருக்கிறது. அதனால் பாம்புக்குக் கேடு ஒன்றும் இல்லை. ஆனால் மற்றவர்களைத் தீண்டினால், பாம்பின் பல்லில் உள்ள அவ்விஷம் அவர்களுக்குக் கேடு விளைவிக்கும். அதே விதத்தில், பரமனைச் சார்ந்துள்ள பிரபஞ்சம் அப்பரமனுக்குக் கேடு எதையும் செய்வதில்லை. பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவராகவே அவர் இருக்கிறார். ஆனால், அப்பிரபஞ்சம் ஜீவர்களாகிய நமக்கு, நலமோ கேடோ செய்யக் கூடியதாய் இருக்கிறது.

மனிதன் சில வேளைகளில் உடைபோட்டுக் கொண்டிருக்கிறான். வேறு சில வேளைகளில் உடையில்லாது இருக்கிறான். அதே விதத்தில், பிரம்மம் பல மகிமைகளை உடைய சகுண பிரம்மமாக இருக்கிறது. வேறு

சில வேளைகளில் அம்மகிமைகளையெல்லாம் கடந்து. நிர்க்குணப் பிரம்மமாகவும் இருக்கிறது.

நாஸ்திகனாகவும் ஆஸ்திகனாகவும் மிளிர்பவர் ஈசுவரன். நல்லவனாகவும் கெட்டவனாகவும் மிளிர்பவர் ஈசுவரன். நித்திய வஸ்துவாகவும், அநித்திய வஸ்துவாகவும் மிளிர்பவர் ஈசுவரன். ஜாக்ராவஸ்தையிலும், நித்ராவஸ்தையிலும் மிளிர்பவர் ஈசுவரன். இவையாவுக்கும் அப்பால் இருப்பவர் ஈசுவரன். இதை அனுபூதியில் அறிந்துகொள்கிறவனுக்கு, மனக் குழப்பம் ஏதுமில்லை.

சச்சிதானந்தம் உண்மையில் தன்னைத்தானே ரசிக்கிறது. ராதாகிருஷ்ண வடிவங்கள் இந்தத் தத்துவத்தை விளக்குகின்றன.

வெற்றி தோல்வி மனிதன் கைவசத்தில் இல்லை அதெல்லாம் ஈசன் செயல்.

ஈசனே அனைத்துமாகிறார். கருவியாயிருப்பவரும் அவரே காரணமாயிருப்பவரும் அவரே. மனிதனைக் கருவியாக வைத்துக் கொண்டு, தம் செயலை அவர் செய்து முடிக்கிறார்.

தாயே, உரக்கச் செய்கிற பிரார்த்தனை ஒன்றுக்குத்தானா நீ செவி சாய்க்கிறாய்? உள்ளத்தினுள்ளே எழுகின்ற ஒவ்வோர் உணர்வையும், நீ அறிந்துகொள்கிறாய் அல்லவா?

சர்வேசுவரனைத் திருப்திப்படுத்து. ஜகத் முழுதும் அதில் திருப்தியடைகிறது. திரௌபதி கொடுத்த ஒரு பருக்கையை உண்டு, கண்ணன் பரம திருப்தியடைந்தான். அதனால் உலகம் முழுதும் விலாப்புடைக்க உணவு உண்டது போன்று திருப்தியடைந்தது.

பக்தி வேண்டுமென்று நாம் பண்ணுகின்ற பிரார்த்தனைக்கு, பகவான் செவி சாய்க்கிறாரா?

நூறுதடவை நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். அந்தப் பிரார்த்தனைக்கு அவர் செவி சாய்க்கிறார். ஆனால், உள்ளன்போடும் உருக்கத்தோடும் பிரார்த்தனை பண்ணுபவன் எங்கே?

ஈசுவரன் கல்பதருபோன்றவர். கல்பதருவின் அடியிலிருந்து கொண்டு, நாம் விரும்பியதையெல்லாம் பெறலாம். ஈசனிடத்திருந்தும் விரும்பியதையெல்லாம் பெறலாம்.

ஏழை மாணாக்கன் ஒருவன் யாசகம் பண்ணிப் படித்து, ஒரு நியாயாதிபதியின் உத்யோகத்தைப் பெறுகிறான் 'நான் விரும்பியதைப்பெற்றுவிட்டேன்' என்று அவன் மகிழ்வுற்றிருக்கிறான். அவன் உள்ளத்தினுள் ஈசன் அந்தர்யாமியாக இருந்துகொண்டு, 'ஆம். நீ விரும்பியதைப் பெற்றுள்ளாய்' என்கிறார்.

நியாயாதிபதி வயது முதிர்ந்து, உத்தியோகத்தினின்று விலகி, உபகாரச் சம்பளம் பெற்று வாழ்ந்திருக்கிறான் அப்போது அவன் தனக்குத்தானே. 'நான் வாழ்க்கையில் மேலானது எதையும் சாதிக்கவில்லையே' என்று எண்ணுகிறான். அப்பொழுது அந்தர்யாமியாயிருக்கும் ஈசன், உள்ளத்தினுள். 'ஆம். நீ மேலானது எதையும் சாதிக்கவில்லை' என்கிறார்

வழிப்போக்கன் ஒருவன் நடந்து களைத்துப்போய் ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தான்.

அது கற்பக விருக்ஷம் என்பது அவனுக்குத் தெரியாது.

ஆயாசத்தைப் போக்குதற்கு ஒரு நல்ல படுக்கை கிடைத்தால வசதியாயிருக்கும் என்று எண்ணினான். உடனே நல்ல படுக்கை வந்து விட்டது அதில் அவன் இன்புற்றுப் படுத்திருந்தான்.

தன் கால்களைப் பிடித்து அமுக்கிக் கொடுப்பதற்கு, ஒரு இளம் நங்கை வாய்த்தால் வசதியாயிருக்குமென்று எண்ணினான். அப்படியே இளம் பெண் ஒருத்தி தோன்றி, அப்பணியை ஆற்றிக் கொண்டிருந்தாள்.

பசியால் வாடியிருந்த வழிப்போக்கன், அறுசுவையுடன் நல்ல உண்டி அகப்பட்டால் புசித்து இன்புற்றிருக்கலாம் என்று எண்ணினான். எண்ணியபடி நல்லுணவு வந்து விட்டது அதை உண்டு அவன் பசியாறியிருந்தான்.

"திடீரென்று புலி ஒன்று தோன்றி என்னைத் தாக்கினால், என் கதி என்ன ஆவது?" என்று எண்ணினான். உடனே புலி தோன்றி அவனைக் கொன்று விட்டது.

மானுடா! நீயும் அந்தக் கற்பக விருஷத்துக்கு அடியில் இருக்கிறாய். ஈசன்தான் கற்பக விருக்ஷம், நீ விரும்பியதெல்லாம் கிடைக்கும். பிறகு பிணி, மரணம் என்கிற புலியும் வரும். ஆதலால் எதைக் கேட்பது என்பதைப் பற்றி, எச்சரிக்கையாயிரு பக்தியும் ஞானமும் வேண்டுமென்று கேள். அழிந்து போகிற உலகப் பொருள் எதையும் கேட்காதே

சிவபூஜை



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

நினைக்கும் தன்மையுடையவன் மனிதன். நினைவை வெளிப்படுத்துங் கருவி வாய். உணவுகளை அருந்துகின்ற வாய்க்குப் பெருமை கிடையாது. வாயிருந்தும் விலங்குகளை வாயில்லாத பிராணிகள் என்று கூறுகின்றோம். கருத்துக்களை வெளிப்படுத்தி வசனிக்கும் வாயை உடையவன் மனிதன்.

இந்த உடம்பும் வாக்கும் நமக்குத் தந்தவன் இறைவன். இவைகள் தாமே வந்து அமைவதில்லை. நாமேயும் எடுத்துக் கொள்வதில்லை.

''வாழ்த்த வாயும் நினைக்க
மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த
தலைவன்''

என்கின்றார் அப்பர்.

எனவே, நினைக்க நெஞ்சையும், வசனிக்க வாயையும், இந்த இரண்டையும் தாங்கி நின்று தொழிற்படுகின்ற உடம்பையும் தந்த இறைவனை, நாம் ஒவ்வொருவரும், நன்றி மறவாமையின் பொருட்டு, பூவும் நீரும் கொண்டு பூஜை செய்ய வேண்டும்.

பூ—பூர்த்தி; ஜா—உண்டாக்குவது. மலமாயா கன்மங்களைப் பூர்த்தி செய்து, சிவஞானத்தையுண்டாக்கும் புனிதமான செயல் பூஜா எனபபடும். பூஜா என்ற சொல் பூஜை என வந்தது.

பூஜைக்கு முக்கியமான சாதனங்கள் பூவும் நீருமாகும்.

''புண்ணியஞ் செய்வார்க்குப்
பூவுண்டு நீருண்டு;
அண்ணலும் அதுகண்டு அருள்
செய்யா நிற்கும்''

நல்ல மலர்களைக் கொண்டு இறைவனை நாள்தோறும் அர்ச்சனை செய்யவேண்டும். அதுவே மெய்யும் கையும் பெற்றதற்குப் பயனாகும்.

உலகில் செல்வமும் சீரும் படைத்துச் சிறப்பாக வாழ்கின்ற ஒருவனைக் கண்டபோது, ''இவர் முறபிறபபில் நல்ல பூவெடுத்துப்

பூசை செய்தவர்'' என்றுஇன்றும் கூறுவார்கள்.

தண்ணீரையே சிவலிங்கமாகத் திரட்டி அம்பிகை பூசித்த திருத் தலம் திருவானைக்கா.

விநாயகர் சிவபூசை செய்த திருத்தலம் திருச்செங்காட்டங் குடி. அதனால் அது கணபதீச்சுரம் எனப் பேர் பெற்றது.

சூரசங்காரத்தின் பொருட்டு முருகவேள் படைகள் சூழப் போம் வழியில்,, மண்ணியாற்றங் கரையில சிவபூஜை செய்த இடம் திருச்சேய்ஞலூர்.

சூரசங்காரம் புரிந்து திரும்பிய போது, தென் கடற்கரையில் ஐந்து சிவலிங்கங்கள் வைத்து முருகவேள் பூசித்தனர். அர்ச்சனை செய்யும்போது அமரர் வேண்ட, கையில் உள்ளமலருடன் திரும்பிக் காட்சி கொடுத்த கோலந்தான் திருச்செந்தூர் முருகன் திருவுரு வம். இன்றும் செந்திலாண்டவன் பின்புறம் ஐந்து சிவலிங்கங்கள் இருக்கின்றன. ஆராதனை செய் யும்போது, பின்புறம் கொண்டு போய் ஆராதிக்கின்றதை, இன் றும் திருச்செந்தூரில் காணலாம்.

இப்படி முருகன் வழிபட்ட திருத்தலங்கள் திருமுருகன் பூண்டி, வயலூர் முதலியன பல.

சக்கரம் பெரும்பொருட்டுத் திருமால் நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களால் அர்ச்சித்த னர். அதுவே திருவீழிமிழலை. பிரமதேவர் பூசித்த திருத்தலம் பிரமபுரம். இந்திரன் பூசித்த திருத்தலம் கண்ணார்கோயில்.

நண்டு பூசித்தது; சிலந்தி பூசித் தது; பாம்பு பூசித்தது; அணில் பூசித்தது; காகம் பூசித்தது.

பெரிய உருவமுள்ளது யானை; சிறிய உருவமுள்ளது எறும்பு. எறும்பு முதல் யானையீறாக என்று கூறுவர். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருஎறும்பூர், எறும்பு பூசித்த திருத்தலம். யானை பூசித்த திருத்தலம் திருவா னைக்கா.

எறும்பும் யானையும் பூசித்த இந்தத் தலங்களைக் கண்கூடாகக் கண்டும், மனிதர்கள் இறைவனைப் பூசிக்காமல் உண்டு உடுத்து உலாவி வீணே காலங் கழித்துக் காலன்வாய்ப்படுகின்றனர்.

இவர்களைக் கண்டு வருந்தி அதி வீரராம பாண்டியர் பாடுகிறார்.

''சிவகருமஞ் செய்யார் திரு
நீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி
சாரார்—அவனிதனில்
கான்பரந்த பச்சைக் களாநிழ
லைக் கைதொழுதார்
ஏன் பிறந்தார் மானிடராய்
இன்று''

இறைவனைப் பூசிக்காத புல்லர் களை மனிதர்கள் என்று கூறக் கூடாது. அவன் தந்த கையால் அவனை வழிபட மறுத்தால், நன்றி கொன்ற பாவம் விடாது தானே?

எறும்புகடை யானைதலை ஈச
னைப் பூசித்துப்
பெறுங்கதிகண் டுந்தேறார்
பேய்கள்—அறிந்த
உலகத்தார் உண்டென்ப தில்
லென்பான் வையத்
தலகையாய் வைக்கப்படும்.
—முதுமொழிமேல் வைப்பு

கண்ணபிரான் மகப்பேறு வேண்டி சிவபூஜை செய்தனர்.

அதனுல் பிறந்த மகனுக்கு சாம்ப வான் என்று பெயரிட்டனர்.

அர்ச்சுனன் சதா சிவபூசை செய்தனன். சிலர் கேட்கின்றுர் கள், "எங்கள் வீட்டில் யாரா வது இறந்து விட்டால் அப்போது பூஜை செய்யலாமா?" என்று. அர்ச்சுனன் தன் மகன் அபி மன்யு மாண்ட அன்றிரவு சிவ பூஜை செய்தான் என்று மகாபா ரதம் பேசுகின்றது.

முன்னே செய்த பூஜையின் பயன் இப்போது வந்து உதவுகின் றது. இப்போது பூஜை செய் தால் மறுமைக்கு வந்து உதவும். முன்னே செய்த விளைவு இப் போது உணவுக்கு வருவது போல் என உணர்க. "தொலினே ஜேஸின பூஜா பலமு" என்று தியாகையர் பாடுகின்றுர்.

பழங்காலத்தில், வசிட்டர் பராசரர் முதலிய மகரிஷிகள் அனைவரும், சிவலிங்கம் அமைத்துப் பூசித்தார்கள். அந்த ஆலயங்கள் ஆங்காங்கு இன்றுங் காட்சி தரு கின்றன.

அரசர்கள் சிவலிங்கம் அமைத் துப் பூசித்தார்கள். 'இறைவனைப் பூவும் நீரும் கொண்டு பூசிப்பவர் திருக்கைலாய மலைக்குத் தடை யின்றிச் செல்வார்கள். அவர்கள் பின்னே மெல்ல நானும் போய் விடுவேன்' என்கின்றுர் அப்ப மூர்த்திகள்.

"போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்", பிறவியில் இழிந்தது நாய்ப் பிறவியென்பார்கள். நாயிற் கடையேன் என்பார்கள். இத்த கைய இழிந்த நாய்ப் பிறவி எனக்கு வேண்டும் என்று விரும்பு கின்றுர் ஓர் அன்பர்.

அந்த நாய்ப் பிறவி எப்படிய மைய வேண்டும்? கடைவீதி சுற் றும் அங்காடி நாய்ப் பிறவியன்று. "தினந்தோறும் சிவபூசை செய்து உணவு அருந்தும் அடியார்கள் உண்ட எச்சில் இலையில் உள்ள சேடத்தையுண்ணும் நாயாய்ப் பிறக்கவேண்டும்" என்கின்றுர். இது எதனைக் குறிக்கின்றது? சிவ பூஜையின் சிறப்பைத் தெரிவிக் கின்றது.

"ஈயாப் பெரும்புல்லர்க்கே
இதஞ் சொல்லியிரந் துழல்வேன்
மாயாப் பிறவியறுக்கும் சிவ
பெருமான்பதம் என்(று)
ஓயாமல் பூசைசெய் துண்ணன்
பர் சேடத்தை உண்ணும் ஒரு
நாயாய்ப் பிறந்திலனே அருணை
புரி நாட்டினிலே."

அன்பர்கள் மறவாமல் மனத் தில் அமைத்துக் கொள்ள வேண் டிய கருத்துக்கள் இரண்டு. அவை யெவை? அறவழியில் செலவ ழித்த பொருள் நம்முடையவை. பூஜையில் செலவழித்த நேரம் நம்முடைய நேரம்.

எல்லா நலன்களும் சிவபூஜை யால் ஒருவனுக்குக் கைகூடும். எண்ணிய எண்ணங்கள் யாவும் ஒருங்கு எய்தும். அரிய கருமங் களையும் செய்து முடிக்கலாம்.

உடல் நலம், உளநலம், உணர்வு நலம் ஆகிய அரிய நலன்களும் விளையும்.

உமா தேவியார் இடப் பாகம் பெறுவதன்பொருட்டு, இறைவனைக் கச்சியம்பதியில் வந்து சிவ பூஜை செய்தார் என்ற இனிய வரலாற்றை ஈண்டு சிந்தியுங்கள்.

''எண்ணில் ஆகமம் இயம்பிய
இறைவர் தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யென
வுரைத் தருள
அண்ணலார் தமை அருச்சனை
புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின
பெருந்தவக் கொழுந்து'

மார்க்கண்டேய முனிவர் மறலியை வெல்ல வேண்டித்திருக்கடவூரில் சிவபூஜை செய்தார் என்பது உலகறிந்த உண்மை. சிவமூர்த்தி அவர் செய்த சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு மறலியையுதைத்து, என்றும் பதினாறு ஆண்டாக வாழுமாறு மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்தார். இதைவிடச் சிவ பூஜைக்கு மேலான சான்று என்ன வேண்டும்?

திருமால் வைகுந்தபதியாகத் திருமகளுடன் வாழ்கின்ற பெரு வாழ்வும், பிரமதேவர் படைப்புத் தலைவராக நாமகளுடன் சத்திய வுலகில் தாமரைத் தவிசில் வீற்றிருக்கும் அரும்வாழ்வும், பொன்னுலகில் முப்பத்து முக்கோடி தேவர்கள் புடை சூழ, ஐராவதம் உச்சைச்ரவம், காமதேனு, கற்பக மரம், சிந்தாமணி, ஆகியவைகளுடன் இந்திரன் வாழும் உயர்நலமும் சிவபூஜையால் கிடைத்தன என்பதை உணர்தல் வேண்டும்.

''வண்டுளறுந் தண்டுழாய்
மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்
தேள் இறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் இறு
மாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென்
றுணர்ந்திலையால்.''

ஆகவே மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும், இறைவனுடைய திருவடியைத் தங்கள் தகுதிக்குத் தக்க அளவில் அமைத்து, நல்ல மலர்களை அன்புடன் இட்டு உள்ளங் குழைந்து உருகித் துதி செய்து, நாள்தோறும் பூசிக்க வேண்டும்.

பூஜைக்கு இரு தகுதிகள் வேண்டும். ஒன்று அன்பு, ஒன்று ஆசாரம்.

உம்பர்கள் ஸ்வாமிநமோநம!
எம்பெருமானே நமோநம!
ஒண்டொடி மோகா நமோநம
எனநாளும்
உன்புகழே பாடி நானினி
அன்புடன் ஆசாரபூஜைசெய்
துய்ந்திட வீணாள் படாதருள்
புரிவாயே''
—திருப்புகழ்

❋

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

தயிர், அருகம்புல், பசு முதலிய மங்கள திரவியங்களை தொடுவதும், யுக்தியும் சாஸ்திரமும் முயற்சியும் நேர்மையாக இருத்தலும், அடிக்கடி ஸாதுக்களை தரிசிப்பதும் ஆகிய இவைகள், ஐச்வர்யத்தைக் கொடுக்கின்றவைகள்.

மனச்சோர்வை அடையாமல் முயற்சிப்பது, லாபத்திற்கும் ஐச்வர்யத்திற்கும் மங்களத்திற்கும் மூலமாகிறது. மனச்சோர்வை அடையாமல் முயற்சி செய்பவன் மஹானாகிறான். அளவற்ற சுகத்தையும் அடைகிறான்.

சமர்த்தனாக இருப்பவனுக்கு, எப்பொழுதும் எல்லோர் விஷயத்திலும் பொறுமையுடையவனாய் இருப்பதைக் காட்டிலும் மிக ஐச்வர்யத்தை அளிப்பதும், மிக்க நன்மையைச் செய்வதும், வேறு ஒன்றுமில்லை.

அசக்தன் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். சக்தி உள்ளவன் தர்மத்தின் காரணமாகப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எவனுக்கு அர்த்தமும் அனர்த்தமும் சமமோ, அவனுக்கு எப்பொழுதும் பொறுமை அனுகூலமானது.

ஸகல சுகமும் இருந்தாலும், தர்மார்த்தங்களை விட்டுவிடக் கூடாது. அவற்றைவிடாமல் இருந்தால், அந்த சுகம் தொடர்ந்து கிடைக்கும். மூடர்கள் செய்யும் காரியத்தை செய்யக்கூடாது.

அதாவது "சுகம்தான் இருக்கிறதே, தர்மம் எதற்கு?" என எண்ணி, தர்மத்தைக் கைவிட்டு விடக் கூடாது.

எப்பொழுதும் துக்கத்துடன் இருப்பவர்களிடத்திலும், மதம் கொண்டவர்களிடத்திலும், நாஸ்திகர்களிடத்திலும், சோம்பேறிகளிடத்திலும், அடக்கமில்லாதவர்களிடத்திலும், ஊக்கமில்லாதவர்களிடத்திலும், ஐச்வர்யம் நிற்கிறதில்லை.

நேர்மையுடையவனும், நேர்மையற்ற காரியங்களில் லஜ்ஜையுள்ளவனுமான மனிதனை, துர்ப்புத்தியுள்ளவர்கள் சக்தியில்லாதவனாக நினைத்து அவமதிக்கிறார்கள்.

ரொம்பவும் வெகுளியாக இருப்பவனையும், அதிகமாகக் கொடுப்பவனையும், அதிசூரனையும், ரொம்பவும் நியமத்தை அனுஷ்டிப்பவனையும், தானாகவே தன்னைப் பெரியவனாக நினைத்து கர்வம் கொண்டவனையும், லட்சுமியானவள் பயத்தினால் நெருங்குவதில்லை.

மஹாலட்சுமியானவள் நல்ல குணமுள்ளவர்களிடத்திலும் தங்குவதில்லை. குணமே இல்லாதவர்களிடத்திலும் தங்குவதில்லை. இவள் குணங்களை விரும்புவதில்லை. குணமில்லாவிட்டாலும் பற்றுகிறதில்லை. பித்துப் பிடித்த இவள், கண்ணில்லாத பசுப்போல் ஏதோ ஓர் இடத்திலேயே தங்கி இருக்கிறாள்.

வேதங்கள் கற்றதன் பலன் அக்னி ஹோத்ரமேயாகும். கல்வியைக் கற்றதன் பயன், நல்ல நடத்தையும் நல்ல எண்ணமுமே யாகும். மனைவியை அடைந்ததன் பயன், காம சுகமும் புத்ரனுமேயாகும். பொருள் சம்பாதித்ததன் பயன், தானமும், தான் அனுபவிப்பதுமேயாகும்.

அதர்மத்தால் சம்பாதிக்கப்பட்ட பொருள்களால் எவன் ஒருவன் பரலோகத்திற்கான கர்மங்களைச் செய்கிறானோ, அவன் பரலோகம் சென்று அதன் பயனை அடைவதில்லை. அதற்குக் காரணம், கெட்ட வழியில் அந்தப் பணம் வந்ததேயாகும்.

சத்வ குணமுள்ளவர்களுக்கு, காடுகளிலும், வனத்திலுள்ள செல்லமுடியாத புதர் முதலான இடங்களிலும், கஷ்டமான ஆபத்துக்களிலும், பரபரப்பை உண்டு பண்ணும் காரியங்களிலும், ஆயுதங்கள் ஓங்கப்பட்ட காலங்களிலும் பயமில்லை.

முயற்சி, இந்திரியஜயம், திறமை, ஜாக்ரதையாக இருத்தல், தைரியம், ஞாபக சக்தி, நன்கு ஆலோசித்து ஆரம்பித்தல் இவைகளை, ஐச்வர்யத்துக்கு காரணமென அறியவும்.

தபஸ்விகளுக்குத் தவமே பலம். வேத வித்துக்களுக்கு வேதம் பலம். துஷ்டர்களுக்கு இம்சையானது பலம். நற்குணமுள்ளவர்களுக்கு பொறுமை பலம்.

ஜலம், கிழங்கு, பழம், பால், ஹவிஸ், பிராமணனுடைய அனுமதி, குருவின் சொல், மருந்து ஆகிய இந்த எட்டையும் நற்காரியங்கள் செய்யும்போது உபயோகப்படுத்தினால், அந்தக் கர்மங்களுக்குக் கெடுதி வராதென்க் கருத்து. ஆதலால் தான், யாகம் முதலிய சிறந்த கர்மாக்களில், மகான்களும் ருத்விக்குகளாக இருக்கும்போது பழம், பால் அவிஸ் முதலியவற்றை நடுவில் சாப்பிடுவார்கள். அதனால்

அந்த கர்மங்களுக்குக் குறைவு வராது.

தனக்கு எது கெடுதியோ, அதைப் பிறருக்குச் செய்ய நினைக்கக் கூடாது. இந்திரிய ஜெயததினுல்தான் தர்மம் உண்டாகும். அதர்மமானது காமத்தினுல்தான் உண்டாகிறது.

கோபமின்மையால் கோபத்தை ஜெயிக்க வேண்டும், துஷ்டனை நல் ஒழுக்கத்தால் ஜெயிக்கவேண்டும். லோபியை தானத்தால் ஜெயிக்க வேண்டும். பொய்யை சத்யத்தால் ஜெயிக்க வேண்டும்.

ஸ்திரீகளிடத்திலும், வஞ்சகனிடத்திலும், சோம்பேறியினிடத்திலும, கொடுமையுள்ளவனிடததிலும், தான் ஒருவனே ஆண்பிள்ளை என்ற கர்வம் கொண்டவனிடத்திலும், திருடனிடத்திலும், நன்றி மறந்தவனிடத்திலும், நாஸ்திகனிடத்திலும் நம்பிக்கைவைக்கக் கூடாது.

தினமும் பெரியோர்களையும் தெய்வத்தையும் நமஸ்கரிக்கின றவனுக்கும், நித்யம் பெரியோர்களை சேவிக்கின றவனுக்கும், தானம் முதலியவற்ருல் ஏற்படும் புகழும், ஆயுசும், கல்வியினுல், ஏற்படும் புகழும், சரீர பலமும் ஆகிய இந்த நான்கும் தினந்தோறும் விருத்தியாகும்.

மிகுந்த கஷ்டத்தைத் தரும் கார்யத்தால் எந்தப் பொருள் கிடைக்குமோ, தர்மத்தை மீறுவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ, சத்ருக்களை வணங்குவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ, அப்பொருளை அடைய விரும்பாதீர்.

கல்வியற்ற மனிதன் துக்கிக்கத் தகுந்தவன். குழந்தையற்ற மனைவியின் சேர்க்கை துக்கிக்கத்தகுந்தது. உணவற்ற பிரஜைகள் துக்கிக்கத் தகுந்தவர்கள். அரசனில்லாத நாடு துக்கிக்கத் தகுந்தது.

மனிதர்களுக்கு நடப்பதால் கிழத்தனம் ஏற்படும். மலைகளுக்கு ஜலத்தால் ஜரை ஏற்படும். ஸ்திரீகளுக்கு போகமின்மையால் ஜரை ஏற்படும். மனத்திற்கு கடுஞ்சொல்லால் ஜரை ஏற்படும்.

வேதங்களுக்கு அப்யசிக்காமை களங்கம். பிராம்மணனுக்கு விரதமில்லாமை, களங்கம். பூமிக்கு பாஹ்லீக தேசத்துஜனங்கள் களங்கம. (சிந்து நதியைச் சேர்த்து ஆறு நதிகள் சேருமிடத்திற்கு, பாஹ்லீகம் எனப் பெயர். அங்குள்ள சிலர் தருவதாகச் சொல்லிப் பின்பு கொடுககமாட்டார்கள என, அர்ஜுனமிஸ்ர கிருதடீகையில்கூறப்பட்டுள்ளது) மனிதனுக்கு பொய் களஙகம். பதிவிரதைகளுக்கு ஆடம்பரமாக இருத்தலில் ஆசை களங்கம். ஸ்திரீகளுக்கு பர்த்தா இல்லாமல் வெளி தேசம் செல்வது களங்கம். தங்கத்திற்கு வெள்ளியும் வெள்ளிக்கு ஈயமும், ஈயத்திற்குக் காரீயமும, காரீயத்துக்கு அழுக்கும் களங்கங்களாகும்.

படுப்பதால் தூக்கத்தை ஜெயிக்க முடியாது, காமத்தால் ஸ்திரீகளை ஜெயிக்க முடியாது. விறகினுல் அக்னியை ஜெயிகக முடியாது. குடிப்பதால் கள்ளை ஜெயிக்க முடியாது.

மித்ரனை தானத்தால் ஜெயித்தவனும், சத்ருக்களை யுத்தத்தால் ஜெயித்தவனும், தாரத்தை அன்னபானத்தால் ஜெயித்தவனுமாகியவர்களின் வாழ்வு பயனுள்ளதாகும்.

ஆயிரக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்கின்றனர் நூற்றுக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்கின்றனர். ஓ திருதராஷ்டிரனே, ஆசையை விடும். எப்படியாவது ஜீவிக்காமல் ஒருவருமில்லை.

பூமியில் உள்ள நெல், யவை, பசுக்கள், ஸ்வர்ணம், ஸ்திரீகள் இவை எல்லாம், ஒருவனுக்குப் போதும் என்ற எண்ணம் வராது என்று உணர்ந்தால், அவன் ஆசையின் மோகத்தை அடைய மாட்டான்.

எவன் ஒருவன் சாதுக்களால் பூஜிக்கப்பட்டும், அந்தபூஜையில் பற்றுதல் இல்லாமல் தன் சக்திக்குத் தக்கவாறு கார்யங்களை செய்கிறானோ, அந்த சாதுவைப் புகழ் தானாகவே வந்து அடைகிறது. அவன் விஷயத்தில் சுகம் கிடைக்கும்படி சாதுக்கள் அருள் புரிகின்றனர்.

★

கர்மயோகத்தின் சாரம்

ரிஷிகேசம்

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சிவானந்தர்

கர்மயோகம் என்பது, மனித வர்க்கத்துக்குப் புரியும் தன்னலமற்ற சேவையாகும்.

எத்தகைய பற்றுதலுமின்றி, ஆணவமின்றி, மனித குலத்திற்குப் புரியும் சேவை முககியதத்துவம் வாய்ந்த அம்சமாகும். நீ ஆற்றும் கடமையில் பற்றுக் கொள்ளாதிருத்தலே, கீதையின் முக்கிய போதனையாகும்.

''இடையருது பணியாற்று. உன் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று கீதையில் கண்ணன் கூறுகிருன்.

பிரதிப் பலனையோ, நன் மதிப்பையோ, அன்பளிப்பையோ, புகழுரையையோ எதிர்பார்த்துப் பணி புரியும் நிலையில், மனம் அமைந்துள்ளது. இவைகளை இழந்து மனம் எத்தகைய வினையிலும் ஈடுபடாது.

ஆதலால், பலனில் நாட்டங் கொள்ளாது பணியில் ஈடுபட மனத்திற்குப் பயிற்சி அளிக்க வேண்டியிருக்கிறது. உலக மக்களின் மனமெல்லாம் உலக ஆசைகளாகிய மலங்களில் ஊறிக் கிடப்பதால், நிஷ்காம்ய கர்மயோகத்தின் (பயன் கருதாத் தொண்டின்) அருமை பெருமையினை எளிதிலே உலக மக்கள் புரிந்து கொள்ள முடியாது. சில காலம் தீவிரமாகச் சேவை செய். நிஷ்காம்ய சேவையின் உண்மைப் பொருளைப் பறறிக் கொள்வாய்.

ஒரு கர்மயோகியானவன் பேராசை, காமம், கோபம், ஆணவம் முதலியவற்றினின்று முழுக்க முழுக்க விடுதலை பெற்றிருத்தல் வேண்டும். அதன் பின்னரே, அவன் மக்களுக்கு உண்மையான உபயோகமுள்ள சேவை செய்ய முடியும். குணதோஷங்கள் இருப்பின், அவன் அவைகளை ஒவ்வொன்ருக அகற்ற முயலுதல் வேண்டும்.

கர்மயோகியொருவன் இனிமைப் பண்புகளை உடையவனுய் இருத்தல் வேண்டும். நல்லிணக்கம், கூடிவாழும் பான்மை வேண்டும். அவனுக்கு சகிப்புத் தன்மை, இரக்கம், ஒத்த அன்பு, பரிவு முதலியவை வேண்டும்.

பிறரது பழக்க வழக்கங்களையும் போக்கையும் உணர்ந்து, தனக்குத்தானே சரி செய்து கொள்ளும் மனப்பாங்கு அவ

னுக்கு வேண்டும். எல்லோரையும் அரவணைக்கும் இயல்பும், எதனையும் உள்ளடக்கிக் கொள்ளும் இதயமும், சம நோக்கும் அவனுக்கு வேண்டும். நிலைகுலையாத தெளிவான மனம் வேண்டும். பிறரது நலங்கண்டு பூரிப்புக் கொள்ள வேண்டும். பொறாமை கூடாது. புலன்கள் யாவும் தன் வசம் அடங்கிக் கிடத்தல் வேண்டும்.

அவன் எளிமை நிறைந்த வாழ்வு வாழ வேண்டும். தூற்றுதலையும், அவமதிப்பையும், அவமானத்தையும், கண்டனங்களையும், நிந்தையையும், அபகீர்த்தியையும், அகௌரவத்தையும், கொடுஞ் சொற்களையும், தட்ப வெப்பத்தையும், பிணிகளின் வேதனையையும், அவன் மலர்ச்சியுடன் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். தன்னிடத்தே முழு நம்பிக்கை வேண்டும். ஆண்டவனிடத்தும், மறை நூல்களிடத்தும், குருதேவரின் மொழிகளிடத்தும் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும்.

அத்தகைய மனிதன் ஒருவனே, உண்மையான கர்மயோகியாகத் திகழ்ந்து மெய்யுணர்வு பெற முடியும்.

உலகிற்குத் தொண்டு புரியும் மனிதனே, உண்மையில் தனக்குத் தானே தொண்டு புரிபவனாகிறான். பிறருக்கு உதவி புரிபவன் தனக்கு உதவி புரிந்தவனாகிறான். இது ஓர் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

நீ மற்றவனுக்குத் தொண்டு புரியும்பொழுது, நீ உன் தாய் நாட்டிற்குச் சேவை செய்யும் பொழுது, தொண்டின் மூலம் வாழ, வளர, திருந்த, சீர்பெற, ஆண்டவன் உனக்கு அரியதோர் வாய்ப்பினைத் தந்தருளியதாக, எப்போதும் நெஞ்சிலே நினைத்தல் வேண்டும். அவனுக்குத் தொண்டு புரிய, அவனாலே உனக்கு ஓர் வாய்ப்புக் கிடைத்தமைக்கு, நீ அவனுக்கு மனமார நன்றி செலுத்து. அவனை வாயார வாழ்த்து.

கர்மயோகம் ஒருவன் ஒளி பெற, ஞானம் பெற, மனத்தைப் பக்குவப் படுத்துகிறது; பண்படுத்துகிறது. அது இதயத்தை விரிவாக்கி, ஒருமையுணர்வுக்குக் குறுக்கே நிற்கும் தடை

கள் யாவற்றையும் உடைத்தெறியும் தன்மையுடையது. கர்மயோகம், சித்தசுத்திக்கான பயன் மிக்க சாதனமாகும்.

தன்னலமற்ற சேவை செய்வதன் மூலம், நீ உன் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துகிறாய். ஆணவம், குரோதம், பொறாமை, தன்னை உயர்வாக நினைக்கும் பான்மை, இன்னோரன்ன தீய பண்புகள் யாவும் பறந்தே போகும். பணிவுடைமை, தூய அன்பு, இரக்கச் சிந்தை, சகிப்புத் தன்மை, கருணை முதலிய தூய பண்புகள் முகிழ்க்கும்.

பேத மனப்பான்மை நீர்மூலமாக்கப்படும். தன்னலம் சுட்டெரிக்கப்படும். பாரினில் உள்ளோர் பலரும் போற்றும் வண்ணம், வாழ்வின் பரந்து விரிந்த நோக்கம் துலக்கம் பெறும். நீ ஒற்றுமையுணர்வையும், ஒருமையுணர்வையும் பெறத் தொடங்குவாய். இறுதியாக நீ ஆத்மஞானம் என்னும் பொன் அறிவு பெறுவாய்.

ஒன்றினுள் எல்லாவற்றையும், எல்லாவற்றினுள் ஒன்றையும் நீ உணர்வாய். அவ்வுணர்வு உன்னைக் கங்கு கரையில்லாக் களிப்பிலே ஆழ்த்தும். உலகம் இறைவனின் தோற்றத்தைத் தவிர வேறொன்றில்லை. மக்கட் தொண்டே மகேஸ்வரன் தொண்டு. தொண்டே தொழுகை.

பொதுவாக,மக்கள் பொறுமையிழந்து, சிறிதளவு சேவைசெய்தவுடன் சித்தியை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். இது நிஷ்காம்யகர்மமாகாது.

பணிவோடும், ஆத்மபாவத்தோடும் மக்களுக்குச் சேவை செய்யும் உண்மைக் கர்மயோகியே, உலகையாளும் மன்னர் மன்னனாகிறான்.

அவன் செல்லும்இடமெல்லாம் யாவராலும் போற்றப்படுகிறான், புகழப்படுகிறான். ஆத்ம பாவத்தோடு, நீ உரிய அளவிற்குச் சேவை செய்வதற்கேற்றாற் போன்று, உனக்கும், உரிய அளவிற்கு சக்தியும், ஆற்றலும், திறமையும் கிட்டும். இதைச் செயல்படுத்தி உணர்ந்து கொள்.

ஒரு மனிதன் உயிரிலே பிரிக்க முடியாதபடி, பிறருக்கு நலஞ் செய்யும் எண்ணம் ஊறிவிடுமானால், அவன் மனத்திலே வேறெதனையும் கொள்ள மாட்டான். பிறருக்குத் தொண்டு புரிவதிலே, பிறருக்கு நன்மை செய்வதிலே, அவன் மட்டற்ற மகிழ்ச்சி கொள்வான். மும்முரமான நிஷ்காம்யத் தொண்டிலே, அற்புதமான ஆனந்தமும் அலாதியான மகிழ்ச்சியும் அடங்கிக் கிடக்கின்றன. குறிக்கோளற்ற, தன்னலமற்ற செயல்களைச் செய்வதன் மூலம், அவன் அளவிலா ஆற்றலையும், ஆத்மசக்தியையும் பெறுகிறான்.

நீ பிறருக்குச் சேவை செய்யும் பொழுது, ஒருபோதும் முறு

முறுப்பும் உறுமுதலும் வேண்டாம். சேவை செய்வதிலே உவகை கொள். பிறருக்குச் சேவை செய்ய எப்போதும் தயாராக இரு. சேவை செய்யும் வாய்ப்பினுக்காகக் காத்திரு ஒரு சிறிய வாய்ப்பினையும் தவற விடாதே. வாய்ப்பினை உண்டாக்கிக் கொள். நற்பணியாம் திருப்பணிக்கான சூழ்நிலையையும் உண்டாக்கிக் கொள்.

கர்மயோகப் பயிற்சியில், ஆக்கமோ ஊக்கமோ குன்றுது. அது கடினமானதுமல்ல. வரம்புமீறிய செயலுமல்ல. சிறிதளவு சேவையும், தீமைகளுடன் கூடிய பிறப்பு இறப்பு ஆகியவற்றின் மாபெரும் அச்சத்தினின்று உன்னைக் காப்பாற்றும்.

கர்மயோகப் பாதை இறுதியாக ஆத்மாவின் பேரானந்தப் பெருநிலைக்கு இட்டுச் செல்லும்.

யாகம் செய்வது பாபமா, புண்ணியமா?



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

யஜ்ஞம் என்பது யாகம். வேதத்தில் யஜ்ஞாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பிரயோகங்கள் கல்பஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதத்தில் ஏறக்குறைய 400 வகை யாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பிராம்மணனும் செய்ய வேண்டிய யஜ்ஞங்கள் 21. அவைகளில் பாகயஜ்ஞங்கள் ஏழு போக, பாக்கி உள்ளவை 14. யாகங்களைப் பற்றிய விஷயங்கள் வேதங்களில் நிறையச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்ன கர்மாவுக்கு இன்ன அங்கம், இன்ன கிரமம் என்பவைகளெல்லாம் சொல்லப்பட்டுள்ளன.

ஸோமயாகங்கள் ஏழு. அக்னிஷ்டோமம் முதல் யாகம். அதைச் செய்தவர்கள் ஸோமயாஜிகள். கடைசியில் இருப்பது வாஜபேயம். அதைச் செய்தவர்கள் வாஜபேயர்கள். வடதேசத்தில் பாஜபே என்று அவர்களைச் சொல்லுவார்கள்.

வாஜபேயம் பண்ணினவர்களுக்கு, அவபிருத ஸ்நான காலத்தில் அரசர்கள் சுவேதச் சத்திரம் (அதாவது, வெள்ளைக் குடை) பிடிக்க வேண்டும். திருவாங்கூர், மைசூர், இந்த ராஜ்யங்களில் அவர்களுக்கு சுவேதச் சத்திரம் கொடுத்து வந்தார்கள், ஸோமயாகம் பண்ணும் பொழுது, ஸோமலதைச்சாற்றைப் பிழிந்து ஸோமபானம் செய்வார்கள். ஸோமலதையும் கிருஷ்ணாஜினமும் இப்பொழுது மலையாளத்தில் தான் கிடைக்கின்றன. மற்ற இடங்களில் இல்லை.

நம்பூதிரிகளுள் பத்துக் குடும்பத்தில் ஒருவராவது ஸோமயாகம் பண்ணுகிறார். பிராம்மணனுக்கு இருக்கிற ஸொத்து ஸோமயாகம் செய்வதற்காக ஏற்பட்டது. அவர்களில் மூத்தவன் தான் ஸோமயாகம் செய்யலாம். அவனுக்குத்தான் ஸொத்து உரிமை ஏற்பட்டிருக்கிறது.

ஸோமயாகம் யார் பண்ணினாலும், கொல்லங்கோடு ராஜா

ஸோமலதையும் கிருஷ்ணாஜின மும் கொடுத்து வந்தார். ஸோமலதை ஹிமாலயத்தில் இருக்கிறதென்று ஆயுர்வேதம் சொல்லுகிறது. அக்நிஷ்டோமத்திற்கே ஸோமயாகமென்று ஒரு பெயர் உண்டு.

ஜோதிஷ்டோமம் ஜன்மாவில் ஒரு தடவை பண்ண வேண்டும். மூன்று தலைமுறைகள் வேதாத்தியயனத்தையும் யஜ்ஞத்தையும் விட்டவர்களுக்கு, தௌர்பிராமமண்யம் (அதாவது, பிராம்மணத்துவம் இன்மை) ஏற்படும்.

பரமாத்மாவை அறியப் பிரயத்தனப் படுகிறவர்கள், யஜ்ஞம், உபவாஸம்முதலியவைகளெல்லாவற்றையும் பரமேசுவரப் பிரீதியாகப் பண்ண வேண்டும். மோக்ஷம் பெறுவதற்கு மனது பரிசுத்தமாக வேண்டும். பூர்வ ஜன்மத்தில் யாகங்கள் பண்ணினவன், இந்த ஜன்மத்தில் விவேகத்தைப் பெறுகிறான். யஜ்ஞம், தானம், தபஸ், இவைகளைச் செய்வதனால், சித்தசுத்தி உண்டாகிறது என்று நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

யஜ்ஞம் பண்ணுவது பாபமா? புண்ணியமா? மிச்ரமா? மத்வாச்சாரியார் யாகம்பசுவைக்கொன்று பண்ணக்கூடாது; மாவால் வபையைப் போல பண்ணி ஆஹுதி பண்ணவேண்டும் என்று கருணையால் ஏற்பாடு பண்ணினார்.

வியாஸர் பிரம்மஸூத்திரம் செய்தார். அதில் ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றி உபநிஷத் சொல்வதன் தாத்பரியத்தைச் சொல்லியிருக்கிறார்.

யஜ்ஞப்பிரயோகம் பூர்வமீமாம்ஸையில் இருக்கிறது. ஆதனுடைய பிரயோஜனம் உத்தரமீமாம்ஸையில் இருக்கிறது.

ஆத்மஜ்ஞான அங்கம் யஜ்ஞம். இது அசுத்தமான கர்மாவாக எப்படி ஆகும்? அசுத்தம் என்று நாம் தீர்மானம் பண்ணுவதும், நல்லது கெடுதல் என்று தீர்மானம் பண்ணுவதும் எதனாலே? சாஸ்திரங்களைக் கொண்டு செய்கிறோம். வேதந்தான் பெரிய பிரமாணம். அந்த வேத சப்தமிருப்பதனால் பாபம் இல்லை.

சுத்தம் அசுத்தம் இவைகள் சப்தப் பிரமாணத்தால் அறியப் படுகின்றன. கள் குடிக்காதே என்று வேதம் சொன்னால், அது அசுத்தம் என்று தெரிகிறது. யஜ்ஞம் அசுத்தம் என்பதாக வேத அபிப்பிராயம் இருந்தால், வியாஸர் அதை அங்கமாகச் சொல்லமாட்டார். மத்வாசாரியர் சொல்லுகிறபடி மாவினால் பசு பண்ணினாலும், அதில் பிராணப்பிரதிஷ்டை பண்ணுகிறோம். அப்பொழுது அதற்கும் தோஷம் உண்டாகிறது.

திருக்குறளில் யாகம் நிந்திக்கப் படுகிறதென்று சொல்லுவதுண்டு. பழைய காலத்துப் புஸ்தகம் எழுதினவர்கள் எல்லோரும் வைதிகாநுஷ்டானங்களில் நம்பிக்கை உடையவர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். லோகோபயோகமாக ஒரு கிரந்தம் எழுதினார் திருவள்ளுவர். அவர் நாஸ்திகரல்லர்.

"அவிசொரிந் தாயிரம்
வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை
நன்று"

என்று திருக்குறளில் ஒரு செய்யுள் இருக்கிறது. ஹவிஸை அக்கினி

யில் ஆஹூதிபண்ணி ஆயிரம் யஜ்ஞம் பண்ணுவதைக் காட்டிலும், ஒரு பிராணியை வதைத்து உண்ணமல் இருக்கிறது நல்லதென்பது இதன் அர்த்தம்.

இதனுல்யாகத்தைத் திருவள்ளுவர் நிந்தித்திருக்கிருர் என்று சொல்லுகிருர்கள். ஆயிரம் யஜ்ஞத்தைவிட ஓர் அஸ்வமேத யாகம் செய்வது உயர்ந்தது என்று, மனு ஓரிடத்தில் சொல்லியிருக்கிருர். ஆயிரம் அஸ்வமேதத்தைவிட ஒரு ஸத்யம் உயர்ந்தது என்றும் சொல்லுகிருர். யஜ்ஞம் பாபமாக இருந்தால், ஆயிரம் பாபத்தைக் காட்டிலும் ஒரு புண்ணியம் உத்கிருஷ்டமானது என்று சொல்லுவார்களா?

100 ஏகாதசியிலும் ஒரு சிவராத்திரி உத்கிருஷ்டமானது என்று சொல்லலாம். 100 கசாப்புக்கடைகள் வைத்திருப்பதைக் காட்டிலும் ஒரு சிவராத்திரி உபவாஸம் உத்கிருஷ்டம் என்று சொல்லுவார்களா? புண்ணிய கர்மாக்களுள் இதை விட இது உத்கிருஷ்டமானது என்றுதான் சொல்லுவார்கள்.

வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களைத் தவிர மற்ற இடங்களில் அஹிம்ஸையை அநுஷ்டிக்க வேண்டும். யஜ்ஞம், யுத்தம் முதலிய இடங்களில் ஹிம்ஸை என்று நினைக்கக்கூடாது. யஜ்ஞத்தைவிட அஹிம்ஸை சிரேஷ்டமென்றுல், யஜ்ஞமும் சிரேஷ்டந்தான்; அதைவிட அஹிம்ஸை சிரேஷ்டம் என்றுதான் அர்த்தமாகும்.

100 சாக்கடைகளைவிட ஒரு கங்கை சிறந்தது என்று சொல்லுவது இல்லை. ஆயிரம் காவிரியைவிட ஒரு கங்கை சிறந்தது என்றுதான் சொல்லுவார்கள். அதைப்போல, ஆயிரம் யஜ்ஞங்கள் மிகவும் உயர்வானவை; அவைகளிலும் ஓர் அஹிம்ஸை உயர்வானது என்ற அர்த்தத்தில்தான் அந்தக் குறள் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், இந்தக் குறள் துறவறவியலில் சொல்லப்பட்டிருக்கிறது கிருஹஸ்தன் ஆயிரம் யஜ்ஞங்களைச் செய்வதைக் காட்டிலும், ஸந்யாஸி ஒருபிராணிக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது நல்லது என்ற அபிப்பிராயத்தில், இந்தக் குறளைச் சொல்லியிருக்கிருர் திருவள்ளுவர்.

தேவாரத்திலும் திவ்வியப் பிரபந்தங்களிலும், பிராம்மணர்களைப் பற்றிச் சொல்லுமிடங்களிலெல்லாம், வேதத்திலும் வேள்வியிலும் வல்லவர்களாகவே சொல்லப்படுகிருர்கள்.

"கற்றுங் கெரியோம்பிக்
கலியை வாராமே
செற்ருர் வாழ்தில்லை"

என்று தேவாரம் சொல்லுகிறது.

"பரப்பைப் படுத்தெங்கும்
பசுவேட் டெரியோம்பும்"

என்பது மற்ருெரு தேவாரம்.

பரப்பு என்பது சயனம் ஓமாம்புலியூர்த் தேவாரத்தில், யஜ்ஞங்களைப் பற்றி நிறையச் சொலலப்பட்டிருக்கிறது.

நம்முடைய புத்தியைக் கொண்டு இது நல்லது - இது கெட்டது என்று தீர்மானம் பண்ணுவதைவிட, சாஸ்திரம் சொல்லுவது எதுவோ அதுதான் பிரமாணம் என்று இருக்க வேண்டும். அந்த எண்ணந்தான் பழைய காலத்தில் எல்லோருக்

கும் இருந்தது. வேதத்திலும் தர்மசாஸ்திரத்திலும் சொல்லப் பட்ட அநுஷ்டானங்களை அப் படியே நம்பினார்கள்.

ஆதானம், அக்கினி ஹோத் திரம், தர்ச பூர்ணமாஸம் இவை களுக்குப் பசு கிடையாது. பசு பந்தத்திற்கு முதலில் மட்டும் உண்டு. ஸோமஸம்ஸ்காரத்துக்கு மட்டும் பசு உண்டு.

இந்த மாதிரியாக யஜ்ஞங் களைச் செய்து வரவேண்டியது பிராம்மணன் கடமை. இவைகள் ஸம்ஸ்காரங்களைச் சேர்ந்தவை. இவற்றையன்றி ஆத்ம குணங்கள் எட்டு இருக்கின்றன. அவை தயை, பொறுமை, அஸூயை யின்மை, சௌசம் (அதாவது, தூய்மை), பிடிவாதமின்மை, ஆனந்தமாக இருத்தல், லோப மின்மை, பேராசையின்மை என் பவை.

தர்மஸூத்திரங்களில் இந்த எட்டு ஆத்ம குணங்களும் சொல் லப்பட்டிருக்கின்றன.

○



சதசுலோகி

வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ

**ஆர். முத்துக்கிருஷ்ண
சாஸ்திரிகள்**

பட்டுப் பூச்சி தன்னிடமிருந்து உண்டான நூலகளைக்கொண்டே ஒரு சிறிய கூட்டை நிர்மாணம் செய்துகொண்டு, அதனால் ஆயுள் உள்ளவரை எல்லா வியவஹாரங்களையும் செய்து வருகின்றது. அதுபோல் ஜீவனும் பலவித கர்மாக்களைச் செய்து, அவற்றின் மூலம் ஸ்தூல தேஹத்தைப் பெற்று, அந்த தேஹத்திலேயே இருந்து கொண்டு, அத்துடன் கூடவே இவ்வுலகில் எல்லா காரியங்களையும் செய்து வருகின்றான்.

பட்டுப் பூச்சியின் கூடுபோல் இவ்வுடலும சைதன்யமற்றதாகையால், தானாகச் சலிக்காது. உயிரற்ற உடலில் சலனத்தை நாம் காண்பதில்லை. ஆதலால் அதை சலிக்கும்படி செய்ய ஒருவன் வேண்டும். அவன் தான் ஜீவன்.

தேரைவிட அதை இழுத்துச் செல்லும் குதிரை வேறானது போல், உடலைவிட ஜீவன் வேறு என்றும் ஏற்படுகிறது. அவ்விதமே இந்த ஸ்தூலதேஹம் இல்லாதவரை. ஜீவன் உடலை ஆட்டி வைக்கின்றவன் என்பதையும் நாம் அறிய முடியாது.

ஆதலால், உடலுக்கு சலனம் ஜீவனாலும், ஜீவனுக்கு சாலகத்வம் (உடலை ஆட்டிவைக்குந் தன்மை) உடலாலும் ஏற்படுகின்றன. ஆக இரண்டிற்கும் கூட்டுறவு இருப்பதால், உடலையேபலர் ஆத்மா எனப் பிரமிக்கின்றனர்.

ஏதோ பலரிடம் பிச்சையெடுத்து வயிற்றை வளர்ப்பதற்காக ஒருவன் புலிவேஷம் போட்டுக் கொள்ளுகிறான்.

அதைக்கண்டு, விஷயமறியாத சில சிறுவர்கள் நடுங்குகின்றனர்.

ஆனால் வேஷம் பூண்டவன் உண்மையில் புலியல்ல. ஆதலால் புலிசெய்யும் காரியங்களை, அதாவது மனிதன், பசு, மான் முதலியவற்றை அடித்துத் தின்பது, பயமுறுத்துவது முதலியவற்றை அவன் செய்வதில்லை.

அவ்விதமே, நடிகன் ஒருவன் ஸ்திரீவேஷம் போட்டுக்கொள்கிறான். நாடகம் பார்க்கச் சென்றவர்கள் பலர், அவனை ஸ்திரீ எனக் கருதி மோஹிக்கின்றனர். அவனுக்குப் பல சன்மானங்களையும் அளிக்கின்றனர்.

ஆனால், அந்த நடிகன் தான் ஸ்திரீ அல்ல என்பதை நன்கு உணர்ந்திருப்பதால், ஸ்திரீகளைப் போல் புருஷனுடன் போகங்களை அனுபவிக்க வேண்டுமென்று விரும்புவது இல்லை.

அதுபோல், ஜீவனுக்கு மனிதன் என்றும், பிராமணன் என்றும், பண்டிதன் என்றும், இளைத்தவன் என்றும், கொழுத்தவன் என்றும் பலவித வேஷங்கள் மித்யையான சரீரத்துடன் உள்ள மித்யையான சம்பந்தத்தால் ஏற்பட்டிருக்கின்றன.

அவையெல்லாம் நடிகனுடைய ஸ்திரீ வேஷம்போலும், பிச்சைக்காரனுடைய புலி வேஷம் போலும்தான்.

அதை அறியாத சிலர், ஜீவனை மனிதன், பண்டிதன், பிராம்மணன் என்றவாறெல்லாம் கருதிப் பல வியவஹாரங்களைச் செய்த போதிலும்; சரீரமோ, அதன் நிமித்தமாக ஏற்பட்ட மனுஷ்யத்வம், பிராமணத்வம், பண்டிதத்வம் முதலியவையோ, நமக்கேற்பட்ட வேஷங்களே தவிர உண்மையல்ல என்பதை ஜீவன் நன்குணர்ந்து, அவற்றிற்கேற்றபடி பல காரியங்களையும் அனுஷ்டிக்காமல் இருக்கவேண்டும்.

அதாவது, மித்யையான சரீர தர்மங்களையெல்லாம் தன்னிடம் ஆரோபணம் செய்துகொண்டு, அதனால் ஏற்பட்ட சுகதுக்கங்களை அனுபவிக்காமல் இருக்க வேண்டும்.

ஸாக்ஷீ என்பவன், நடந்த விஷயங்களை அறிவான். ஆனால் அவற்றில் சம்பந்தமற்றவனாக இருப்பான். அதுபோல், ஜீவாத்மா சரீரதர்மங்களை அறிந்தபோதிலும், உண்மையில் அவற்றில் சம்பந்தமற்றவன்.

வயிற்றுவலி, தலைவலி முதலிய பல காரணங்களால் குழந்தை வெகுநேரமாக அழுது கொண்டிருக்கிறது.

அதை சமாதானப்படுத்துவதற்கென்று திராக்ஷைப் பழத்தையோ, பேரீச்சம்பழத்தையோ, மாம்பழத்தையோ, வாழைப்பழத்தையோ அதனதன் உடல் நிலைக்கேற்றபடி தாயார் அக்குழந்தையிடம் கொடுக்கின்றாள்.

அதைத் தின்று அக்குழந்தையும் அச்சமயத்தில் சமாதானமடைகின்றது.

ஆனால், அந்தக் குழந்தையின் அழுகைக்கான வியாதியை மேற்கூறிய பழங்களில் எதுவும் சொஸ்தப்படுத்தாது.

இருந்தாலும், அதற்காகக் கொடுக்கப்படும் மருந்தை குழந்தை உட்கொள்ளவேண்டுமானால், முதலில் குழந்தை அழாமல் இருக்க வேண்டும். அதற்காக மேற்படி பழங்களும் ஒரு விதத்தில் அவசியமாகவே இருக்கின்றன.

அதுபோல், உபநிஷத்தாகிற தாய், கோடிக்கணக்கான ஜீவர்களாகிற குழந்தைகளை நோக்கி, அவரவர்களுக்கேற்றவாறு பல தரப்பட்ட உபதேசங்களைச் செய்திருக்கின்றாள்.

அவை எல்லாவற்றிற்கும் முக்கிய நோக்கம், ஜீவர்கள் அனைவரும் மோக்ஷமடைய வேண்டும் என்பதுதான்.

பல ஜன்மாக்களாக மனத்திற்கு அஜ்ஞான ஸம்ஸ்காரம் மிக திடமாக ஏற்பட்டிருப்பதால், திடீரென்று அதற்கு ஞானத்தை உபதேசித்தால் அது பயன்படாது. ஆதலால், அதற்குத் தகுந்தவாறு கர்மா, பக்தி முதலியவற்றைத் தான் உபதேசிக்க வேண்டும்.

ஒவ்வொருவனுடைய மனதும் ஒவ்வொரு விதமாக இருப்பதால், அதனதன் நிலைமைக்கு ஏற்றவாறு பல உபாயங்களை உபதேசிக்கும் திறமை, ஸர்வஜ்ஞையான உபனிஷத்மாதாவுக்கே உள்ளது. அவ்வாறு உபனிஷத் மாதாவால்

உபதேசிக்கப்படும் உபாயங்கள் எல்லாம், ஜீவர்களின் தாற்காலிகமான விருப்பங்களைப் பூர்த்தி செய்வதுடன், அவர்கள் மோக்ஷத்தைப் பெறுவதற்கும் சாதனமாக ஆகின்றன. இதுதான் உபனிஷத் மாதாவின் உபதேசங்களின் தனிச்சிறப்பு.

உடலில் ஒருவனுக்குப் பிரீதி இருப்பது, அது ஆத்மாவின் போகத்திற்கு ஸாதனமாக இருக்கின்றது என்ற காரணத்தால் அல்லாமல், இயற்கையாக அல்ல.

அதற்கு அடுத்தபடியாக, போக்யவஸ்துக்களுள் மிகவும் முக்கியமான மனைவி, பிரீதிக்கு விஷயமாக ஆகின்றாள்.

பிறகு, இருவருடைய பிரீதியாலும் ஜனித்த பிள்ளை, பிரீதிக்கு விஷயமாக ஆகிறான்.

அதற்குப்பின், அனைவருடைய ஜீவனத்திற்கும் காரணமான பொருளில பிரீதி ஏறபடுகிறது. பிறகு, பொருளைக்கொண்டுவாங்கப்பட்ட வஸ்துக்களில் பிரீதி ஏற்படுகின்றது.

ஆதலால், ஆத்மாதான் இயற்கையாகவே பிரீதிக்கு விஷயமாகின்றது.

ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் செய்தவனுக்கு, பிரஹ்ம ஸ்வரூபம் ஒன்றைத தவிர வேறு எந்த வஸ்துவும் தோன்றாது.

அவன் காயிகமான காரியங்களைச் செய்யுங் காலத்திலும், இந்திரிய வியவகாரங்களைச் செய்யுங் காலத்திலும், உறங்குங் காலத்திலும, ஆத்மஸ்வரூபாநுஸந்தானததுடனேயே இருபபான்.

அது எவ்வாறு என்றால், வெளியில் நடக்குங்காலத்தில், ''ஆத்மாவாகிற சமுத்திரத்தின் அலையாக நான் இருக்கின்றேன்'' எனக் கருதுவான்.'' அலை உள்ளும் புறமும் ஜலமாக இருந்துகொண்டே இங்குமங்கும் சலிக்கும். அதுபோல் ஜீவனாகிய நானும், உடலுடன் கூடி இங்குமங்கும் சலிப்பவன் போல் தோன்றினாலும், உண்மையில் பிரஹ்ம ஸ்வரூபமாக இருக்கின்றேன்'' என பாவனை செய்வான். எதையும் செய்யாமல் ஆஸனத்தில் வீற்றிருக்கும் பொழுதும், பிரஹ்மம் என்ற கயிற்றால் கோக்கப்பட்ட ஜீவனாகிற மணி என்று தன்னை பாவித்துக் கொள்ளுவான்.

''கயிற்றில் மணிகணங்கள் போல்என்னிடம் இவ்வுலகம் முழுவதும் கோக்கப்பட்டிருக்கிறது'' என்று கீதாசார்யனும் அருளிச் செய்திருக்கிறார்.

உலகில் ஆத்மா ஒன்றே ஞானமயம். இந்திரியங்களால் விஷயங்கள் அறியப்படும்பொழுதும், ஆத்மாவின் ஒளியே பிரகாசிக்கின்றது என்று வேதாந்திகளின் முடிபு. ஆதலால், அக்காலத்தில் ஆத்மஸ்வரூபமே பார்க்கப்பட்டது என அந்தர்முகன் கருதுவான்.

ஸுஷுப்தியிலிருந்து எழுந்திருந்தவுடன், ''ஆனந்த ஸமுத்திரத்தில் மூழ்கினவனாக இருந்தேன்'' எனக் கருதுவான். இவ்வாறு ஆயுள்காலம் முழுவதும் எவனுக்கு ஆத்மாநுபவத்துடனேயே செல்லுகின்றதோ, அவன் அந்தர்முகன் எனக் கருதப் படுவான்.

ஸ்ரீ ஜகன்மாதாவின் திருமணம்

ஸ்ரீவித்யாமார்த்தாண்ட பிரம்மஸ்ரீ

C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

காமேஸ்வரனை, மணந்து சக்ரவர்த்தினியாக விளங்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்த பிரம்மாவின் மொழிகளைக் கேட்டு, அம்பிகை மந்தகாசம் செய்தாள்.

மும்மூர்த்திகளைப் பார்த்து அவள் கூறினாள் :

''தேவர்களே! நான் யாருக்கும் கட்டுப்படாதவள். என் விருப்பம்போல் எதையும் செய்பவள். என்னை அனுசரிப்பவன் தான் எனக்குக் கணவனாக வரத் தகுந்தவன்''

இவ்விதம் தேவி கூறினதைக் கேட்டு, தர்மம், அர்த்தம் முதலியவற்றோடு கூடிய வார்த்தைகளை பிரம்மா பேசினார் :

''சமயத்திற்காக வாங்குபவள் (காலக்ரீதா), விலை கொடுத்து வாங்குபவள் (க்ரயக்ரீதா), பிதாவால் கொடுக்கப்பட்டவள் (பித்ருதத்தா), தன் இஷ்டப்படி பர்த்தாவைத் தேர்ந்தெடுப்பவள் (ஸ்வயம்யுதா) என நான்குவிதமாக ஆண்பெண் விவாகம் கூறப்பட்டிருக்கிறது

''சமயத்திற்காக வாங்கப்பட்டவள் வேசி எனப்படுவாள். விலை கொடுத்து வாங்கப்படுபவள் தாஸி ஆவாள். பிதாவால் கன்னியாதானம் செய்துகொடுக்கப்படுபவள் பாரியை. தானாகவே தேர்ந்தெடுக்கும் விவாஹம் காந்தர்வம். சமான தர்மத்தோடு கூடியவள் பிதாவால் கொடுக்கப்பட்டவளுக்கு நிகரானவள்.''

மறுபடியும் பிரம்மா முதலான தேவர்கள், பரப்பிரம்ம ஸ்வரூபிணியான தேவியைப் பார்த்துக் கூறலானார்கள் :

''சத்து, அசத்து என்ற பேதமற்றதாயும், இரண்டில்லாததாயும், சிரேஷ்டமாயும், சிதானந்தாத்மகமாயும் இருக்கும் பிரம்மத்திலிருந்து பிரகிருதி தோன்றியது. அந்த பிரம்மமும் பிரகிருதியும் நீயே! நீதான் ஆதியில்லாதவள். எல்லாமாக இருப்பவள். காரணமும், அகாரணமும் நீயே! ஸனகாதி மகரிஷிகள் உன்னைத்தான் தேடுகின்றார்கள்.

''சத்து. அசத்து என்னும் இருகர்மாக்களின் வடிவமாகவும்; வியக்தம், அவ்யக்தம் என்னும் இருவிதமான ஆவிர்ப்பாவங்களை அடைபவளாகவும் இருக்கும் உன்னை, பஞ்ச பிரம்ம ஸ்வரூபிணியாகக் கொண்டாடுகின்றார்கள்.

நீயே உலகைப் படைத்து, காத்து அழிக்கின்றாய். ஆகையால், நீ பர்த்தாவை அடைவதால் உன் கட்டுப்பாடில்லாத தன்மை உன்னைவிட்டுப் போகாது. எனவே உலகைக் காப்பதற்காக நீ ஓர் புருஷனை அடையவேண்டும்!''

இவ்விதம் மும்மூர்த்திகளால் வேண்டப்பட்ட தேவி, தன் கையால் ஒரு மாலையைச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்தாள். அந்த மாலையானது, ஆகாயத்தைச் சோபிக்கச் செய்து கொண்டு காமேஸ்வரனின் கழுத்தில் வந்து விழுந்தது. அதைக் கண்ட தேவர்கள் களிப்படைந்தனர். இந்திரனின் கட்டளையால் மேகங்கள் மலர்மாரி பொழிந்தன,

பிறகு பிரம்மா விஷ்ணுவைப் பார்த்து, ''இவர்களுக்கு இப்போதே முறையாகத் திருமணத்தை நடத்திவைக்க வேண்டும். உலகினுக்கே மங்களத்தைக் கொடுக்கக்கூடியதான சுபமுகூர்த்தம் இப்போதே நிகழ்கின்றது. இந்த தேவியும் உம்முடைய வடிவம்தான். மேலும் இவள் உமது தங்கையும் ஆவாள். ஆகையால், நீர் இந்தக் காமேஸ்வரனுக்கு உமது தங்கை காமேஸ்வரியை விவாகம் செய்து கொடுக்கவேண்டும்!'' எனப் பிரார்த்தித்துக் கொண்டார்.

இதைக் கேட்டு, தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், கந்தர்வர்கள், அப்சரஸ்கள் ஆகிய அனைவரின் முன்னிலையிலும், காமேஸ்வரனுக்கும், காமேஸ்வரிக்கும் பகவான் விஷ்ணு சந்தோஷமாகக் கல்யாணம் செய்து வைத்தார்.

பின்னர், பிரம்மா முதலான தேவர்கள் இந்த தம்பதிகளுக்குப் பல பரிசுகளை வழங்கினர். வஜ்ரம்போல் கடினமானதும், அழிவில்லாததுமான கரும்பு வில்லைப் பிரம்மா பரிசளித்தார். வாடாத புஷ்பபாணங்களை விஷ்ணுவும், நாகபாசத்தை வருணனும், அங்குசத்தை விசுவகர்மாவும், கிரீடத்தை அக்கினியும், இரு தாடங்கங்களைச் சந்திர சூர்யர்களும் அளித்தனர்.

சமுத்திரம் நவரத்தினமயமான பல ஆபரணங்களை அளித்தது. என்றும் குறைவுறாத ஒரு மது பாத்திரத்தை, இந்திரன் பரிசாகக் கொடுத்தான்.

குபேரன் சிந்தாமணி மாலையையும், விஷ்ணு சக்கரவர்த்தித் தன்மையைக்காட்டும் குடையையும், கங்கை யமுனை என்னும் நதிகள் இரண்டு சாமரங்களையும் அளித்தனர். பிரம்மா, வஸுக்கள், ருத்திரர்கள், சூரியர்கள், திக்பாலகர்கள், மருத்துகள், கந்தவர்கள் முதலிய எல்லோரும் தங்கள் தங்களுடைய ஆயுதங்களையும், அந்த திவ்யதம்பதிகளுக்குப் பரிசாக அளித்தனர்.

மேலும் ரதங்களும், பசி தாகம், பிணிகளற்ற சக்தி வாய்ந்த குதிரைகளும், யானைக

ளும், விசேஷமான பல ஆயுதங்களும் அவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்டன.

பிறகு சாம்ராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார்கள். குசுமாகரம் என்னும் விமானம் ஒன்றை பிரம்மா கொடுத்தார். இவ்விமானம் இஷ்டம்போல் எங்கும் தங்கு தடையின்றிச் செல்லக் கூடியது. வாடாத மாலையை உடையது. எந்த ஆயுதங்களாலும் பிளக்கமுடியாதது. இந்த மாலையின் வாசனைபட்டால் பசி, பிணி, தாகம் முதீலானவை ஏற்படா.

இத்தகைய சிறப்புப் பொருந்தியவிமானத்தில், சாமரம், விசிறி, த்வஜம் முதலியவற்றோடும், வீணை, வேணு, மிருதங்கம் போன்ற விசேஷ வாத்தியங்களோடும், தேவர்களுடனும், அரசகிருகத்திலிருந்து கிளம்பி, தங்கள் தேக காந்தி எங்கும் ஜொலிக்க, காமேஸ்வரனும் காமேஸ்வரியும் திருவீதியை வலம் வந்தார்கள். அப்போது, உப்பரிகைகளில் இருக்கும் பல அப்சரஸ்திரீளாலும், மற்றை தேவமாதர்களாலும் பொரி, அட்சதை முதலியன வர்ஷிக்கப்பட்டன.

★

எடுத்த காரியம் இனிது நிறைவேற!

பிரச்னை

"'அருள் பத்திரிகையின் 15–5–70 இதழில், எந்த முயற்சியையும், அதன் வெற்றி தோல்விகளைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், நாம் சிரத்தையோடு செய்து முடிக்க வேண்டும். அப்படிச் செய்து முடித்தால், நாம் செய்து முடித்துவிட்டோம் என்ற மனநிறைவே, நாம்எதிர்பார்த்த வெற்றியைத் தவறாமல் தந்து விடுகிறது!' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

"ஒரு காரியத்தைச் செய்து முடித்த பிறகு அதனால் நாம் எதிர்பார்த்த நற்பலனை அடைவதற்கு, தாங்கள் கூறியிருக்கும் உபாயம் சரியானதாக இருக்கலாம். ஆனால், அந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கே இயலாதபடி இடையூறுகள் நேர்ந்து விட்டால் என்ன செய்வது? எடுத்த காரியங்கள் இடையூறு இன்றி இனிது நிறைவேறுவதற்கு, தாங்கள் ஏதேனும் ஓர் உபாயம் கூற முடியுமா?"— என்று கேட்டிருக்கிறார் ஓர் அன்பர்.

ஆலோசனை

இது ஒரு நியாயமான கேள்வியே! ஒரு காரியம் இடையூறு இன்றி இனிது நிறைவேற வேண்டுமானால், அதற்கு இறைவனின் திருவருள் முன்னிற்க வேண்டும்.

இறைவனின் திருவருளிலே பல அம்சங்கள் உண்டு. அவற்றுள், அடியார்களின் இடையூறுகளைப் போக்குகின்ற அமசமும் ஒன்று.

அந்த அம்சத்தினை, வெவ்வேறு சமயத்தினர் வெவ்வேறு பெயர்களால் அழைப்பார்கள். சைவர்களும் மற்றைப் பெரும்பாலான இந்துக்களும், அதனை விக்னேஸ்வரர் என்ற பெயரால் அழைப்பார்கள்.

எல்லாம் இறைவன் செயல் என்னும் உணர்வின்றி, "நான் அதைச் செய்வேன்! இதைச் செய்யேன்!" என்னும் தன் முனைப்போடு செயல்படுபவர்களுக்கு, அந்தத் தன் முனைப்பு அழிந்து அவர்கள் நலம் பெறுமாறு விக்கினங்களைத் தோற்றுவிப்பவர் விக்கினேஸ்வரர்.

அதே சமயத்தில், சிறிதும் தன் முனைப்பு இன்றி, "இறைவா! எல்லாம் உன் திருவுளப்படியே நடக்கட்டும்!" என்ற சரணாகதி மனப்பான்மையோடு செயல்படுபவர்களுக்கு, யாதொரு விக்கின

மும் நேராமல் காப்பாற்றுபவரும் அதே விக்கினேஸ்வரர்தான்.

அந்த விக்கினேஸ்வரர் மீது எட்டுப் பாடல்களைக் கொண்ட காரிய சித்தி மாலை என ஒன்று இருக்கிறது. அப்பாடல்களைப் பாராயணம் செய்வோர் அடையும் பயன்கள், மேற்கொண்டு இரண்டு செய்யுட்களில் கூறப்பட்டுள்ளன.

முதல் எட்டுச் செய்யுட்களும், முற்காலத்தில் கசியபர் முதலிய முனிபுங்கவர்களால், ஸ்ரீமஹா கணபதியை நோக்கிப் பாடப்பட்டவை. கடைசி இரண்டு செய்யுட்கள் அந்த முனிபுங்கவர்களுக்குக் கணபதிப் பெருமானால் கூறப்பட்ட வாசகங்கள்.

ஆக இந்தப் பத்துச் செய்யுட்களையும், காலை, நடுப்பகல், மாலை இம்மூன்று வேளைகளிலும் பக்தியோடு பாராயணம் செய்ய வேண்டும். அப்படி மூன்றுநாட்கள் பாராயணம் செய்தால், எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும்.

எட்டு நாட்கள் பாராயணம் செய்தால், மனத்திலுள்ளகவலைகளும் பயங்களும் நீங்கி, மகிழ்ச்சி உண்டாகும். வாழ்வில் சுகம் ஏற்படும்.

வளர்பிறைச் சதுர்த்தி நாளில் விநாயகப் பெருமானை நோக்கி விரதம் இருந்து எட்டுத் தடவை பாராயணம் செய்தால், அபூர்வமான ஆற்றல்களும் ஐஸ்வர்யங்களும் வளரத் தொடங்கும். உணர்விலே மெய்ஞ்ஞானம் ஏற்படும்.

நாள் ஒன்றுக்குப் பத்துதடவை வீதம், இரண்டுமாத காலம்பாராயணம் செய்தால், அரசாங்கத்தில் பெருஞ் செல்வாக்கு ஏற்படும்.

நாள் ஒன்றுக்கு இருபத்தொரு தடவை வீதம், இரண்டு மாத காலம் பாராயணம் செய்தால், உயர்ந்த கல்வித் திறனும், ஒப்பற்ற மக்கட் பேறும், ஓங்கிய பெருஞ் செல்வங்களும் சித்திக்கும்.

படிப்பதற்கு எளிதாயும், பயனளிப்பதில் நிகரற்றதாயும் விளங்குகின்ற இந்தக் காரிய சித்தி மாலையை, நமது "அருள்"

அன்பர்களுக்காக இங்கே வெளியிடுகிறோம். அன்பர்கள் பக்தியோடு பாராயணம் செய்து, பயன் அடைவார்களாக!

காரியசித்தி மாலே

ஸ்ரீ குரவே நம:

ஸ்ரீ மஹா கணபதயே நம:

1. பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்
குமோ,
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி யிருந்து கரக்குமோ,
சந்தமறை ஆகமங்கலேகள்
அனைத்தும் எவன்பால் தக
வருமோ,
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்
ருேம்!

2. உலக முழுதும் நீக்கமற
ஒன்ருய் நிற்கும் பொருளெ
வனவ்
வுலகில் பிறங்கும் விகாரங்கள்
உருத மேலாம் ஒளியாவன்,
உலகம் புரியும் வினைப்பயனே
ஊட்டுங் களேகண் எவ
னந்த
உலக முதலேக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்
ருேம்!

3. இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்,
தொடரும் உயிர்கள்எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்
செய்யும்,
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனல் முடிவுறுமத்
தடவுமருப்புக் கணபதி பொற்
சரணம் சரணம் அடைகின்
ருேம்!

4. மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்திறியாத்
திறத்தி னுனும் உயிர்க்கு
நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பானெ
வனப்
போர்த்த கருணைக் கணபதி
யைப்
புகழ்ந்து சரணம் அடைகின்
ருேம்!

5. செய்யும் வினேயின் முதல்யா
வன்,
செய்யப்படும் அப்பொருள்
யாவன்,
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினேயின் பயன்விளே
வில்
ஊட்டிவிடுப்பான் எவன்
அந்தப்
பொய்யில் இறையைக் கண
பதியைப்
புரிந்து சரணம் அடைகின்
ருேம்!

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்
தகைய

வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவனப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்!

7. மண்ணின் ஓரைங் குணமாகி
வதிவான் எவனீ ரிடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்

எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வானிடையொன்றும்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்!

8. பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்,
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்,
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான

தேசன் எவன் அக் கணபதி
யைத்
திகழச் சரணம் அடைகின்
றோம்!

இதுவரையில் உள்ளவை, முனிவர்கள் பாடியவை. இவற்றைக் கேட்டு மகிழ்ந்த கணபதிப் பெருமான், இப்பாடல்களைப் பாராயணம் செய்யும் நம்மனோர்க்கு ஏற்படக் கூடிய நற்பயன்களைத் தம் திருவாக்காலேயே விளக்கிக் கூறி, அம்முனிவர்களுக்கு அருள் புரிந்து, பின்னர் தம் திருவுருக் கரந்தார் என்னும் செய்தி, அடுத்த இரண்டு செய்யுட்களில் இடம் பெற்றுள்ளது. அவ்விரண்டு செய்யுட்களுக்கும், நூற்பயன் என்று பெயர். பாராயணம் செய்பவர்கள், நூற்பயனையும் சேர்த்தே படிக்க வேண்டும்.

நூற்பயன்

9. இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்
மும்மைச்
சந்திகளில் தோத்திரஞ் செய்
னும்
சகல கரும சித்தி பெறும்!

சிந்தை மகிழச் சுகம்பெறு
மெண்
தினமுச் சரிக்கின் சதுர்த்தி
யிடைப்

பந்த மகல ஒரெண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்!

10. திங்கள் இரண்டு தினந்
தோறும்
திகழ ஒருபான் முறை
யோதில்

தங்கும் அரசர் வசியமுமாம்!
தயங்க இருபத் தொரு
முறைமை

பொங்கும் உழுவ லால்கிளப்
பின்
பொருவின் மைந்தர் விழுக்
கல்வி

துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச் செப்பினர்
மறைந்தார்!

★

ஆசிரியரும் வெளியிடுபவரும் T. ராமனுதன் 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரின்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஜார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த மலர்



ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய வர்ய
ஸ்ரீமத் சாந்தானந்த அவதூத சத்குரு ஸ்வாமிகள்

அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அருள் 4] சாதாரண ஆடி (15-7-70) [கருணை 10

அன்பார்ந்த வாசகர்களுக்கு

உலகெலாம் வாழ வேண்டும், தருமம் தழைக்க வேண்டும், இன்று மக்கட் சமுதாயத்தைப் பீடித்திருக்கும் கலிதோஷங்கள் எல்லாம் தொலைந்து, எங்கும் சாந்தியும் ஆனந்தமும் நிலவ வேண்டும் என்பதற்காகவே;

தம்முடைய அவதூத ஆசிரமத்தையும் மறைத்து, காஷாய உடைதரித்து, நம்மில் ஒருவராய் நடமாடித் திரிபவர் ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்.

அவர்களது திருப்பணிகளின் வரலாறுகளையும், திவ்ய குருபரம் பரையின் பெருமைகளையும் ஏதோ சிறிதளவு எடுத்துரைக்க முற்படுவதன் மூலம், இம்மாத "அருள்" இதழ் ஒரு தனிச் சிறப்பு உடையதாய் விளங்குகிறது.


எப்போதும் வழக்கமாக வெளியிடப்படுகிற மற்ற கட்டுரைகள், இதில் இடம் பெறுமைக்கு இதுவே காரணம் ஆகும். எனினும், அந்தக் குறையை நிறைவு செய்யும் வகையில், பயனும் சுவையுமுள்ள பல அம்சங்கள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

ஆண்டுச் சந்தா:	ஆயுள்- சந்தா:	தனிப் பிரதி:
ரூ. 6-00	ரூ. 100	50காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி: நிர்வாகி, "அருள்" 4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

ஸ்ரீ புவனேசுவரி கவசம்



காப்பு

சிவநேசி தேவேசி சிந்தா ரமணி
புவநேசி பாதமலர் போற்றித்—தவநேசர்
சிந்தைவிழை பொற்கவசம் செய்தமைக்கத் தந்திமுகத்
தெந்தைகழல் காப்பா மெமக்கு!

தியானம்

அங்குச பாச மேந்தி
அபயமே வரதம் தாங்கும்
பங்கயக் கரத்தள் பீதாம்
பரமணியிடையள்
பொற்பூண்
பைங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்
பொங்கிய ஒரெழுத்தாள்
புவனேசி பாதம் போற்றி

கவசம்

திருமுடி காப்பா ளாகத்
தேவ தேவேசி யென்றும்
திருவிழி வலது காக்க
சிவானந்த வுருவம்
பூண்டாள்
வருவிழி யிடது காக்க
வலம்புரிக்களத்துச் செல்வி
உருகிய வுளத்தாள் நாசி
உவப்புடன் காப்பாளாக!

செவியிரண் டினில் வலத்துச்
செவியினைத் தேவிகாக்க
புவிபுகழ் கருணை வல்லி
இடச்செவி புரிந்து காக்க
அவிகமழ் வாயாள் வாயை
அருளினுற் காப்பாளாக
கவிகளின் இதயம் புக்காள்
களத்தினைக் காப்பாளாக!

புயங்களுள் வலத்தைத் தேவி
புவனையே புரப்பாளாக
நயங்கொளும் இடது தோளை
நாயகி காப்பாளாக
வயங்கொளும் உரத்தை
அன்னை மாதங்கிகாப்பாளாக!
சயங்கொளும வயிற்றை
யென்றும் சயசீலி
காப்பாளாக!

வலக்கரம் காக்க மேரு
வாசினி யிடது கையைக்
குலகிரி மகளே காக்க
கொப்பூழை யிறைவி காக்க
கலக்கிய பொறியைக் கன்னி
கருணையாற் காப்பாளாக
வலப்புற வூரு செல்வி
இடப்புறம்மறையாள்காக்க!

முழம்படுதாள்வலத்தை
மொழிவல்லி காப்பாளாக
முழம்படு மிடது தாளை
மூவாத முதல்வி காக்க
கிழங்குறு வினையைப்
போக்கும்
கிரிசையே வலத்தாள்
காக்க
வழங்குறு பலகை
கொண்டாள்
வாழ்வுற இடத்தாள் காக்க!

தலையில் நோய்வாரா
வண்ணம்
சங்கரி காக்க நெஞ்சிற்
குலைவுறும் பிணி புருதே
கோமளை காக்க வாயிற்
புலையுறு பிணி புகாது
புண்ணிய சொரூபி காக்க
நிலையுறு வயிற்று நோயை
நிருமலை காப்பாளாக!

கால்களில் நோய் வராதே
கங்கணி காப பாளாக
வேல்களின் வாளால்
அம்பால்
வீழாது விமலை காக்க
மால்களின் பயங்கா
வண்ணம்
வயிரவி காப்பாளாக
கோல்களின் அடி படாதே
குடும்பினி புரப் பாளாக!

ஆதி யாத் மிகமிலாதே
அருளுக ஞான சக்தி
ஆதிபௌ திகமெய்தாதே
அருளுக கிரியா சக்தி
ஆதி தெய்விக முருதே
அருளுக இச்சா சக்தி
ஆதியால உடல் தேயாதே
அருட் பராசக்தி காக்க!

தெற்கினில் வடக்கில்
என்றும்
சிவாதரி காப்பாளாக
வெற்பினில் விண்ணில்
திக்கில்
மின்னொளி காப் பாளாக
முற்கொளும் கிழக்குமேற்கில்
மூக்கணி புரப்பாளாக!
அற்புதை யுடற்கு ணின்றே
அகப்பிணி யொழித்துக்
காக்க!

சக்திகள் குறை வுருதே
சத்திய தேவி காக்க
புத்திகள் புரை படாதே
புராதனி புரிந்து காக்க

சித்திகள் பழு துருதே
சித்த மாதங்கி காக்க
உத்திகள் அழி வுருதே
உலக நாயகியே காக்க!

பலச்ருதி

காப்பதே கடனுப் பூண்ட
கருணையின் கடலை நெஞ்சில்
பார்ப்பதே துணிந்த அன்பர்
பயப்படா வண்ணம்
காத்துப்
பூப்பதே யருளும் தேவி
புவனேசி கவசம்
சொல்வார்

யாப்பதே பொருளே ஞானம்
இறைவியின் னருளினலே!

வாழ்த்து

புதுவையிற் சதா சிவேந்த்ரர்
புண்ணியத் தானம் வாழ்க
மதுமயப் பிரமம மென்றே
மறைமுடி விளக்கும தேவி
புதுமையிற் பழமை காட்டும்
புவனேசி பாதம் வாழ்க
பதுமமேல் வாழும் தேவி
பக்தர் பல்லாண்டு வாழ்க!

★

ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்தஸ்வாமிகள்

ஸ்ரீ சிவ. பிருந்தாதேவி

புதுக்கோட்டையின் கிழக் கோடியான புதுக்குளக் கரையிலே, கீழ 7-ம் வீதியிலே, ஒரு புனிதப் பொற்பீடம் உண்டு. அதுதான் ஸ்ரீ சுற்குரு சதாசிவ பிரம்மேந்திர சரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்.

ஸ்ரீ ஜட்ஜ் சுவாமிகள் என்று திருநாமம் தாங்கி அருளிய சற்குரு சதாசிவ பிரம்மேந்திர சரஸ்வத்யவதூத சுவாமிகள், திருவனந்தபுரம் நீதிமன்றத்திலே நீதிபதியாகத் தாம் பதவி வகிக்கின்ற வேளையிலே, லௌகிகார்த்தமாக ஏதோ ஒரு தீர்ப்பிலே மனம் வெறுத்து, இக வீடு துறந்து பர வீடு நாடி, பற்றற்ற ஞானியாக வெளியே சஞ்சரித்து வந்தார்கள். இறுதியில் தொண்டைமான் புதுக்கோட்டையிலே, சுற்றிலும் சோலையும், புனலும் சூழ்ந்த அமைதியான ஓர் சூழ்நிலையிலே சமாதிநிலை அடைந்தார்கள். அதுதான் இன்றைக்கு சற்குரு அதிஷ்டானமாக விளங்குகிறது.

ஆண்டுகள் பல ஆகிவிட்டன அவர் சித்தியடைந்து. அதன் பிறகு பல பக்தர்கள் ஒரு முகமாக முயற்சி எடுத்து, காடாகவும் மேடாகவும் இருந்த இடத்தில் 6–2–1932 அன்று அஷ்டானமனை முகூர்த்தம் செய்தார்கள்.

நம் குரு மஹானின் பிரதம சீடர் ஸ்ரீ சற்குரு ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திர சரஸ்வத்யவதூத சுவாமிகளாகும். இவர்கள் கோவை மாவட்டத்திலுள்ள சேந்த மங்கலத்திலே அதிஷ்டானம் கொண்டு இருந்தார்கள். இந்த ஸ்வயம்பிரகாசஸ்வாமிகள் சஞ்சரிக்காத இடமில்லை. காடும் மலையும் கண நேரத்தில் கடக்கத் தெரியும். பூட்டிய பூட்டை உடைக்காமல், கதவைத் தட்டாமல் உள்ளே புகும் நிலையும்; யார் எதை நினைத்தாலும் அந்த நினைப்பைச் சொல்லத்தக்க அதிசய நோக்கும்; எல்லோருடைய உள்ளத்திலும் கலந்து நிற்கும் அனன்னிய பாவமும்; பார்த்த மாத்திரத்திலே பரிவுகள் அனைத்தும் உண்டாக்கும் கருணையும்; நினைத்த மாத்திரத்திலே நிலைத்த பேரின்பத்தை நெஞ்சகத்தினுள்ளே ஊறச் செய்யும் உள்ளுணர்வும் உடையவர்கள்.

இத்தகைய பெருமகனுக்குப் பல சீடர்கள். அவர்களிலே தலைமையான சீடர், நம் காலத்திலே நம்மோடு பார்த்துப் பேசியும்,

நம்மையெல்லாம் புரிந்து உணர்ந்தும், நமக்கெலாம் தமது அருட்கடாட்சத்தை அள்ளி அள்ளி அளித்துக் கொண்டிருக்கும் நம் சத்குருமஹான் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகளாவர்.

சாந்தானந்த சுவாமிகளை, அவருடைய குருநாதராகிய சேந்தமங்கலம் ஸ்ரீமத் ஸ்வயம் பிரகாச சுவாமிகள், புதுக்கோட்டையில் தம்முடைய குருநாதராகிய ஸ்ரீமத் சதாசிவ பிரம்மேந்திர சரஸ்வத்யவதூத சுவாமிகளுடைய அதிஷ்டானத்தை ஊழூழிக் காலம் வரை நிலைக்கும்படி உள்ள திருப்பணிகள் பலவும் செய்யப் பணித்தார்கள். குருநாதரவர்களின் அருளாசியை சிரமேற் கொண்டு, சாந்தானந்த சுவாமிகள் புதுவை மாநகரம் வந்தருளினார்கள்.

புதுவை மாநகரில் பொன்னடிபட்ட நேரம் குருவும் சந்திரனும் கூடிய காலம் போலும்! மனை முகூர்த்தம் செய்ததோடு நின்ற அந்த அஷ்டானம், நம்குரு மஹானுடைய கருணையால் பளிங்குக் கல் மண்டபமாகப் பரிணமித்தது. 1956ம் வருடம் மே மாதம் இருபதாம் நாள், ஸ்ரீ சற்குரு சதாசிவ பிரும்மேந்திர சரஸ்வத்யவதூத சுவாமிகளுடைய அதிஷ்டானக் கும்பாபிஷேகம், நம் ஸ்வாமிகளால் மிகச் சிறப்பாக நடத்தி வைக்கப் பெற்றது.

புத்தர் பிரானுக்கு உலகத் துன்பம் எப்படித் தன் துன்பமாகப் பட்டதோ, அதுபோல மக்கட் சமுதாயத்தின் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், இவற்றையெல்லாம் கண்டு நம் ஸ்வாமிகள் உள்ளம் உருகினார்கள். நிஷ்டை கூடப் பெற்ற நிலைக்கு வந்தபின் தனக்கென்று ஆசை ஏது? பாசம் ஏது? பிறருடைய பூசனைதான் எதற்கு? பரத கண்டம் முழுவதும் பற்றற்றுச் சுற்றித் திரிந்து, அவர்கள் கற்ற அனுபவங்கள் எத்தனை எத்தனையோ? அத்தனையிலும், தித்திக்கும் இனிய சுவை எதுவெனத் தெரிந்து கொண்டார்கள். தனக்கென அல்லாமல் பிறர்க்கென நோன்பு நோற்றலே சாலச் சிறந்தது என முடிவு கண்டார்கள்.

உலக க்ஷேமத்திற்காக, அவர்கள் பல ஹோமங்களும் திருப்பணிகளும் செய்யத் திருவுள்ளம் கொண்டார்கள். அவதூத ஆசிரமத்தைச் சேர்ந்தவராயிருந்தும், அந்த யாக யஜ்ஞங்களின் பொருட்டாக, நம்மிடையே காவி உடையில் இன்று காட்சி தருகிறார்கள்!

நாமெல்லாம் பேசிக்கொண்டேயிருப்போம். அவர்கள் கேட்டுக் கொண்டேஇருப்பார்கள். ஆனால் திடீரென அவர்கள் எங்கோ சென்று விடுவார்கள். எழுந்து அல்ல; இருந்தே!

நிஷ்டை கூடிய நிலை அது. பேசாமல் பேசும் நிலை. தூங்காமல் தூங்கும் நிலை. கேளாமல் கேட்கும் நிலை. பாராமல் பார்க்

கும் நிலை. அறிவான், அறிவு, அறிபடு பொருள் ஆகிய அனைத்தும் கடந்த அப் பெருநிலையில் நிற்கின்ற பேசும் தெய்வமாம் நம் குருமஹான், 1957ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினாறும் நாள் அன்று, முதலில் ஸ்ரீ மகா கணபதி ஹோமத்தை நடத்தினார்கள். அதனைப் பலரும் தரிசித்துப் பயன் பெற்றனர்.

அடுத்த ஆண்டிலே, 28-5-58 அன்று, ஒரே நாளில் மகா ருத்ர ஹோமம் நடத்தி அருளினார்கள். அப்போது லட்சோப லட்ச மக்கள் மகா ருத்ர மகா வல்லமை கண்டு களி பேருவகை அடைந்தனர்.

1959ம் ஆண்டிலே, மே மாதம் 19ம் நாளன்று, ஸ்வாமிகள் ஒரே தினத்தில் லட்சம் நவக்கிரக ஓமம் நடத்தி வைத்தார்கள். இதே நாளில் ஸ்ரீ புவனேஸ்வரி உற்சவ மூர்த்தியின் பிரதிஷ்டையும் நடைபெற்றது.

அதன் பிறகு 1962ம் ஆண்டு ஜூன் மாதம் ஆறும் நாளில், அன்னை புவனேஸ்வரி அதிஷ்டானத்திலே சிலா ரூபமாக ஆவாஹனமானாள்.

சிலா ரூபமாகப் பிரதிஷ்டை ஆன பிறகு, தமிழகத்திலேயே முதல் தரமாக, சகஸ்ர சண்டி ஹோமம் 28-5-63ல் தொடங்கி 2-6-63 வரை நடைபெற்றது. ஸ்ரீ ஸூக்த லட்ச மகா கணபதி ஹோமம் 22-5-64ல் நடந்தது. ஸ்ரீ கோடிபுவனேஸ்வரி மூலமந்த்ர ஹோமம் 5-6-65ல் தொடங்கி 8-6-65ல் முடிந்தது. ஸ்ரீ சக்ர பூர்ண மகா மேரு பிரதிஷ்டை 30-5-66ல் நிகழ்ந்தது. ஸ்ரீ புவனேஸ்வரி கோடி அர்ச்சனை 24-2-67ல் துவங்கி 100 நாட்களில் பூர்த்தியாயிற்று. ஸ்ரீ மகா சுதர்சன லட்சஹோமம் 4-6-68ல் தொடங்கி 6-6-68ல் முடிவுற்றது. ஸ்ரீ சாந்தி துர்க்கா சூலினி லட்ச மகா மந்த்ர ஹோமம் 27-5-69ல் நடந்தது. ஸ்ரீ மகா லட்சுமி மகாமந்த்ர லட்ச ஹோமம் 17-5-70ல் சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

அன்று காலை 5 மணிக்குத் தேவி உபாஸகர்களாகிய 60 வேத விற்பன்னர்களைக் கொண்டு துவங்கப் பெற்ற இந்த மகாயக்ஞம், மாலை 4-30 மணிக்குப் பூர்ணாகுதியுடன் நிறைவு பெற்றது. பல நாட்களாக மழை இல்லாமல் வறண்டிருந்த நகரில், பூர்ணாகுதி நடக்கும் தருணம் பெருமழை பொழிந்தது. அஷ்ட லக்ஷ்மிகளும் வானமாய் நின்று, இன்ப மழையாய் இரங்கியும் இறங்கியும் அருள் புரிந்ததாக, மக்கள் மகிழ்வுற்று வியந்தனர்.

ஸ்ரீ தத்தாத்ரேயருக்கும், ஸ்ரீ புவனேஸ்வரிக்கும் அன்று லக்ஷார்ச்சனையும் நடந்தது. எட்டு சுமங்கலிகளை அஷ்டலக்ஷ்மிகளாக வரித்து, மேடையில் அமர்த்தி வழிபாடு செய்த காட்சி யாராலும் மறக்கமுடியாது.

ஹோமத்தன்று பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களுக்கு சத்குருஸ்வாமிகள் அன்னதானம் அளித்து மகிழ்ந்தார்கள்.

சேலத்திலிருந்து நான்காவது மைலில், உடையாபட்டி என்ற ஒரு சிற்றூர். உடையாபட்டியைச் சுற்றிலும் தொடர் மலைகள். அவற்றுள் ஒரு மலையிலே ஸ்கந்தனுக்கு ஆலயம் ஒன்றை எடுத்து, அதனை ஸ்கந்த கிரியாக, ஸ்கந்தாஸ்ரமமாக விளங்கச் செய்யும் ஏற்பாடுகளில், ஸ்வாமி

கள் தற்போது ஈடுபட்டிருக்கிறார் கள். அங்கு 8-2-71 அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக் கிறது.

எல்லா உயிருக்குள்ளும் ஆத்மா இருக்கிறது. ஆனால் இந்த உல கிலே இரண்டொருவர்தாம் மகாத்மாக்களாக விளங்குகின்ற னர். நமது ஸ்வாமிகள் அத் தகைய ஒரு மகாத்மாவாக இருப் பதாலேயே, பெரிய பிரபுக்க ளாலே கூடச் செய்ய முடியாத யஜ்ஞங்களும் ஆலயத் திருப்பணி களும், அவர்கள் தம் உள்ளத்தில் எண்ணியாங்கு இனிது நிறை வேறி விடுகின்றன! ஆறுகள் கடலைநோக்கி ஓடிவருவதுபோல, மக்களும் அவர்களைத் தேடி வரு கின்றனர்.

பசும்புல் வானத்தைப் பார்ப் பது மழைக்காக! குழந்தை தாயின் முகத்தைப் பார்ப்பது பாலுக்காக! மக்கள் ஸ்வாமி களைத் தேடி வருவது, அவரது கருணை கடாட்சத்தைப் பெற்றுத் தம் வினை தீர்ந்து, விரும்பிய நற் பயன்களைப் பெறுவதற்காக!

குவலயத்தீர்! அன்னை புவனேஸ் வரியின் திருவருளைத் தேடி, நம் குருநாதரை நாடி, கோடி கோடி யாக அணிவகுத்து வாரீர்! கூடும் இன்பம்!

★

கண்ணீர் விட்ட காக்கை



உபந்யாஸ சக்ரவர்த்தி பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

ஸ்ரீ சாந்தாநந்த ஸ்வாமிகள், சேந்தமங்கலத்தில் அவதூதர்களாக விளங்கி இப்பொழுது ஸமாதியில் பிரகாசிக்கிற ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் பரிபூர்ண அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவர்கள்.

இவர்களுடைய தவத்தை உலகமறியும். இவர்கள் ஸ்ரீ புவனேச்வரி பிம்பத்தை ஐந்தரை அடி உயரத்தில் ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகளின் ஸமாதிக்குப் பக்கத்தில் ப்ரதிஷ்டை செய்துள்ளார்கள். பலமுறை சண்டியாகம் முதலியவற்றைச் செய்து வருகிறார்கள்.

சேந்தமங்கலத்தில் விளங்கிய ஸ்ரீ அவதூதஸ்வாமிகளோவெனில், ஆஸேது ஹிமாசலம் வஸ்திரமின்றி அவதூதர்களாக சரீராபிமானத்தை விட்டு ஸஞ்சரித்தவர்கள். இந்த மஹானை, எனது சிறு பிராயத்தில் வேதம் கற்கும்போது, வடக்கு நோக்கிச் செல்லும் காவேரி தீரமாகிய கம்ஸபுரமென்னும் கஞ்சனூர் க்ஷேத்திரத்தில் தரிசித்தேன். அப்பொழுது அவர்கள் உபதேசித்த தர்மங்கள் இன்னும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

நிர்ஜனமான அந்தக் கரையில், கல்யாணபுரம் ஸ்ரீ நரஸிம்ம அய்யர்வாள் என்ற புண்ய புருஷர்

நிர்மாணித்த பெரிய புஷ்பத் தோட்டம் விளங்கிற்று. அதில் ஸ்ரீ ஸ்வாமிகள் பலகாலம் தங்கியிருந்தார்கள். பகல் வேளையிலேயே ஸர்ப்பம் முதலிய ஜந்துக்கள் ஸஞ்சரிப்பது வழக்கம். அந்த இடத்தில் இரவு பகலாய் ஓர் குடிசைகூட இல்லாமல் ஸ்வாமிகள் தங்கியிருந்ததைக் கண்டு, ஜனங்கள் ஆச்சரியப்படுவதுண்டு.

ஸ்ரீ அய்யரவர்கள் "ஓர் பர்ண சாலை அமைத்துத் தருகிறேன்" என்று பலமுறை வேண்டிக் கொண்டார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் "உலகமே எனக்குப் பர்ண சாலை" என்று பதில்கூறிவிட்டார்கள். இப்படிப்பட்ட மஹான், தமது பூர்வாச்ரமமான ப்ரும்ம சர்யத்தில் பிக்ஷாடனம் செய்து கொண்டு, ஓர் ஸத்குருவை அண்டிப் பணிவிடை செய்து வந்தார். அந்த ஸத்குருவே புதுக் கோட்டை ஸமாதியில் விளங்கும் ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகளாவார்கள்.

ஸ்ரீ சேந்தமங்கலம் அவதூதர்களை தரிசித்தவர்களுக்கு, அவர்களது மகிமை நன்கு தெரியும். அவர்கள் மஹா தபஸ்விகள். அவர்கள் ஸ்ரீ தத்தாத்ரேய ஜயந்தி நடத்தும்பொழுது, நான் பல வருஷங்கள் சேந்தமங்கலத்திற்குச் சென்று தரிசித்து உபன்யஸித்ததுண்டு. ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு விஷயங்களைப் பற்றி அவர்கள் என்னை உபன்யஸிக்கும்படி கூறுவார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு, தங்கள் குடும்பத்திலிருந்து தான்யம் விளையும் நிலங்களையும், ஓர் மலையையும் இனமாக அளித்த (ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்த) ஸ்ரீமான் சுந்தரம் செட்டியார் அவர்களும், சேலத்தில் பிரபல குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் டி. சுந்தரம் அய்யர் அவர்களும், மற்றும் பல ஆயிரக்கணக்கான பக்தர்களும், அந்த சமயங்களில் உத்ஸவத்திற்கு வந்து உபன்யாஸத்தைக் கேட்பது வழக்கம்.

ஒரு வருடம் நல்ல மழை பெய்யும் சமயத்தில், ஸ்ரீ தத்த ஜயந்தி நடந்தது. அந்த சமயம் சேலம் ஜில்லா ஜட்ஜாக இருந்த ஸ்ரீமான் என். எஸ். நரசிம்மாச்சாரியாரின் மனைவியும், பெரியவர்களை தெய்வமாக நினைத்தவர்களுமான ஸ்ரீமதி கல்யாணி அம்மாள், தங்கள் காரில் என்னையும் எங்கள் பங்காளிகளாகிய ஸ்ரீ நாராயண வாஜ்பேயர் அவர்களையும் அழைத்துச் சென்றார். பல நாட்களாகப் பெய்யும் மழை, அந்த ஜயந்தி உத்ஸவத்தன்றும் விடாமல் பெய்தது.

அன்று மாலை 6 மணிக்குத் தான் அபிஷேகம் முடிந்து, தீபாராதனையும் நடந்தது. அபிஷேகம் நடக்கும்பொழுது, மதங்களுக்குள் ஹிந்து மதம் சிறந்தது என்பதைப் பற்றி, என்னை உபன்யாஸம் செய்யச் சொன்னார்கள். அதைக் கேட்டு அவர்கள் அன்று மிகவும் ஆசீர்வதித்தனர்.

மாலை 6 மணி ஆகிவிட்டதால், அன்று இரவுதான் யாவரும் போஜனம் செய்ய முடிந்தது. முதலில் ஸ்ரீ ஸ்வாமிகள் பிக்ஷைக்கு உட்கார்ந்தார்கள். ஆபோசனம் போடவேண்டிய சமயத்தில் என்னையும், ஸ்ரீ நாராயண வாஜபேயர் அவர்களையும், ஸ்ரீமதி கல்யாணி அம்மாள் அவர்களையும் பக்கத்தில் அமர்ந்திருக்கச் சொல்லி

ஆபோசனம் போடச் செய்தார்கள். பின்னர் பருப்புப் பிசைந்த அன்னத்தை என் கையில் கொடுத்து, நல்ல மழையாக இருந்த பொழுதிலும் அங்கு வாயிற்படியில் தனித்து வந்து உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு காக்கைக்குப் போடும்படி சொன்னார்கள்.

அவ்வாறே நான் செய்ததும், அந்த அன்னத்தைக் காக்கை சாப்பிட்டது ஸ்ரீ ஸ்வாமிகள் "காக்கையின் கண்களிலிருந்து நீர் வருகிறதே, கவனித்தீர்களா?" எனக் கேட்டார்கள் அதற்குக் காரணத்தையும் அவர்கள் விவரமாகக் கூறினார்கள்.

"முன்பு இந்த ஆச்ரமத்தில் சிதம்பரம் என்ற ஒருவன் வேலை செய்து கொண்டிருந்தான். மலை மேலிருக்கும் ஸ்ரீ தத்தமூர்த்திக்கு அபிஷேகத்திற்காகப் பால் தயிர் முதலியவைகளை மலை அடிவாரத்திலிருந்து அந்த ஆள் கொண்டுபோவது வழக்கம். அவன் சிறிது காலமாய் மலையில் ஏறும்பொழுது, பக்கத்திலிருக்கும் காட்டு மரங்களுக்கு மறைவில், பால் தயிர் முதலியவைவைகளைக் குடித்து, மீதி இருப்பதை அபிஷேகத்திற்குக்கொண்டு வந்தான். இதை குகையில் இருந்த நான் அறிந்து, அவனை அழைத்து, இம்மாதிரி நீ செய்வது தவறெனச் சொன்னதும், அவன் இனி அம்மாதிரி செய்வதில்லை எனக் கூறினான்.

"பின்பு சில தினங்களான தும், மறுபடியும் அபிஷேகத்துக்கு எடுத்துவரும் பால் தயிர்களைக் குடித்து வந்தான். உடனே நான் அவனை அழைத்து மூன்றுமாதச் சம்பளத்தைக் கொடுக்கச் செய்து, வேலையை விட்டு விலக்கச் செய்தேன். வேறு ஓர் இடத்தில் வேலை செய்துவந்த அவன், ஆறுமாதமானதும் இறந்த விட்டான்.

"இப்பொழுது காக்கையாகப் பிறந்து, இதோ வாசற்படியில் தனித்து வந்து அமர்ந்திருக்கிறான். அதற்காகத்தான் இந்த அன்னத்தை உங்கள் கையால் கொடுக்கச் செய்தேன்" எனச் சிரித்துக் கொண்டு கூறினார்கள்

அருட்செல்வர் சாந்தானந்தர்

ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர்

பொன்போல் ஒளிரும் மேனி, அருட்பார்வை, தேஜஸ் ஜவலிக்கும் முகம், நாள்மலர் போன்ற புன்முறுவல், நீள்தாழ் செந்நிறச் சடைகள், துவராடை, இளமை செறிந்த பிராயம் இத்தனையும் சேர்ந்து தவவேடம் தாங்கி ஈச்வரனே மானிட வடிவில் அவதரித்தது போன்ற பொலிவு. ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் இந்தத் திருக்கோலத்துடன் நித்ய ஜோதியாக இலங்குகிறார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் செயற்கரும் செயல்களை ஆற்றிக்கொண்டிருக்கிறவர்கள். மன்னர்களாலன்றி மற்றவர்களால் ஆற்ற முடியாத அருஞ்செயல்களை இவர்கள் ஆற்றி வருவதற்கு, இவர்பால் ஜகந்மாதா ஸ்ரீ புவனேஸ்வரியின் அருளே காரணமாகும். அந்த ஈஸ்வரியின் மஹிமை எத்தகையது?

ஆதி சங்கர பகவத் பாதாள், மஹாசக்திக்குப் பாரத நாட்டின் பல பகுதிகளில் பல பீடங்களை ஸ்தாபித்து, அவளை வழிபட்டார்கள். சக்தி உபாசனையினால்தான் அவர்களுக்கு ஸர்வ சக்திகளும் அமைந்திருந்தன. ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளும் சக்தி வழிபாட்டைப் பெற்றவராக விளங்குகிறார்கள். புவனேஸ்வரியின் கடாக்ஷம் பெற்று, நம் ஸ்வாமிகள் செய்து வரும் சாதனைகளை இங்கே சுருக்கமாகக் கூறுவோம்.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் நெடுஞ்சாலையில், சேலத்துக்கு நான்கு கல் தொலைவில், உடையாபட்டி என்னும் இடத்தில், கன்னிமார் ஓடைக்கருகில், மலைப்பிரதேசம் ஒன்று விளங்குகிறது.

அங்கே ஸ்கந்தகிரி என்ற ஒரு தலத்தை ஸ்ரீ சாந்தானந்தர் நிறுமித்திருக்கிறார்கள்.

ஸ்கந்தாச்ரமம் அது. முருகனுக்கு அங்கே திருக்கோயில், மறையும் நிலையிலுள்ள வேதக் கல்வி என்றும் நிலவிட ஒரு வேத பாடசாலை, இவ்வளவும் சேர்ந்த அந்த இடம், இயற்கை அன்னையின் கொலுக்கூடம். சில ஆண்டுகளில் பெரிய யாத்ரா ஸ்தலமாகப் பரிணமிக்கத் தக்க க்ஷேத்திரம்.

இவர்களுடைய குரு ஸ்ரீ சுயம்பிரகாச ஸ்வாமிகள், சேந்தமங்கலத்திலே நீண்ட காலம் பிரசித்தராக இருந்து, அங்கே தத்தகிரி என்ற க்ஷேத்திரத்தை நிறுவி, அதில் ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்வாமிகளுக்குக் கோவில் அமைத்துப் பிரதிஷ்டை செய்து, அங்கேயே தாமும் சித்தியடைந்தனர். அந்த இடத்திலே இன்று நித்ய பூஜையும், ஆண்டுதோறும் குருபூஜையும், ஸ்ரீ தத்தாத்ரேயர் உத்ஸவமும், ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளின் முயற்சியால் நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீ சுயம்பிரகாச ஸ்வாமிகளின் குரு, ஜட்ஜ் ஸ்வாமிகள் என்னும் ஸ்ரீ சதாசிவப்பிரம்மேந்திர சரசுவதி அவதூத ஸ்வாமிகள். இவர்கள் சித்தியடைந்த இடம் புதுக்கோட்டை.

புதுக்கோட்டையில் உள்ள அவர் அதிஷ்டானம் இன்று பாரதநாடு முழுவதும் புகழ்வீசி ஒளிரும் க்ஷேத்திரமாக விளங்குகிறது. இதன் புகழுக்குக் காரணமூர்த்தி நம ஸ்ரீசாந்தானந்தஸ்வாமிகளே! ஆண்டில் பலமாதங்கள் இவர்கள் அங்கே லோக க்ஷேமகரமான பல காரியங்கள் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.

நவராத்திரி தோறும் லக்ஷார்ச்சனை பூஜைகள், அடிக்கடி சண்டிஹோமாதி பலயக்ஞங்கள், ஆயிரக்கணக்கான மக்களுக்குத் திருநாட்களில் பெரிய சந்தர்ப்பணைகள்—இப்படி ஸ்ரீ சந்தானந்த ஸ்வாமிகள் நடத்தி வருகிறார்கள்.

மேலே கூறியவை எல்லாம் லோக க்ஷேமத்திற்காகவே! இவை இகபோகங்களையும், மறுமைக்கு வழியையும் சம்சாரிகளுக்குக் காட்டுவன. நம் ஸ்வாமிகளுக்கு இவற்றில் பற்றுதல் சிறிதும் இல்லை; வேறு சுயநலமும் இல்லை. ஞானிகளுக்குக் கருமங்கள் இல்லை.

இவர் துறவி அல்லரோ! துறவிகளிடம் பணம் ஏது? செல்வத்தைத் துறவிகள் வெறுக்கும் காரணத்தால் அச்செல்வம் வெறுக்கை என்ற பெயர் பெற்றுள்ளது. இது லோக மாதாவாகிய புவனேஸ்வரியின் அருளே. இவரிடம் செல்வம் வந்தடைந்து யாகங்களை நடத்தி வைப்பது, அந்த அருளாலேதான்!

சாந்த ஜ்யோதி



ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணய்யர்

மதுரையம்பதியில், அபார சம்சார குடும்பத்தில், ப்ரம்ம ஸ்ரீ ராமஸ்வாமிக்கும் யோக அம்மாளுக்கும் பதின்மூன்றாவது குழந்தையாக ஜனித்து, தாய் தந்தையர்களும் சில நாளில் பரலோகம் ஏக, ஸாம்ஸார ஸாகரத்தில் ஈடுபட்டிருந்த உத்தமசகோதரியிடம் தாயன்புகொண்டு, பால தெய்வமாக, பிறவி ஜடையோடு உதவி சூரியனோ பூர்ண சந்திரனோ என்று வியப்புற தாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, யௌவன பருவமும் அடைந்தார் வியக்தி சுப்ரமண்யம்.

தாபத்தினால் தேசத்தொண்டிலும் நாம சங்கீர்த்தனத்திலும் நெக்குருகி ஆடியும் பாடியும் அலைந்து வந்த நேரத்திலே, ஒரு சமயம் உறவினர் கொடும் செயலை ஸகிக்க வொண்ணாது, பரந்த உலகில் பரமனைத் தேடிப் பாதசாரியாய் கிளம்பினார்.

தாயைத் தேடும் கன்றுபோல், இமயமலை அடிவாரத்திற்குச் சென்று, பனிமலைச் சிகரங்களையும் நடைவழியேயுள்ள புண்ணிய நதிகளையும் பல சாதுக்களையும் தரிசித்து, பத்ரி சென்று திரும்பி, ரிஷிகேச ஆஸ்ரமத்தில் சில நாள் வசித்து, பல சந்யாசிகளின் அன்பும் ஆசியும் பெற்று, தனது உன்னத வாழ்க்கையை ஆன்மீக வழிபாட்டில் உயர்த்த, உகந்த குருமகானையும் அதற்கொப்ப சந்யாஸ ஆச்ரமத்தையும் தேடி அலைந்தார்.

அதைக் கண்ட ரிஷிகேசம் சிவானந்த மகராஜ் மனங்குளிர்ந்து, தென்னிந்தியாவிலே சேலம் ஜில்லாவில் சேந்த மங்கலம் என்ற ப்ரதேசத்தில், கொல்லி மலைக்கு அருகேயுள்ள காடுகளிலே, தனி வஸ்திரத்தையும் தாயின் முன்பு தானாக நழுவவிட்டு, மாசற்றவராய் விளங்கி வந்த அவதூத ஜ்யோதியைச் சுட்டிக் காட்டி, ''போ'' என அருளினார்.

இந்த அருள் மொழியைத் தலைமேல் கொண்டு, குருவை நாடி ஓடோடியும் வந்து, சேந்த மங்கலம் ஜ்யோதியின் பாதத்தில் சரணடைந்தார் சுப்ரமண்யம்.

பாலொழுகும் வடிவத்திடையே ஜடை தொங்கும் வ்யக்தியையும், அவரது நெக்குருகி வணங்கும் ஹ்ருதய பாவத்தை

யும் பார்த்துத் திகைக்காதவர்கள் இல்லை.

பாலனே யாருக்கும் பதில் சொல்லாமல், குரு சரணமே கதி யென நம்பி, பலவிதமான பரீக்ஷைகளுக்கும் ஈடு கொடுத்து, தனது த்வீரமான வைராக்யத்தை நிரூபித்து, இறுதியில் அவதூத துறவற ஆச்ரமும் பெறறு, குரு ஆக்ஞைப்படி திகம்பரராகத் தவஞான யாத்திரை ஆரம்பித்தார், சாந்தானந்தர் என்ற திவ்ய நாமத்தையும் தரித்தார்.

நைஷ்டிக ப்ரம்மசாரியாய் காஷ்ட மௌனம் அப்யசித்து, காடு மலைகள், நாடு நகரங்கள் யாவும் சுற்றுகையில், காஞ்சி காமாக்ஷி கோயிலில் உள்ள காயத்ரி மண்டபத்தில், ஒரு வருடம் கடுந் தவம் செய்து, கரதல பிக்ஷை ஏற்று, தேவிஸ்ரீ காமாக்ஷியின் அனுக்ரஹம் பெற்றார்.

இன்னும் பழநி ஆண்டவன் ஸந்நிதியில் சில வருஷம் நிஷ்டையிலிருந்து, மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலைச் சேர்ந்த அய்யப்பன் தவக்கோலம் அணிந்துள்ள காடு வனாந்தரங்களில் தன்னந்தனியே ஒருசில வருஷங்கள் தபசும் செய்து, அவ்வப்போது குரு தரிசனமும் கடாக்ஷமும் பெற்று வந்தார் சாந்த ஜ்யோதி!

அடுத்து, பாரதத்தில் தத்தாத்ரேயர் பிரசன்னமாகிய ஸந்நிதிகளெல்லாம் பல வருஷம் யாத்திரை செய்து முடித்தார்.

1948ம் வருஷம், குரு சித்தியடையும் தறுவாயில், அவரது பூர்ண கடாக்ஷமும் கருணையும் அடைந்து, குரு கைங்கர்யத்தில் தீவிரமாய் ஈடுபட்டு, சேந்தமங்கலம் அதிஷ்டானம், கோயில், தத்தாத்ரேயர் ஸந்நிதி முதலியவைகளை பலவிதத்திலும் மேம்பாடு செய்து, அம்பாள் அருளிய ஸங்கல்பத்தின் பேரில், பரமகுரு சந்நிதானமாகிய புதுக்கோட்டையில், அதிஷ்டானத்தைப் புனருத்தாரணம் செய்து, புவனேஸ்வரி அம்பாளை ப்ரதிஷ்டை செய்து, அதையொட்டி யாகமண்டபசாலைகளையும் செவ்வனே பூர்த்திவிட்டு, வேதோக்தமாக 1956இல் கும்பாபிஷேகம் நடத்தினார்.

இன்னும் லோக க்ஷேமத்திற்காக, நிஷ்காம்ய பாவத்தோடு, மஹாருத்ர யஜ்ஞமென்ன, லக்ஷ நவக்ரஹஹோமமென்ன, ஸகஸ்ரசண்டி யகஞம் என்ன, ஸ்ரீ சூக்த லக்ஷ மஹாகணபதி ஹோமமென்ன, கோடி புவனேஸ்வரி மஹாமந்திர மஹாயஜ்ஞமென்ன, ஸ்ரீசாந்தி துர்காசூலினி மஹாமந்திர லக்ஷ ஹோமமென்ன, மஹாலக்ஷ்மி யஜ்ஞமென்ன, இப்படிப் பல யஜ்ஞங்களைச் செய்து, வேத வித்துக்களையும், மந்திர தந்திர சாஸ்திர வித்பன்னர்களையும் ஆதரித்து, உலகம் உய்யுமாறு செய்கிறார்.

அந்த சாந்த ஜோதிக்கு நம்முடைய நமஸ்காரம்! சாந்த ஜ்யோதியே சரணம்! சரணம்!! சரணம்!!!

★



ஸ்ரீ ராம்லோக் & கம்பெனி உரிமையாளர் ஸ்ரீ. ஆர். ராகவாச்சாரியார் அவர்களின் புதல்வி திருவளர் செல்வி மாலாவுக்கும், ஸ்ரீ கே. ராஜகோபாலன் அவர்களின் புதல்வர் நிறைநாட் செல்வன் ராகவன் M. E. அவர்கட்கும், 14-6-70 அன்று ஸ்ரீ ஒப்பிலி அப்பன் சன்னிதியில் திருமணவிழா சிறப்பாக நடந்தேறியது. 17-6-10 அன்று மாலை, சென்னைத் தியாகராய நகர் ரங்கநாதன் தெருவிலுள்ள ஸ்ரீராம் லோக் & கம்பெனியில் நடந்த வரவேற்பு விழாவிற்கு, ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்கள். மணமக்கள் நீடூழி வாழ்க என்று நாமும் வாழ்த்துவோமாக!

[இவ்விதழில் புதிதாக வெளியிடப்பட்டுள்ள படங்கள் யாவும் (நம்பர் 9, ரயில்வே பார்டர் ரோடு, தியாகராய நகர், சென்னை-17 என்னும் விலாசத்திலுள்ள) புகைப்படக் கலைஞர் ஸ்ரீ D. சேஷாத்ரி அவர்கள் தந்து உதவியவையாகும் அவருக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

— உரிமையாளர், "அருள்"]

மூன்று மஹாத்மியங்கள்

வேலவன்

1. ஸதாசிவ மஹாத்மியம்


ஆந்திர தேசத்திலே, கோதாவரி தீரத்தில், தவளேசுவரம் என்ற ஒரு சிறு கிராமம். அங்கே, 19'ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், வேதமூர்த்தி சாஸ்திரிகள் என்னும் ஓர் அந்தணப் பெரியார் வாழ்ந்து வந்தார்.

வெள்ளத்தால் ஊருக்கு நேர்ந்த இடையூறு காரணமாக, வேதமூர்த்தி சாஸ்திரிகள் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு விஜயவாடாவில் வந்து குடியேறினார்.

அங்கு அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அக்குழந்தையின் இயற்பெயர் இன்னதென்று தெரியாததால், அவன் பிறந்த ஆத்ரேய கோத்ரத்தின் பெயரையொட்டி, இப்போதைக்கு அவனை நாம் ஆத்ரேயன் என்றே அழைப்போமாக!

ஆத்ரேயன், தன்னுடைய தாய்மொழியாகிய தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூம்மொழிகளிலும், வேத சாஸ்திரங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்றான். அத்துடன், சென்னை சென்று சட்டக் கல்லூரியில் படிக்க ஆசைப்பட்டான்.



ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள்

அப்போது வேதமூர்த்தி சாஸ்திரிகளுக்கு வயது அறுபதுக்கு மேல் ஆகிவிட்டது. எனினும், மைந்தனின் ஆசையை நிறைவேற்றும்பொருட்டு, அவர் தம் குடும்பத்துடன் சென்னையில் வந்து குடியேறினர்.

சென்னையில் அவர் உபந்யாசங்கள் செய்து, அதன் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு தம் பிள்ளையைப் படிக்க வைத்தார். மணமேற்குடி கிருஷ்ண பாகவதரும், பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகளும் இளம் வயதினராய்க் கதாகாலக்ஷேபங்களும் பிரவசனங்களும் செய்யத் தொடங்கிய காலம் அது.

ஆத்ரேயன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டமும் பி.எல். பட்டமும் பெற்று, வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். நாளடைவில் ஒரு புகழ் பெற்ற வக்கீலாகவும்வளர்ந்தோங்கினர். எனினும், நியாயமான வழக்குகளை மட்டுமே ஏற்றுக் கொள்வது என்ற ஒரு விரதத்தை, மிக உறுதியோடு கடைப்பிடித்து வந்தார்.

இதற்கிடையில், அவருடைய திருமணமும் நடந்தேறியது. அவரது தந்தையும் தாயும், தம் கடைசி நாட்களைக் காசியம்பதியிலே கழிக்க விருப்பம் கொண்டவர்களாய், மைந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு காசிக்குப் புறப்பட்டுப் போய் விட்டனர்.

பின்னர், ஆத்ரேயருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவரும் சென்னையிலே ஒரு பெரிய செல்வச் சீமானாக வாழ்ந்து வந்தார்.

அப்போது, திருவாங்கூர் மன்னரிடமிருந்து அவருக்கு ஓர் அழைப்பு வந்தது. அந்த சமஸ்தானத்தின் தலைமை நீதிபதிப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு, மன்னர் அவரைக் கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளை ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமியின ஆக்ஞையாகக்கருதி, ஆத்ரேயர் தம் மனைவி மக்களுடன் திருவனந்தபுரத்தில் போய்க் குடியேறினர். அப்போது அவருக்கு வயது ஐம்பது.

திருவனந்தபுரத்தில் அவர் ஆறு வருஷ காலம் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்தார். அதற்கிடையில் அந்நாட்டு மொழியாகிய மலையாளத்தையும் கன்னடத்தையும் கற்றுத் தேர்ந்தார். ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல அரிய நூல்களை எழுதினர். அவற்றுள் சில நூல்கள் திருவாங்கூர் அரசர் உதவியால் வெளிவந்தன. பின்னரிலும் அவர் சில நூல்கள் செய்தார். அவையெல்லாம் இன்று மறைந்து விட்டன ஏதோ ஒன்றிரண்டு நூல்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

ஒரு நாள், உயர்நீதிபதி ஆத்ரேயர் முன்பு ஒரு கொலை வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்டவன் உண்மையில் நிரபராதியென்பது, அவருடைய மனச்சாட்சிக்குத் தெரிந்தது. ஆனால் சந்தர்ப்ப சாட்சியங்கள் அவனைக் குற்றவாளியாக்கிக்காட்டின. ஆகையால், அவனை விடுதலைசெய்வதற்குச் சட்டம் இடம் தருவதாயில்லை. இந்த நிலையில், அவனுக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பு எழுதுவதற்கு மனம் நடுங்கியவராய், உடம்பெல்லாம் வியர்க்க, இன்னது செய்வதென்று தெரியாமல், ஆத்ரேயர் தம் ஆசனத்திலேயே திகைப்

புற்று வீற்றிருந்தார் பின்னர் தமக்குள் ஒரு முடிவுக்கு வந்தவராய், அந்த இடத்திலேயே தன் பதவியைத் துறந்து, நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார். வீட்டுக்குப் போய்த் தம் மனைவி மக்களிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல், நேரே தமிழ் நாட்டை நோக்கி நடக்கலுற்றார்.

முதலில் திருநெல்வேலியை அடைந்து, அங்கிருந்து திருச்செந்தூர், மதுரை, திருவேடகம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவையாறு, திருப்பெருந்துறை, திருவாரூர், மாயூரம், சீகாழி இவ்விடங்களிலுள்ள ஆலயங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு, ஆத்ரேயர் சிதம்பரம் வந்துசேர்ந்தார். சிதம்பரத்திலே, கூத்தப் பெருமான் அவரது கனவில் தோன்றி, அவர் துறவறம் பூணுதற்கு அனுக்ஞை அருளியதோடு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருக்காளத்தி இம்மூன்று திருத்தலங்களுக்கும் செல்லுமாறு பணித்தார்.

அவ்வண்ணமே ஆத்ரேயர் தில்லையிலிருந்து புறப்பட்டுக் காஞ்சியை அடைந்து, அங்குள்ள உபநிஷத் பிரம்மேந்திர மடத்தில் ஐந்தாண்டு காலம் தங்கியிருந்து வேதாந்த விசாரம் செய்தார்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திருவண்ணாமலை வழியாகச் சென்னை வந்து, கபாலீசரைத் தரிசித்து விட்டு, நேரே திருக்காளத்தியை நோக்கி நடக்கலுற்றார்.

திருக்காளத்தியிலே, பாரத்வாஜ தீர்த்தக் கரையிலிருந்த ஒரு சிறு குடிலிலே, உலகை மறந்து தவம் பூண்டிருந்த ஸ்ரீ இராமகிருஷ்ண பிரம்மேந்திரர் என்னும்

அவதூத ஸ்வாமிகளை, நமது ஆத்ரேயர் தரிசனம் செய்தார். அவருடைய ஆசிரமத்தின் வாயிலிலேயே ஒரு வார காலம் காத்துக்கிடந்து, அவருடைய திருவருளுக்குப் பாத்திரமானர். இராம கிருஷ்ண பிரம்மேந்திரர் ஆத்ரேயருக்கு ஐந்தாவது ஆசிரமம் என்று போற்றப்படுகிற அவதூத சன்யாசத்தை அளித்து, முன்பு நெரூர் முதலிய ஐந்து க்ஷேத்ரங்களில் சமாதி கொண்ட அவதூத சிகாமணியாகிய ஸ்ரீ ஸதா சிவ ப்ரம்மேந்திரரின் திருநாமத்தையே இவருக்கும் தீக்ஷா நாமமாகச் சூட்டி, மகான்கள் நிறைந்த பாரத நாட்டை வலம் வருமாறு அனுப்பி வைத்தார். (இது முதற்கொண்டு, நமது ஆத்ரேயரை அவரது தீக்ஷா நாமமாகிய ஸதா சிவ பிரம்மேந்திரர் என்னும் திருப்பெயராலேயே குறிப்பிடுவோமாக!).

காளத்தியை விட்டுப் புறப்பட்ட ஸதாசிவ பிரம்மம், தமக்குத் தவப்பெயர் தந்த ஆதி ஸதாசிவ பிரம்மேந்திரரின் சமாதிகளில் ஒன்ருகிய நெரூர்க்குச் சென்று, அங்குள்ள சிவாலயத்திலே 45 நாட்கள் தியானத்திலிருந்தார். பின்னர், தமிழ் நாட்டிலுள்ள பல திவ்ய ஸ்தலங்களையும் தரிசித்துக் கொண்டு, மௌனமாகவே காட்டு வழியாக நடந்து, வடநாட்டை அடைந்தார்.

காசியில் விசுவநாதரை தரிசித்துவிட்டு, ஹரித்வாரம் சென்ருர். பிறகு இமயமலையின் சிகரங்களிலே பல ஆண்டுகள் தங்கிவிட்டு, மேற்கு திசையிலும் கிழக்குத் திசையிலும் உள்ள தலங்களைப் பணிந்து, தென்திசை நோக்கித் திரும்பினர்.

தெற்கே மீண்டும் தமிழகத்துக்கு வந்து, பல க்ஷேத்திரங்களையும் தரிசித்தவாறு மானமதுரையை அடைந்தார். அங்குள்ள சோமநாதர் ஆலயத்தில்தான், பிற்பாடு ஸ்வயம்பிரகாச பிரம்மேந்திரர் என்னும் தீக்ஷா நாமத்தோடு விளங்கிய கானப்பேட்டைக் கிருஷ்ணமூர்த்தி அவரை முதன்முதலாக சந்தித்தார்.

மானமதுரையிலிருந்து, ஸதா சிவ பிரம்மம் பொதிய மலை சென்று தியானத்தில் அமர்ந்தார். கிருஷ்ணமூர்த்தியை அவர் தம் சீடராக ஏற்றுக் கொண்டதும் அங்கேதான். பின்னர் கிருஷ்ணமூர்த்தியை அனுப்பி விட்டு, பித்தர் போலவும் பேதையர் போலவும்மத்தர் போலவும் உலகைமறந்தவராய், உலாவித் திரியலானர். இடையிடையே மலைச் சிகரங்களிலும் அருவிக் கரைகளிலும் ஞான யோகத்தில் அடங்கியிருந்தார். அந்நிலையில் அவரைக் கண்ட சிறுமதி படைத்த சிலர், அவரது நீண்ட சடைகளையும் தாடியையும் ஒட்டக் களைந்தெறிந்தனர். ஆனல் அதைக்கூட அவர் அறிந்தாரில்லை!

பின்பு அவர் மதுரை, பழனி, திருச்சிராப்பள்ளி வழியாக நார்த்தாமலையெனப்படுகிற நாரதர் மலைக்கு வந்து. அங்குள்ள சிவாலயத்திலே நிர்விகல்ப சமாதியில் அமர்ந்து விட்டார். அப்போது தற்செயலாய் அங்கு வந்த சில புதுக்கோட்டை அந்தணர்கள் அவரைக் கண்டு, மகான் ஒருவர் மகாசமாதியில் இருக்கும் செய்தியைத் தம் மன்னரிடம் தெரிவித்தனர். மன்னரிடமிருந்து அவர்கள் ஒரு பல்லக்கைப் பெற்று வந்து, நிஷ்டையிலிருக்கும் யோகீஸ்வரரை அதில் மெதுவாக எடுத்து வைத்து மெல்ல, ஆடா

மல் அசையாமல் புதுக்கோட்டைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

புதுக்கோட்டையில், அவருடைய அதிஷ்டானம் அமைவதற்கான ஒரு சிறிய இடத்தை அரசர் ஒதுக்கித் தந்தார். அங்கு சமாதி கைங்கர்யங்களும் பூஜா விசேஷ வைபவங்களும் முறைப்படி நடத்தி, அரச மரியாதைகளுடன், வேத கோஷம் முழங்க, ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் திருமேனி, சமாதியுள் அந்தணப் பெரியோர்களால் அடக்கம் செய்யப்பட்டது!

ஸ்ரீ ஸ்வயம்பிரகாச மஹாத்மியம்

புதுக்கோட்டையை அடுத்த கானப்பேட்டை யென்னும் சிற்றூரிலே, அந்தணர் குலத்தில் பிறந்த ஒரு பிரம்மச்சாரி இருந்தார். அவர் பெயர் கிருஷ்ண மூர்த்தி.

அவர் ஆங்கிலம், தமிழ், வடமொழி இம்மூன்றும் கற்றவர். சிறிது காலம் உத்தியோகமும் வகித்திருந்தவர்.

அவரது உள்ளத்திலே வைராக்கியம்பிறந்ததால், அவர் வடக்கே காசி முதலிய க்ஷேத்திரங்களுக்கு எல்லாம் சென்று, ஆங்காங்கு உள்ள மகான்களைவணங்கிவிட்டு, மீண்டும் தென் திசைக்குத் திரும்பி, மதுரை கடந்து மானா மதுரையை அடைந்தார்.

மானாமதுரையில் சோமநாதர் ஆலயத்தைச் சுற்றி வரும்போது,



ஸ்ரீ ஸ்வயம்பிரகாச
பிரம்மேந்திர ஸரஸ்வத்
யவதூத ஸ்வாமிகள்

அங்கு பிராகாரத்திலே தவக்கோலம் பூண்டு மௌனமாய் வீற்றிருந்த ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திரரைக் கண்டார். தம்மை ஆட்கொண்டு அருள் புரியுமாறு வேண்டித் துதித்தார்,

ஆனால் கிருஷ்ணமூர்த்தியின் சொற்கள் ஸதாசிவப் பெருமானின் செவியில் விழவில்லை. அந்த பிரம்ம நிஷ்டர் இவ்வுலகத்தைப் பற்றிய உணர்வு இல்லாமலே எழுந்து நடந்து சென்றார். கிருஷ்ணமூர்த்தி அவரை நிழல் போல் தொடர்ந்தார்.

இருவரும் பொதியமலைசென்று, அங்குள்ள இரண்டு அருவிகளையும் கடந்து மேலே போயினர். ஒரு பெருந் தனிமர நிழலில் ஸதாசிவ பிரம்மம் யோகத்தில் அமர்ந்

தது. கிருஷ்ணமூர்த்தியும் அவரை விட்டுப் பிரியாமல் அங்கேயே தங்கியிருந்தார்.

பிரம்மேந்திரர் கண்விழித்தார். எதிரே நிற்கும் கிருஷ்ணமூர்த்தியைக் கண்டார். 'ஏண்டா, என்னை மீண்டும் உலகத்தோடு தொடர்பு படுத்துவதற்காகவா இங்கு வந்து சேர்ந்தாய்?' என்று கோபித்தவாறு, அடிக்க ஓங்கிய கையோடு, அவர்மீது கற்களை எடுத்து வீசினார்.

இதனை அருட் செயல் என்று உணர்ந்த கிருஷ்ணமூர்த்தி, பெருமான் எறிந்த கற்களையெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்து அவர் திருமுன் வைத்து வணங்கி நின்றார். தம்மைச் சீடனாக ஏற்றுக்கொண்டு துறவு நிலை அருள வேண்டும் எனப் பிரார்த்தித்தார்.

கிருஷ்ணமூர்த்தியின் பால் கனிவு கொண்டார் ஸதாசிவேந்திரர். 'முதலில் நீ உன்னுடைய தாயின் அனுமதியைப் பெற்று வா. உனக்கு சன்யாசம் தருகிறேன்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இதற்குமேல் எதுவும் பேச வழியில்லாமல் கிருஷ்ணமூர்த்தி கானப்பேட்டைக்கு வந்தார். அங்கு தம் அன்னையை மிகவும் மன்றாடிக் கெஞ்சி, தாம் துறவு பூணுதற்கு அவருடைய அனுமதியைப் பெற்றார். மீண்டும் பொதிய மலையை அடைந்து, தியான சமாதியிலிருந்த பிரம்மேந்திரரின் திருவடியில் வீழ்ந்து நினைவற்றுக் கிடந்தார்.

சமாதி கலைந்து கண் விழித்த சதாசிவ பிரம்மம், கிருஷ்ணமூர்த்தியின் பரிபக்குவத்தை உணர்ந்து, அவருக்கு அப்போதே துறவு நிலை அளித்து ஞானோபதேசம் செய்தார்.

அத்துடன் அவருக்கு ஸ்வயம் பிரகாசர் என்ற தீக்ஷா நாமமும் சூட்டி, தமது குரு பரம்பரையின் முதல்வராகிய தத்தாத்ரேய ஸ்வாமிகளுக்குத் தமிழகத்தில் ஓர் ஆலயம் அமைக்குமாறு உத்தரவிட்டார்.

குருவினது ஆணைப்படியே, ஸ்ரீ ஸ்வயம் பிரகாச பிரமமேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள், நம் பாரத தேசம் முழுவதையும் இரண்டு முறை வலம் வந்தார். மகாராஷ்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் உள்ள தத்தாலயங்களையெல்லாம் தரிசித்தார். பின்னர் சேந்த மங்கலத்தில் போய் நிலைபெற்று, அங்கேயே ஒரு தத்த ஆலயத்தையும் நிர்மாணித்தார்.

ஸதாசிவபிரம்மம் புதுக்கோட்டையில் மஹா சமாதி அடைந்த போது, ஸ்வயம் பிரகாசர் சேந்தமங்கலம் தத்தகிரியிலுள்ள குகையில் அடங்கித் தவம் புரிந்து கொண்டிருந்தார். ஆகையால் அந்தச் செய்தி அவருக்குத் தெரியாமல் போயிற்று.

ஆறேழு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் அந்தச் செய்தி தெரிந்து, தன்னந்தனியாகப் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டு வந்தார். அதற்குள் அதிஷ்டானம் இருந்த இடம் அடையாளம் தெரியாமல் மறைந்து போய், குப்பை மேடாகக் காட்சியளித்தது.

எனினும், ஸ்வயம் பிரகாசர் அதைத் தமது தவத்திறத்தால் கண்டு பிடித்தார். கண்டுபிடித்து, மூன்று நாட்கள் அங்கு தங்கி

விளக்கேற்றி தியானத்திலிருந்து விட்டு, மீண்டும் சேந்தமங்கலம் சென்று விட்டார். ஆனால், அது புதுவை மக்களில் யாருக்குமே தெரியாது. காரணம், ஸ்வாமிகளைப் பற்றிப் புதுவை மக்கள் அறியாதிருந்த காலம் அது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்வாமிகளின் புகழ் தமிழகமெங்கும் பரவத் தொடங்கியது. அதைக் கேள்விப்பட்டு, புதுவை அந்தணர்கள் சிலர் சேந்தமங்கலம் சென்று, ஸ்வாமிகளைத் தரிசித்தனர். அவர் நெடுங்காலமாய் மௌனம் பூண்டவர் எனினும், அந்த மெய்யன்பர்களிடம் வாய் திறந்து பேசினார். "பெரியவர்கள் அடங்கியிருக்கும் புண்ய க்ஷேத்ரத்தை மறப்பது நல்லதாகுமா?" என்று கேட்டார். அதிஷ்டானம் இருக்கும் இடத்தையும் அவர்களுக்கு அடையாளம் கூறினார்.

அந்த இடம் அப்போது பத்மநாப சாஸ்திரியார் என்னும் நீதிபதிக்கு உரியதாக இருந்தது.

சேந்தமங்கலத்திலிருந்து திரும்பிய புதுவை அந்தணர்கள், திருப்பணிக்குழு ஒன்று அமைத்தார்கள். ஸ்வாமிகளின் சீடர்களில் ஒருவராகிய சங்கரானந்தர் என்பவரும், அவர்களுக்குத் துணையாக வந்து சேர்ந்தார். ஸ்வாமிகள் கூறிய அடையாளங்களைக் கொண்டு இரவெல்லாம் தேடி, அதிஷ்டான ஸ்தலத்தை அவர் கண்டுபிடித்தார்.

ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் சமாதி, அப்போது மண்ணுக்குள் மறைந்து போயிருந்தது. சிறு சமாதியாயிருந்த அதனைத் திருப்பணிக்குழுவினர் சற்றே பெரிதாக்கிக் கட்டி முடித்து, சேந்தமங்கலத்துக்குச் சென்று தெரிவித்தனர்.

திருப்பணி முடிவடைந்ததைக் கேட்ட ஸ்ரீஸ்வயம் பிரகாச பிரம்மேந்திரஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள், தாமே கும்பாபிஷேகத்துக்கு நாள் குறித்துக் கொடுத்தார். அந்த நாளுக்கு முன்னமேயே, சிவிகை ஏறிப் புதுக்கோட்டை வந்து சேர்ந்தார்.

வேதியர்கள் அவரை வேத கோஷத்தோடு வரவேற்றனர். ஸ்வாமிகள் நகரை வலம் வந்து, அதிஷ்டானத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள அறையிலே தங்கியிருந்து, கும்பாபிஷேகத்தை நடத்துவித்தார்கள். தாது ஆண்டு வைகாசித் திங்கள் பதினெட்டாம் நாள் (31-5-1936) அன்று, கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

கும்பாபிஷேகம் முடிந்து, எல்லோரையும் ஆசீர்வதித்துவிட்டு, ஸ்வாமிகள் சேந்தமங்கலத்துக்குப் புறப்பட்டார். புறப்படும்போது, சிவிகையில் அமர்ந்தவண்ணம், "மஹாலிங்க மூர்த்தமாக இருக்கும் குருதேவருக்கு, நாள்தோறும் வேண்டிய மஹாநைவேத்யத்துக்கான அமுதுபடி யார் கொடுக்கப் போகிறார்களோ?" என்றார்.

உடனே "நான் கொடுக்கிறேன்!" என்றார் கானப்பேட்டையைச் சேர்ந்த சிவராமையர் என்னும் ஒரு புண்யவான். அவ்வண்ணமே, அவர் இன்றளவும் கொடுத்து வருகிறார்!

ஸ்ரீசாந்தானந்த மஹாத்மியம்

அதிஷ்டானத்தில் மஹாலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்ட நன்னாளிலே, ஆண்டுதோறும் புதுக்கோட்டையில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஊர் வலமும் நிகழ்ந்து வரவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் சேந்தமங்கலம் ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திரர். அதற்கு உரிய முறையில் ஓர் அழகான உற்சவ விக்ரகத்தை வடித்துக்கொடுக்கும் பொறுப்பை, ஒரு கைதேர்ந்த சிற்பியிடம் ஒப்படைத்தார்.

பின்னர், அவர் தம்முடைய சீடர் பன்னிருவருள் ஒருவராகிய ஸ்ரீ சந்தானந்த ஸ்வாமிகளைத் தம் அருகில் அழைத்தார்.

சாந்தானந்தர் மிகவும் இளமைப் பருவத்திலேயே வேத அத்யயனம் செய்து, பிரம்மச் சர்யத்தைக் கடைபிடித்து, ஒரு மஹாமக தினத்தன்று ஸ்வயம் பிரகாசரிடம் சன்யாசம் பெற்று தத்த சம்பிரதாயத்தில் சேர்ந்து கொண்டவர்.

அத்தகைய உத்தம சீடரை நோக்கி, "தத்தாத்ரேயரின் திருப்பரம்பரையில்வந்த ஒப்பற்ற குமாரனே! முன்னாளிலே நம் தத்த பரம்பரையில் அநேக மஹான்கள் இருந்தனர். அவர்களது திவ்ய வரலாறுகள் எல்லாம் பேணிக் காப்பர் இன்றி அழிந்து போய் விட்டன. கடைசியாக என் காலத்தில் இருந்த மஹாத்மாவையாவது, என்றும் உலகம் மறக்காதவண்ணம், உன் காலத்தில் உன்னால் இயன்ற திருப்பணியை நீ செய்து வைக்க வேண்டும்.



ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்

"நீ பொன்னாசையென்பதே சிறிதும் இல்லாத அழகிய வைராக்ய விரதம் பூண்டவன். ஆகையால் சிறிதும் பற்றற்ற நிலையில் நின்று அத்திருப் பணியைச் செய்து முடிப்பதற்கு, நீயே முற்றிலும் தகுதி வாய்ந்தவன்.

"எவரிடத்திலும் நீயாகப்போய் எப்பொருளும் கேட்க வேண்டாம். ஆனால், மெய்யன்பர்கள் தாமாகவே தரும் பொருளை ஏற்றுக்கொண்டு, திருப்பணியைச் செய்து முடி. எவரையும் நீயாகவே வேலையிடாதே! ஆனால், பக்தர்கள் தாமாகவே பணிபுரிய முன் வந்தால், அவர்கள் அந்தப் புண்ணியத்தைத் தேடிக் கொள்வதற்கு உதவி செய்!" என்று ஆணையிட்டருளினார் ஸ்வயம் பிரகாச ஸ்வாமிகள்.

குருதேவரின் அந்த ஆணையைத் தலைமேல் தாங்கியவராய், சாந்தானந்தர் புதுக் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்

அமிகுள்ள தமது பரமகுரு (அதாவது, குருவுக்கு குரு) வின் அதிஷ்டானத்தை அடைந்து, ஒரு வேப்பமரத்தின் அடியிலே தவக் கோலத்தில் அமர்ந்தார்.

நகர்ப்புறத்தே ருத்ரபூமிக்கு அருகேயுள்ள அந்த அதிஷ்டானத் தில், தன்னந்தனியராக, இராப் பொழுதிலும் அச்சமில்லாத வராக மௌன விரதம் பூண் டிருந்த அந்த மஹானை, துவக்க காலத்தில் எவருமே பிக்ஷைக்கு அழைக்கவில்லை. அதனால், பல நாட்கள் அவர் வெறும் வேப் பிலையையே உணவாக உட் கொண்டார்.

இளந்துறவியொருவர் இவ்வாறு தவம் புரியும் செய்தி, சிறிது காலத்திற்குப் பிறகு ஊரெங்கும் பரவியது. உடனே நல்லோர்கள் பலர் அவரைப் பார்ப்பதற்காக நாடி வந்தனர். வந்து அவ ருடைய பாதங்களில் பணிந்து, அவருக்குத் தாம் செய்யத் தக்கவையாதேனும் உளதாயின், அதனைத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டனர்.

அப்போது மௌன விரதம் பூண்டிருந்த சாந்தானந்தர், தமது குருதேவரின் ஆணையை அவர் களுக்கு எழுத்தால் எழுதிக் காட்டினர்.

உடனே, அதிஷ்டானத் திருப் பணிக்குத் தேவையான பொரு ளுதவிகளையும் பிற உதவிகளையும் செய்வதற்கு "நான்! நான்!!" என்று போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தனர் பல புண்யசீலர்கள்.

அதிஷ்டானம் இருந்த தோட்ட நிலத்தை அதற்கு உரியவராய் இருந்த ஸ்ரீபாலசுப்ரமணிய சாஸ்திரிகள் பூதானமாய் வழங் கினர்.

தத்தாத்ரேயர் தண்டாயுத பாணி, விநாயகப் பெருமான் இம்மூவருக்கும் சிலாவிக்ரகங்கள் செய்துகொடுக்கும் பொறுப்பைச் சில தர்மாத்மாக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

முன்மண்டபம் அழகுற அமைக்கப்பட்டது. ஸதாசிவ அதிஷ்டானம் சிறிது பெரிதாக்கப் பட்டது. மஹாலிங்கத்தின் அருகே தத்தாத்ரேயரும், தெற்கே கணபதியும், வடக்கே பாலமுருகனும் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். கர்ப்பகிரஹம் அர்த்தமண்டபம், பிராகாரம், இவற்றோடுகூட ஒரு மணிக்கட்டு மண்டபமும் எழுப்பப்பட்டது. ஒரு நந்தவனமும் யாக சாலையும் அமைக்கப்பட்டன.

இந்த ஆலயத்தில் புவனேசுவரி ஓவிய வடிவத்தில் தெற்குநோக்கி அமர்ந்திருந்து, திருவருள் மழை பொழியத் தொடங்கினள்.

துர்முகி வருஷம் வைகாசி மாதம் 7'ம் நாள் (20-5-1956) அன்று, இவ்வாலயத்தின்

கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்தனைக்கும் சாட்சி மாத்திர மாக இருந்து, தம்முடைய சன்னிதியின் மஹாத்மியத்தா லேயே பல பக்தர்களையும் ஈர்த்து இத்திருப்பணிகளில் ஈடுபடுத்தி அவர்களைப் பெரும் புண்யவான் களாக்கி, தம் ஆச்சார்யேந்திரரின் கட்டளையைக் கண்ணுங்கருத்து மாய் நிறைவேற்றி முடித்தார் ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த முனீந்திரர்.

அத்துடன், அவருடைய இஷ்ட தெய்வமாகிய ஜகன்மாதா ஸ்ரீ புவனேஸ்வரிக்கும் அதிஷ்டானத் திலேயே ஒரு சிறப்பான ஆலயம் அமைத்து, அதில் புவனேஸ் வரியை அழகிய சிலா ரூபத்தில் பிரதிஷ்டை செய்து, சுபகிருது வருஷம் வைகாசிமாதம் சதுர்த்தி திதியும் பூச நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்திலே, எவரும் கண்டும் கேட்டுமிராத வைபவத்தோடு கும்பாபிஷேகமும் நடத்து வித்தார்.

இதற்கிடையில் ஸ்ரீ ஸ்வயம் பிரகாசபரமஹம்ஸர் விதேஹகை வல்யம் எய்தி விட்டதால் சேந்த மங்கலத்தில் எஞ்சி நின்ற சில திருப்பணிகளைச் செய்து முடிப்ப தற்காக, ஸ்ரீ சாந்தானந்தர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

சேந்த மங்கலத்தில் புதிய மண்டபங்களும், உறையுளும், தருமசாலையும் பிறவும் சிறப்புற அமைத்தார்.

பின்னர், சேலத்துக்கு அருகே உள்ள ஒரு சிறு குன்றிலே முருகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் சமைத்து, அதை ஸ்கந்தகிரி யாகவும் ஸ்கந்தாசிரமமாகவும் ஆக்குவிக்கும் திருப்பணியில் ஈடு படலானார்.

புதுக்கோட்டையில் அமைந் துள்ள ஸ்ரீ ஸதாசிவ அதிஷ் டானத்தில், லோக க்ஷேமார்த் தம் எண்ணற்றஹோமங்களையும், லக்ஷார்ச்சனைகளையும், இன்னும் பிற புண்ணியச் செயல்களையும் அவர் இடையறாது நடத்திக் கொண்டு வருகிறார்.

பக்தகோடிகளிடையே ஒரு நடமாடும் தெய்வமாக விளங்கி, தம்முடைய கனிவு ததும்பும் கடைக்கண் பார்வையாலேயே அவர்களைக் கடைத்தேற்றி வருகிற ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய வர்யரும்;

அவரது தத்தகுருபரம்பரையும்;

இந்நிலவுலகெங்கும் நெடும் புகழ் பரப்பி நீடூழி வாழுமாறு;

அன்னை ஸ்ரீ புவனேஸ்வரியின் பொற்பாதகமலங்களைப் போற்று வோமாக!

ஸ்ரீ சாந்தானந்தர் அருள்வாக்கு

பற்றற்று, பயமற்று, சினமற்றிருக்கும் மனதே சீரிய மனதாகிறது.

நீ மேலோன் ஆகவேண்டுமானால், உன் இந்திரியங்களை அடக்கி ஆள்.

புலன்களின் வேட்கையிருக்குமளவு, நீ துன்பப்பட்டே ஆகவேண்டும்.

ஆசை உன்னைக் கெடுக்கும் நித்திய சத்துரு என்று அறிந்து கொள்.

ஸம்சய மனமுடையவனே எல்லோரிலும் மிகப் பெரிய பாபி.

ஸம்சயமுள்ளவனுக்கு இவ்வுலகமும் இல்லை. பரலோகமும் இல்லை.

நம் நிழல் நாம் எங்கு சென்றாலும் கூடவே வருவதைப் போல, நாம் செய்த தீமையின் விளைவு நம்மைத் துரத்திக் கொண்டே வரும்.

பிறருடைய விருப்பினாலோ வெறுப்பினாலோ ஒருவன் உயர்வு தாழ்வு அடைவதில்லை.

அவனவன் செய்கையின் விளைவாகத்தான், மதிப்போ அவமதிப்போ அடைகிறான்.

உயிர் போகும் நிலைவந்தாலும் செய்யத் தகாதவைச் செய்யக் கூடாது. செய்யத் தகுந்ததையும் விடக் கூடாது. இதுவே நல்லோர்களின் தர்மம்.

மனமே! நீ பிறரைப் பிழை செய்கிறான் என்கிறாயே? அப்பிழையை நீ செய்ததில்லையோ? மழைக்கு இடியாகிய குற்றமுண்டு. சந்திரனுக்கும் குறை இருப்பதைப் பார்க்கிறோம். உன்னையே நீ எண்ணிப்பார்.

கடவுள் ஒருவரே குற்றம் இல்லாதவர். ஆதலால் நெஞ்சே, நீ யாரையும் தீயோர் என்று வெறுத்தல் ஆகாது.

ஸம்சய மனமுடையவர்களுக்காகவேதான், கோர நரகம் சிருஷ்டியாகி இருக்கிறது.

அடைக்கலம் புகுந்தவனுக்கு மன அமைதி உடனே உண்டாகும்.

பேத புத்தி உள்ள வரை, பயம் நீங்காது. பயம் நீங்காத வரை, முக்தி இல்லை.

நீ சுகம் பெறுவதற்குத் தியாகம் ஒன்றே உற்ற உபாயம் என்பதை மறவாதிருப்பதே நற்றுணையாகும்.

உன்னையே குருவிற்கு அர்ப்பணம் செய்வாயானால், நீ செய்ய வேண்டிய யாவும் செய்து விட்டவனாவாய்!

தூண்டுதலின்றி தாமாகவே செய்யும் குரு கைங்கர்யங்களே, உண்மையான கைங்கர்யமாகும்.

தியாகத்தை வளர்ப்பதற்குச் செயல் புரிதல் யாகம். போகத்தை வளர்ப்பதற்குச் செயல் புரிதல் பாபம்.

மனிதனுடைய மேன்மைகளையெல்லாம், பொறுமையானது தேய்த்து விடுகிறது.

ஆசை என்னும் திரையினால் உன் ஆத்ம சொரூபம் மூடப்பட்டிருப்பதை அறிவாயாக!

வெளியுலகில் காணும் கேடுகளெல்லாம், உன் மனத்தில் இருக்கும் கேட்டின் புறத்தோற்றங்களாம்.

ஆசையற்ற மனநிலைக்குச் சமானமான சுகம், ஸ்வர்க்கத்திலும் இல்லை; கைலாயத்திலும் இல்லை.

★



உபந்யாஸச் சக்ரவர்த்தி சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராமதீக்ஷிதரவர்களும், ஸ்ரீ சாந்தானந்தஸ்வாமிகளும்.

ஸ்ரீ புவனேஸ்வரியின் மஹிமை

டாக்டர் எஸ். சூரி

ஸ்ரீ புவனேச்வரியின் மஹிமையை சாஸ்திரங்கள் மிக விரிவாகக் கூறுகின்றன.

புவநேசீத்யேவ வக்த்ரே ததாதி
புவனத்ரயம்
மாம் பாஹீத்யஸ்ய வசஸ :
தேயாபாவாத் ருணான்விதா

பக்தனொருவன், அன்னை தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன், ''ஹே புவனேச்வரீ!'' என்றழைத்தவுடன், அன்னை கருணை மிகுந்தவளாய், பக்தனுக்கு மூவுலகங்களையும் கொடுத்து விடுகிறாள். அதனால் அந்த பக்தன் திரிபுவன ஆதிபத்யத்தையும் பெற்று விடுகிறான்!

பிறகு அவன் ''என்னைக் காப்பாற்று'' என்கிறான். அதனால், அந்த பக்தனுக்கு அவள் கடனாளியாகி விடுகிறாள்!

பக்தனுக்கு அருள் புரிவதில் இவ்வளவு விரைவான கருணை ஸ்ரீ புவனேச்வரீக்கு இருக்குமானால, யார்தான் அந்த தெய்வத்தை ஸேவிக்க முன்வர மாட்டார்கள்?

ஸ்ரீ புவனேச்வரியின் திருநாமம் மிகச் சிறப்பு வாய்ந்தது. தேவி



டாக்டர் எஸ். சூரி

பாகவதம் அன்னையின் திருநாமச் சிறப்பைப் பற்றி கூறுவது:

அன்னையே! உலகங்களை ஆக்கிக் காக்கும் அக்ஷரங்கள் நிறைந்த தாய், இவ்வுலகங்களை இரட்சிக்கும் பொன்னையும் பொருளையும் மழைபோல் வர்ஷிப்பதாய், ஆதி சேஷனுக்கும் திக் கஜங்களுக்கும் உலகைத் தாங்கும் திறமையையும் அளித்து வருவதாயிருப்பதால், புவனேச்வரி என்னும் உமது திருநாமம் மிகப் பொருத்தமாய் அமைந்திருக்கிறது.

''கோடிக் கணக்கான லக்ஷ்மீ தேவிகளைக் காட்டிலும் அதிகக் காந்தியுடன், அருணவர்ணமாய்,



ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளும், அவர்களது குருநாதராகிய ஸ்ரீ ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திரரும்.

கருணை மூர்த்தியாய், நவ யௌவன குமாரியாய், ஹருல் லேகை முதலிய அமர கன்னிகைகளாலும் அநங்குஸுமா முதலிய தேவிகளாலும் சூழப்பெற்று, மஹாயந்திரத்தின் மேல் ஷட் கோண மத்தியில் வரபாசாங்குச அபீதி ஹஸ்தங்களுடன், தேவதைகளுக்கு தர்சனம் கொடுக்கும் கோலத்துடன் என் முன்வந்து காப்பாற்றுவாயாக!'' என நாம் தியானித்தால், ஸ்ரீ புவனேச்வரி நமக்கு சகல அபீஷ்டங்களையும் தருகிறாள். எங்கும் நிறைந்திருக்கும் ஸ்ரீபுவனேச்வரி தேவி, ஸூர்ய மண்டலத்தில் பிரகாசத்தையும், சந்திரனிடத்தில் குளிர்ச்சியையும், அக்னியில் வெம்மையையும், தாமரையில் அழகையும் தந்து உலகை வாழவைக்கிறாள்.

பொன் இன்றிக் குண்டலம் செய்ய இயலாது. மண் இன்றிக் குடம் செய்ய இயலாது. அது போல் அன்னை புவனேச்வரியின்றி இறைவன் உலகை சிருஷ்டிக்க இயலாது.

உலகங்கள் அனைத்திற்கும் அன்னையாக விளங்கும் ஸ்ரீ புவனேச்வரி, உயிர்கள் அனைத்தையும் தாயாக நின்று காக்கின்றாள். விருப்பு, வெறுப்பு, வேண்டுதல் வேண்டாமை முதலியவற்றைக் கடந்து நிற்கும் அன்னை, தன்னை மறவாது வழிபடும் பக்தர்களை அருட்கண்களுடன் நோக்குகின்றாள். அதனால் எண்ணற்ற நலன்களை பக்தன் பெறுகிறான்.

''தாயை மறந்த தீய மகனைக் காணலாம்; ஆனால் சேயை மறந்த தாயைக் காண இயலாது'' என ஆதி சங்கரர் அருளியவாறு, இப்புவி வாழ் மக்களைக் காப்பதில் அன்னை கண்ணும் கருத்துமாய் விளங்குகிறாள்.

அன்னை புவனேச்வரி வேதங்களைத் தானே தோற்றுவித்து, தானே வேதப் பொருளாயும் விளங்குகின்றாள். அன்னையின் மாண்பை மறைகளும் மகிழ்ந்துரைக்கின்றன ''விண்ணுலகம் உன்னுடைய முடியாக விளங்குகின்றது. மண்ணுலகு உன்னுடைய நாபியாகத் திகழ்கின்றது. எனவே திசைகள் அனைத்தையும் நீயே தாங்குகிறாய். உலகங்கள் அனைத்தும் உனது ஆணைவழியாக இயங்குகின்றன'' என்பது வேதங்களின் கருத்தாகும்! எனவே, அன்னையின் திருவடி மலர்களை நம் இதயத்தில் இருத்தி இடையறாது வழிபடுவோமாக!

○

ஓர் அற்புதக் காட்சி

ஸ்ரீ ஆர். இராகவாச்சாரி



ஸ்ரீ ஆர். இராகவாச்சாரி

நான் இங்கே கூறப்போகிற நிகழ்ச்சி, நமது ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளிடமிருந்து கேட்டறிந்தது அல்ல. ஸ்வாமிகளோடு நெடுங்காலம் நெருங்கிப் பழகிய ஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் சொன்ன செய்தி இது.

சாஸ்திரிகளுடைய தந்தையார் ஸ்வாமிகளிடம் மிகவும் ஈடுபாடு உடையவராம். சாஸ்திரிகள் இளம் வயதினராயிருக்கும்போது தம் தந்தையின் ஆணைப்படி அடிக்கடி ஸ்வாமிகளிடம் சென்று, அவருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருப்பாராம்.

அதிஷ்டானக் கட்டடத் திருப்பணிகள் நடந்து கொண்டிருந்த காலம் அது. நன்கொடையாக வந்த பணம் எல்லாம் செலவாகி விட்டது. மறுநாள் காலையில், வேலை செய்தவர்களுக்குக் கூலி கொடுப்பதற்கும், மற்றும் சில முக்கியமான செலவுகளுக்கும், பெரும்பணம் தேவையாயிருந்தது. அதற்கு என்ன ஏற்பாடு செய்வதென்று யாருக்கும் தோன்றவில்லை. ''எல்லாம் குருநாதருடைய திருவுளப்படி நடக்கும்!'' என்ற முடிவோடு, ஸ்வாமிகள் துயில் கொள்ளச் சென்றுவிட்டார்.

ஸ்வாமிகளுக்குப் பக்கத்தில், இளைஞர் சுந்தரேச சாஸ்திரிகளும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நடுஇரவில், அவருக்கு ஏனோ திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. கண்ணைத் திறந்து பார்க்கும்போது, ஸ்வாமிகள் தம்முடைய யோக மஹிமையால் தரையிலிருந்து ஓர் அடி உயரத்திற்கு மேல் அந்தரத்திலே சயனித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

கண்டதும், வியப்பு உணர்ச்சி மேலிட்டவராய், ''ஸ்வாமீ!'' என்று கத்தி விட்டார்.

ஸ்வாமிகளும் தம்முடைய யோகம் கலைந்து, அவரை அதட்டிப் பேசாமலிருக்கச் செய்து விட்டு, மீண்டும் எல்லோரையும் போல் தரையிலே சயனித்துக் கொண்டார்.

மறுநாள் காலையில் சாஸ்திரிகள் எழுந்து தம் வீட்டுக்குச் சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து அவர் அதிஷ்டானத்துக்குத் திரும்பி வந்தபோது, வாசலிலே ஒரு கார் வந்து நின்றது.

சேலத்தைச் சேர்ந்த ஒரு பெரிய தனிகர், காரை விட்டு இறங்கி உள்ளே சென்று, ஸ்வாமிகளை நமஸ்கரித்தார். ஆறாயிர ரூபாய் அடங்கிய ஒரு பணமுடிப்பையும் அவர் ஸ்வாமிகளிடம் கொடுத்தார்.



பக்தர்கள் பூஜிப்பதற்காக ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் வழங்கியுள்ள ஸ்ரீ புவனேஸ்வரிவிக்ரஹம்.

''நேற்றிரவு நீங்கள் சேலத்திலே என் வீட்டு வாசல் வரையில் வந்து, உள்ளே நுழையாமலும் என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமலும் திரும்பிவிட்டதுபோல், எனக்கு ஒரு தோற்றம் ஏற்பட்டது. அதிஷ்டானத் திருப்பணிக்கு ஏதோ அவசரமான பணத் தேவையிருப்பது போலவும், என் உள்ளத்தில் பட்டது. அதனால்தான் உடனே இந்த ஆறாயிர ரூபாயும் கையில் எடுத்துக்கொண்டு, காரில் புறப்பட்டு வந்தேன்!'' என்றார் அந்த தனிகர்.

ஸ்வாமிகள் புதுக்கோட்டையிலும் சேலத்திலும் ஒரே சமயத்தில் எப்படிக் காட்சியளிக்க முடிந்தது என்பது, சாஸ்திரிகளுக்கு ஒரு பெரிய புதிராய் இருந்தது. நமக்கும் வியப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் ஸ்வாமிகளிடம் அதைப் பற்றி நாம் கேட்க முடியுமா?

ஸ்வாமிகளைப் போன்ற உண்மையான மஹாத்மாக்கள், அணிமாதி அஷ்ட சித்திகளுக்காக ஆசைப்படுவதில்லை. ஆனால் அந்த சித்திகள் தாமாகவே அவர்களை வந்து அடைகின்றன. தேவையான சமயத்தில் அவர்களுக்கு வேண்டிய கைங்கர்யங்களைச் செய்ய காத்து நிற்கின்றன. அத்தகைய ஒரு கைங்கர்யத்தைத் தான், சாஸ்திரிகள் தமது கண் எதிரே காணும் பாக்கியம் பெற்றார்.

சாஸ்திரிகள் இப்போது மாயூரத்தை அடுத்துள்ள போழக்குடியென்னும் ஊரில், உயர்நிலைப் பள்ளி லைப்ரேரியனாகப் பணி புரிந்து வருகிறார்.

புதுக்கோட்டை அதிஷ்டானம்

காரியதரிசி ஸ்ரீ S வைத்யநாத சாஸ்திரிகள்

1935ஆம் வருஷத்தில் சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் ஜீவிய சரித்திரம்—''ஸ்ரீ ஸ்வயம் பிரகாச விஜயம்''—வெளி வந்தது. அதில் வெளியாகி இருந்த ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளின் உருவப்படம் பார்த்தவர்கள் மனத்தை இழுத்தது. புத்தகத்தைப்படித்ததும் அந்த மகானை தரிசிக்க வேண்டுமென்ற ஆர்வம் புதுக்கோட்டையில் பலருக்கு ஏற்பட்டது.

அக்காலத்தில் புதுக்கோட்டை சீப்கோர்ட்டு ஜட்ஜாகயிருந்த ஸ்ரீ P. V. ரகுநாதய்யர் அவர்கள் தலைமையில, சிலர் அவதூத ஸ்வாமிகளைப் பார்ப்பதற்காகச் சென்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்ய தரிசனம கிடைத்தது. அந்த திவ்ய ரூபத்தைத் தரிசித்த அளவில், மனத்தில் உள்ள கல்மஷம் எல்லாம் அற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள் நக்நமாய் இருப்பதுகூட ஸஹஜமாகப் பட்டதே ஒழிய, ஸ்திரீ புருஷர்கள் யாருக்கும் எவ்வித விகல்ப எண்ணங்களே தோன்றவில்லை.

ஸ்ரீ ஸ்வாமிகள் அப்பொழுது சொன்ன சில வார்த்தைகளே இந்த அதிஷ்டானக் கட்டிடம் புதுக்கோட்டையில் தோன்றக் காரணமாயிற்று. அவர்கள் சொன்னதாவது :— ''இங்கு வந்து என்னைப் பார்ப்பதில் ஒன்றுமில்லை. உங்கள் ஊரில் என் குருநாதர் சமாதி ராஜாக் குளத்தின் கீழ்கரையில் உள்ள காம்பவுண்டுக்குள் இருக்கிறது. அதன் மேல் ஒரு சிறு ஆலயமோ அல்லது துளசிமாடமோ கட்டி, விளக்கேற்றி வைத்து இருகாலம் பூஜை செய்து வந்தால், உங்கள் ஊருக்கே க்ஷேமம் உண்டாகும்.''

எப்பொழுதும் எந்த தர்ம கைங்கர்யத்துக்கும் முன்னின்று ஊக்கத்துடன நடத்தி வைக்கும் ஸ்வபாவமுள்ள ஸ்ரீ P. V. ரகுநாதய்யரவர்கள், கொஞ்சங்கூடத் தயக்கமின்றி, ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னபடி ஆலய நிர்மாணம் செய்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் சீக்ரமே தெரிவிப்பதாய் ஒப்புக் கொண்டார். தரிசனம் செய்த கோஷ்டியார் புதுக்கோட்டை திரும்பி வந்ததும், ஸ்ரீ P. V. ரகுநாதய்யரவர்கள் ஸத்குரு கைங்கர்யத்துக்குத் தீவிர முயற்சிகள் செய்தார்.

அதிஷ்டானம் அமைந்துள்ள ஸ்தலத்துக்குச் சொந்தக்காரரான ஜட்ஜ் ஸ்ரீ A. பத்மநாப சாஸ்திரிகள் முன்பே காலமாகி விட்டதால், அவர் பத்தினி ஸ்ரீமதி தேவநாயகி அம்மாளும், அவர் குமாரர் அட்வகேட் ஸ்ரீ P. பால

சுப்ரமணிய சாஸ்திரிகளும், அந்தக் காம்பவுண்டுக்குள் உள்ள ஸ்தல முழுவதையும் இந்த ஸத்குரு அதிஷ்டான நிர்மாணத்திற்காக மகிழ்ச்சியுடன் இனமாகக் கொடுத்தார்கள்.

ஆனால் அந்தத் தோட்டத்துக்குள் எந்த இடத்தில் சமாதி என்று எப்படிக் கண்டுபிடிப்பது? ஸ்ரீ அவதூத ஸ்வாமிகள் அமானுஷ்யமான ஞான த்ருஷ்டியால் அறிந்து சொன்ன அளவுகளைக் கொண்டு பார்க்க, பழைய சமாதியின் இடம் கண்டுபிடிக்கப் பட்டது. காம்பவுண்டில் முன்புறமும் பின்புறமும் ஏற்கனவே இருந்த கதவுகள், இந்த அதிஷ்டானத்துக்கு மையம் எடுத்து வைக்கப் பட்டதுபோல் அமைந்திருந்ததும் ஓர் ஆச்சர்யம்.

1936ல் அதிஷ்டானக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. சேந்தமங்கலம் ஸ்வாமிகளின் சிஷ்யரான ஸ்ரீ சங்கரானந்த ஸ்வாமிகள், அதிஷ்டானம் கட்டமிருந்த பிரயாசை எடுத்துக் கொண்டார்கள் ஸ்ரீ சேந்தமங்கலம் ஸ்வாமிகள் ஏற்கெனவே தான் பூஜையில் கொண்டு வந்து வைத்திருந்த நர்மதா பாண லிங்கத்தைக் கொடுத்து. இந்த அதிஷ்டானத்தில் பிரதிஷ்டை செய்யச் சொன்னார்கள். அதைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் 1936–ல் சேந்தமங்கலம் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளால் செய்யப்பட்டது.

கும்பாபிஷேக காலத்தில் ஸ்ரீ அவதூத ஸ்வாமிகளுக்குப் பிக்ஷையும் பிராம்மண சந்தர்ப்பணமும காணப்பேட்டை ஜி. சிவராம சாஸ்திரிகளால் செய்யப்பட்டது. ஸ்வாமிகள் பிக்ஷை முடிந்ததும், சிவராம சாஸ்திரியிடம், ''மூன்று நாளாய்ச் சாப்பாடு போட்டு விட்டாய். கும்பாபிஷேகம் முடிந்து விட்டது. நாளை முதல் ஸத்குருநாதர் பட்டினி கிடப்பாரா?'' என்றார். ஸ்வாமிகள் குறிப்பை அறிந்த சிவராம சாஸ்திரிகள் ''நைவேத்யத்துக்கு என் சக்திக்குத் தக்கபடி செய்கிறேன்'' என்றார். ''ஒரு நாளைக்கு கால்படி வீதம், ஒரு வருஷத்துக்கு வேண்டிய அரிசிக்கு நீ ஏற்பாடு செய்; உனக்கு க்ஷேமம் உண்டாகும்'' என்றார் ஸ்வாமிகள்.

அதுமுதல் சிவராம சாஸ்திரிகள் நாள் ஒன்றுக்கு $\frac{3}{8}$ படி அரிசி வீதம் கொடுத்து வந்தார். இப்பொழுது அவர் மாதம் ரூ. 15



தமது குருநாதராகிய ஸ்ரீ ஸ்வயம் பிரகாச பிரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் திருமேனிக்கு விபூதியபிஷேகம் செய்கிறார் ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள்.

விதம் கொடுத்து வருகிறார். ஸ்வாமிகள் ஆசீர்வாதத்தால் சிவராமசாஸ்திரிகளும் அவர் குமாரனும் சௌக்கியமாகவே இருக்கிறார்கள்.

அதிஷ்டானம் ஒரு அழகிய ஆச்ரமமாய் விளங்கி வந்தது. உள்ளே நுழைந்தவர்களுக்கு மனோநிம்மதி கிடைத்தது. கைவல்யானந்தா என்ற தாதா ஸ்வாமிகள் இந்த அதிஷ்டானத்திலே இருந்து சமாதி அடைந்தார்கள். அவர்கள் சமாதியும் வடகிழக்கு மூலையில் அமைந்தது.

சில வருஷங்களுக்குப் பிறகு, சேந்தமங்கலம் ஸ்வாமிகளின் சிஷ்யர்களான ஸத்குரு ஸ்ரீசாந்தானந்த ஸ்வாமிகள் அடிக்கடி வந்து அதிஷ்டானத்தில் பூஜை நடந்து வருவதைக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகப் பக்தர்களை இந்தக் கைங்கர்யத்தில் ஈடுபடுத்தி வந்தார்கள். தினமும் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் செய்யும்படி ஊக்குவித்து, ஸஹஸ்ரநாம பாஷ்யம், வால்மீகி ராமாயண ப்ரவசனம் முதலியவை தினசரி நடத்தும்படி ஏற்பாடுகள் செய்தார்கள். நாளுக்கு நாள் அதிஷ்டான பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. வருஷந்தோறும் கும்பாபிஷேகம் நடந்த திருநக்ஷத்திரத்தில் வருஷோத்ஸவம் நடந்து வந்தது.

ஒரு சமயம், அதிஷ்டானத்தின் முன் இருந்த கீற்றுக் கொட்டகையில், ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் முன்பாக விஷ்ணுசகஸ்ர நாம பாராயணம் நடந்து கொண்டிருந்தபோது, மழை பெய்து கீற்றுக் கொட்டகையெல்லாம் ஒழுகி எல்லோரும் நனைந்து போக நேரிட்டது. அப்பொழுது ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் கீற்றுக் கொட்டகையை ஒரு மண்டபமாகக் கட்ட ஸங்கல்பித்தார்கள்.

கீற்றுக்கொட்டகையைப்பழுது பார்க்கக் கூடப் பணமில்லாத நிலையில் எப்படி மண்டப நிர்மாணம் செய்யமுடியுமென்று தயங்கினோம். ஸ்ரீ ஸ்வாமிகள் ஸங்கல்பம் ஸத்ய ஸங்கல்பமென்று உலகமறியும்படி, ஸ்ரீ ஸ்வாமிகள் முயற்சியால் ஒரு அழகான மண்டபம் நிர்மாணமாகி, ஸ்ரீதத்தாத்ரேய பகவானின் உத்ஸவ விக்ரஹமும் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு, ஒரு கும்பாபிஷேகம் 1956-ல் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. மண்டபத்தின் அமைப்பு அதில் ப்ரவேசித்தவர் ஒவ்வொருவரும் தானாகவே அங்கு அமர்ந்து த்யானத்தில் ஈடுபடும் வண்ணமும், சாந்தியை பரப்பும் வண்ணமும் அமைந்திருந்தது. 1957-ல் ஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு மஹா கணபதி ஹோமம் விரிவாக நடத்தினார்கள். 1958-ல் மஹாருத்ரமும் 1959-ல் ஒரு லக்ஷ நவக்ரஹ ஹோமமும் நடத்தினார்கள்.

1956-ல் கும்பாபிஷேகம் நடந்த சமயம், ஸ்ரீ ஸ்வாமிகள் சொல்படி ஒரு சிற்பி ஸ்ரீ புவனேச்வரி தேவியின் படம் ஒன்று எழுதி அதிஷ்டானத்தில் கொண்டு வந்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸமர்ப்பித்தார். அந்தப் படம் ஸ்ரீ தேவியின் ஸ்வரூபத்தைப் பார்த்தவர்கள் மனதில் பதிய வைத்தது. அந்தப் படத்தில் ஆவாஹனமான ஸ்ரீ புவனேச்வரி தேவிக்கு நித்ய ஆராதனமும் விசேஷ தினங்களில் லக்ஷார்ச்சனைகளும் நடந்து வந்தன.

1959-ல், ஸ்ரீ புவனேச்வரியின் அழகான பஞ்சலோக விக்ரகம்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளும் ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளும்.

ஒன்று ஸ்ரீ ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆராதனம் செய்யப்பட்டு வந்தது. ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ தேவியின் மூலஸ்தானம் ஒன்று அமைக்க வேண்டுமென்ற எண்ணமும் உதித்தது. அதற்கும் ஸ்ரீதேவியின் அருளால் பல பக்தர்கள் முன்வந்து உதவினார்கள் அதன் பயனாய், ஒரு அழகான ஸந்நிதி அமைக்கப்பட்டது. இந்த ஸந்நிதிக்கு ஏற்பட்ட கட்டிடம் நிர்மாணம் செய்து கொண்டிருந்த பொழுது, புதுக்கோட்டைக்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள், அதிஷ்டானத்துக்கு விஜயம் செய்து ஸ்ரீ புவனேச்வரியின் உத்ஸவ விக்ரகத்தைத் தரிசித்து, ஸ்ரீ தேவிக்கு ஸந்நிதி நிர்மாணமாகிக் கொண்டிருப்பதையும் பார்த்து அனுக்ரஹம் செய்தார்கள். ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் ஸ்ரீ ஆசார்யாள் வருகையை நடமாடும் காமாக்ஷியே நேராக வந்து அனுக்ரஹித்ததாய்க் கருதினார்கள். ஸ்ரீ தேவியின் ஸந்நிதிக் கட்டிடமும் முடிந்தது. ராஜ

கோபுரமும் கட்டி முடிக்கப்பட்டது. ஸ்ரீ தேவியின் திவ்ய சிலா விக்ரஹமும் 5½ அடி உயரத்தில், உட்கார்ந்த அவசரத்தில், திருமுருகன் பூண்டி சுப்ரமணியஸ்தபதியால் செய்யப்பட்டு, 1962 ஜுலை மீ 6 உப்ரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக ஸ்ரீ ஸ்வாமிகளால் செய்யப்பட்டது. கல்யாண மண்டபமும், யாக சாலையும், பாடசாலையும் அழகாக அமைக்கப்பட்டன. மண்டலாபிஷேக சமயம் ஒரு சத சண்டி ஹோமம் நடந்தது 963-ல் ஒரு ஸஹஸ்ர சண்டி ஹோமமும், 1964-ல் ஒரு ஸ்ரீ ஸௌக்த லக்ஷ மஹா கணபதி ஹோமமும் நடைபெற்றது. 1965-ல் ஸ்ரீ கோடி புவனேச்வரி மூலமந்த்ர மஹாயக்ஞும் நிகழ்வுற்றது. அண்மையில் ஸ்ரீ மஹா லக்ஷ்மியஜ்ஞும் சிறப்பாக நடைபெற்றது. எதிர்காலத்தில் இன்னும் எத்தனையோவகையான யஜ்ஞங்கள் நடைபெறவிருக்கின்றன.

அதிஷ்டான வளர்ச்சியையும் பணம் பெருகிவருகிறதையும் பார்க்க, அரசர்கள் நடத்திநின்று போன நவராத்ரி முதலிய பூஜைகளைத் துறவி வேந்தனை ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் மூலம் ஜகன்மாதா ' நடத்திக் கொள்கிறாளோ என்று தோன்றுகிறது.

★

நடமாடும் தெய்வம்



ஸ்ரீ வி. எஸ். குப்புசாமி

சாக்தம் என்பது, சைவத்துக்கும் வைஷ்ணவத்துக்கும் பொதுவான ஒரு சமயம். அந்த சாக்த சமயத்துக்கு அதிதேவதை ஸ்ரீ புவனேச்வரீ மாதா.

அம்பிகையைச் சிவனுக்குப் பத்தினியென்றும், விஷ்ணுவுக்குத் தங்கையென்றும் சொல்லுவார்கள். அதுபௌராணிக மரபு.

சிவபரம் பொருளிடத்தே விளங்குகின்ற ''நான்'' என்னும் உணர்வே, பரதேவதையின் உண்மையான சொரூபம். ''புரமதிது; ஆஹோபுருஷிகா'' என்கிறார் ஆதிசங்கரர். சிவம் வேறு— அம்பிகை வேறு அல்ல என்பது அதன் உட்கருத்து.

அதே போல், விஷ்ணு வேறு— அம்பிகை வேறு அல்ல என்பதையும் நாம் அறிய வேண்டும். அம்பிகைக்கு சிவா என்ற ஒரு பெயர் இருப்பது போலவே, வைஷ்ணவீ என்ற இன்னொரு பெயரும் இருக்கிறது விஷ்ணு ரூபிணீ, கோவிந்த ரூபிணீ என்றெல்லாம், ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரத்திலே அவள் பேசப்படுகிறாள். சிவஸ்வரூபமாக மட்டும அல்ல, விஷ்ணுவின் வடிவமாகவும் அவளே விளங்குகிறாள் என்பது அதன் பொருள்.

அத்தகைய புவனேஸ்வரி மாதாவே நம்மனோரைக் கடைத்தேற்றுவதற்காக ஒரு மானிட வடிவம் தாங்கிக் கால் நிலந்தோய வந்தாற் போன்று, நம்மிடையே காட்சியளிக்கிறார் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள்.

உலக க்ஷேமத்திற்காக அவர்கள் ஆற்றி வருகிற அரும்பெரும் பணிகளின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் ஆற்றல் எனக்குக் கிடையாது ஆனால், அவர்களுடைய திருவடித் தாமரைகளில் சரண் புகுந்து விட்டால், அப்புறம் நம்முடைய யோக க்ஷேமங்களையெல்லாம் ஜகன்மாதா புவனேஸ்வரியே கவனித்துக் கொள்வாள் என்ற ஒன்றை மட்டும் நான் உறுதியாக அறிவேன்!

இந்தப் பேருண்மையை நான் அறிவதற்குக் காரணமாயிருந்த (ஸ்ரீ ராம்லோக் & கம்பெனி அதிபர்) ஸ்ரீ ஆர். இராகவாச்சார்யார் அவர்களுக்கு, நான் எவ்வளவு கடப்பாடு உடையவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கண்கண்ட உண்மை

திருச்சிராப்பள்ளி அல்லிமால் தெருவில் உள்ள குப்தா பேப்பர் மார்ட்டின் உரிமையாளர் ஸ்ரீ எஸ். சந்திர குப்தா அவர்கள், நமக்குப் பின் வருமாறு எழுதியுள்ளார் :

''அருள்'' பத்திரிகையின் ஆனி மாத இதழில், கச்சியப்பமுனிவர் அருளிச் செய்த காரிய சித்திமாலை வெளிவந்துள்ளது. அதனையே, விநாயகர் தோத்திராட்டகம என்ற பெயரில் வெளியிட்டு, கீலக ஆண்டு விநாயக சதுர்த்தி அன்று திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீ மாணிக்க விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, ஐயாயிரம் பிரதிகள் இலவசமாக வழங்கினேன். அதனால் எனக்கிருந்த பல விதமான கஷ்டங்கள் நிவர்த்தி ஆயின.

''அந்தப் பாடல்களை முறைப்படி பாராயணம் செய்பவர்களுக்கு ஸ்ரீ விநாயகப்பெருமான் அருள் பாலிக்கிருர் என்பது, கண்கண்ட உண்மை. தாங்கள் 'அருள்' மூலம் செய்து வரும் தொண்டு என்றும் குறையாது வளர்ந்தோங்க, எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் புரிவாராக!''

ஆசிரியரும் வெளியிடுபவரும் T. ராமனுதன் 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ல்லாம் இறைவன் செயல்



ஸகலகலாவாசஸ்பதி கமலாபுரம்
சந்தான கோபாலாச்சார்ய ஸ்வாமிகள்